
வளரும்
தமிழகம்
மச்சர்
ந்சலம்

# வளரும் தமிழகம்

முதலமைச்சர்
எம் பக்தவத்சலம்

தொகுப்பு :
மு நமசிவாயம்

வள்ளுவர் பண்ணை
பிராட்வே - சென்னை-1

V2,11
N64

வெளியீடு 156
முதற்பதிப்பு டிசம்பர் '64
பதிப்புரிமை பெற்றது.

விலை ரூபாய் 3-00

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,
சென்னை-2.

108746

## முன்னுரை

செல்வச் செழிப்பும் எல்லாச் சிறப்புக்களும் கொண்ட நமது நாட்டின் முன்னேற்றம் இடைக் காலத்தில் தடைப்பட்டுக் கிடந்தது. நாட்டின் விடு தலையாலும் மக்களாட்சியின் மாண்பினாலும் அத் தேக்கம் உடைக்கப்பட்டு எல்லாத் துறைகளிலும் இன்று வேகமான வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. நூற்றைம்பது ஆண்டுக்கால வளர்ச்சிக் குறைவை சில ஆண்டுகளில் நிறைவு செய்யக் கூடிய அளவில் முன்னேற்ற வேகம் அமைந்துள்ளது.

புதிய பாசனத் திட்டங்களின் விளைவாக சுமார் ஆறரை லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெற்றுள்ளன. மாநிலத்தின் பாசன ஆதாரத் தில் சுமார் 90 சதவிகிதம் வரை பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதில் தமிழகம் இந்தியாவிலேயே முதன் மையாக இருக்கிறது. உணவு உற்பத்தி சுமார் 45 சதவிகிதம் உயர்ந்துள்ளது. உற்பத்தியை மேலும் பெருக்குவதற்காக உர வசதி, பொறுக்கு விதைகள், கடன் உதவி முதலியன தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் வளத்தைப் பெருக்க கால் நடை நலம், மீன் வளம் ஆகியவைகளிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு முன்னேற்றம் காணப்பட்டு வருகின்றது.

வெறிச்சோடிக் கிடந்த தரிசு நிலங்களில் கம்பீர மான தொழிற்சாலைக் கட்டடங்களை இன்று நாம் பார்க்கிறோம். மகாராஷ்டிரம், வங்காளம் ஆகியவற் றுடன் ஒப்பிடக்கூடிய தொழில் முன்னேற்றத்தை

தமிழகம் அடைந்து வருகின்றது. நெய்வேலி நிலக் கரியின் உதவியால் இந்த வேகமும் வளர்ச்சியும் மேலும் பெருகும். மாநிலத்தில் இன்று விவசாயத் தொழிலுக்கு வேண்டுமான ஆட்கள் கிடைப்பதில்லை. அந்த அளவுக்கு மற்ற தொழில்களில் வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் இந்த முன்னேற்றமெல்லாம் மேலெழுந்த வாரியாக ஏற்பட்டவை அல்ல. இந்த வளர்ச்சியின் அடிப்படை பலமானது. இந்த வளர்ச்சிக்கான அபி விருத்தித் திட்டங்களில் சகலமான மக்களும் பொறுப் பும் பங்கும் கொண்டு உழைக்கிறார்கள். அபிவிருத்தி உணர்ச்சி இன்று வலுப்பெற்று விட்டது. வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்து வருகிறது. விரும்பிய லட்சியத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை இப்போது உறுதிப் பட்டிருக்கிறது.

அபிவிருத்திப் பணிகளைக் குறித்து நான் அவ்வப்போது வெளியிட்ட விளக்கங்களையும் கருத்துக்களையும் தொகுத்து **'வளரும் தமிழகம்'** என்ற பெயரில் நூல் ஆக்கப்பட்டிருக்கிறது. தொகுப் பாசிரியர் **மு. நமசிவாயம்** அவர்கள், நாடறிந்த பத்தி ரிகை நிருபர். தகவல்களை எல்லாம் நல்ல முறை யில் சேகரித்து கோர்வைப்படுத்திப் பதிப்பித்திருப் பது பற்றி, அவருக்கும் புத்தகத்தை நல்ல முறையில் வெளியிட்டுள்ள **வள்ளுவர் பண்ணைக்கும்** என் நன்றி யைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை
24—12—64

**எம். பக்தவத்ஸலம்**

# பதிப்புரை

தமிழக முதலமைச்சர் திரு.எம். பக்தவத் சலம் அவர்களது அறிவு, ஆற்றல், அனு பவம் ஆகியவற்றின் சிறப்புக்களைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பது வெளிப்படை.

மக்களது அன்பும், ஆதரவும் ஒருங்கே படைத்துள்ள பெருந்தமிழர் திரு. பக்தவத் சலம் அவர்களது அரிய கருத்துக்களைத் தொகுத்து, ''வளரும் தமிழகம்'' என்ற தலைப்பில் வெளியிடுவதில் பூரிப்பும் பெரு மையும் அடைகிறோம். முதலமைச்சருக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

இந்நூலினை நல்ல முறையில் தொகுத்து, வெளியிட உதவிய திரு. மு. நமசிவாயம் அவர்களுக்கு எமது நன்றி.

**ந. பழநியப்பன்,**
வள்ளுவர் பண்ணை.

# தொகுப்புரை

பொதுவாழ்வில் பல்லாண்டுகள் ஈடுபட்டுப் பண்பட்டவர் நமது முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள். பல்வேறு சமயங்களில், பலதரப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிய அவரது தெளிந்த கருத்துக்களைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட விரும்பிக் கேட்டேன். உடன் அனுமதி தந்தார். அதன் விளைவே இந்நூல். அவருக்கு எனது உளங் கனிந்த நன்றி.

"வளரும் தமிழகம்" என்ற இத்தொகுப்பில், பல்வேறு துறைகளிலும் தமிழகம் அடைந்துவரும் முன்னேற்றத்தையும், மேலும் வளப்படுத்த மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றிய விளக்கங்களும் இடம் பெற்றுள்ளன.

நல்ல முறையில் இந் நூலை வெளியிடும் எனது நண்பர் திரு. ந. பழநியப்பன் அவர்கட்கு எனது நன்றி.

மு. நமசிவாயம்,
தொகுப்பாளர்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பொறுப்புப் பங்கீடு | ... | 2 |
| 2. | உற்பத்தி இலக்கு | ... | 13 |
| 3. | நீர்ப்பாசன வசதி | ... | 20 |
| 4. | ரசாயன உரம் | ... | 25 |
| 5. | உள்ளூர் உரம் | ... | 39 |
| 6. | விதை வகைகள் | ... | 38 |
| 7. | பயிர்ப் பாதுகாப்பு | ... | 43 |
| 8. | வளம் பெருக | ... | 48 |
| 9. | அளவான குடும்பம் | ... | 53 |
| 10. | குடும்பக் கடமை | ... | 60 |
| 11. | விளக்கப்பணி | ... | 63 |
| 12. | புதிய வரலாறு | ... | 70 |
| 13. | காட்டுச் செல்வம் | ... | 78 |
| 14. | வருமான அதிகரிப்பு | ... | 89 |
| 15. | நடைமுறை வேலைகள் | ... | 96 |
| 16. | காட்டில் விவசாயம் | ... | 102 |
| 17. | கண்காணிப்பில் கவனம் | ... | 107 |
| 18. | மீன்வளம் பெருக | ... | 113 |
| 19. | கால்நடைப் பாதுகாப்பு | ... | 123 |
| 20. | மாறுபட்ட மதிப்பு | ... | 131 |
| 21. | வாங்கும் சக்தி | ... | 142 |
| 22. | முன்னேற்ற நம்பிக்கை | ... | 149 |
| 23. | கண்ணில் கோளாறு | ... | 160 |
| 24. | வளரும் தமிழகம் | ... | 174 |

## முதலமைச்சரின் பிற நூல்கள்

ஜனநாயகமும் மந்திரி சபையும்

தமிழை வளர்ப்போம் வாரீர்

குடியரசும் மக்களும்

பாரதப் பண்பாடு

சமுதாய வளர்ச்சி.

தேசிய கவுரவம்

# வளரும் தமிழகம்

## 1. பொறுப்புப் பங்கீடு

பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தங்கள் தங்கள் வட்டாரத்தின் உள்ளூர்த் தேவைகளைக் கவனித்து, அவற்றிற்கு ஏற்ற திட்டங்களை வகுத்து, காரியங்களைச் செய்வதோடு நாடு பூராவிலும் பொதுவாக நடைபெறும் பணிகளிலும் பங்கு கொள்ள வேண்டும் என்பதுதான் கிராமக் குடியரசு எனப்படும் அந்த அமைப்புக்களை ஏற்படுத்தியதன் நோக்கமாகும்.

உதாரணமாக விவசாய அபிவிருத்தி, உணவு உற்பத்திப் பெருக்கம், குடும்பக்கட்டுப்பாடு முதலியவை நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள மாபெரும் முயற்சிகளாகும். இவற்றில் பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் தங்கள் அளவில் தீவிர பங்கு கொள்வது அவசியம். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரசாங்கம், தான் செய்யக் கூடிய உதவிகளையும் ஒத்துழைப்பையும் அளித்து வருகிறது.

### இரண்டு விஷயங்கள்

நிலங்களைப் பயிரிடுதல் அரசாங்கச் சிப்பந்திகளால் நடைபெறுவதில்லை. சிறு சிறு அளவில் விவ

சாயம் புரிகின்ற லட்சக்கணக்கான விவசாயிகள் இந்தப் பணியினைச் செய்கிறார்கள். ஆனால் அரசாங்கம் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது.

முதலாவதாக, தனக்குத் தானே வசதி செய்து கொள்ள முடியாத ஒவ்வொரு சிறு விவசாயிக்கும் வேண்டிய அதிகப்படியான வசதிகளை அவன் அடையும்படிச் செய்யவேண்டும். இரண்டாவது, பரம்பரை பரம்பரையாகக் கையாண்டு வருகின்ற பழைய முறைகளில் மட்டும் கவனம் செலுத்தாமல், கிடைக்கின்ற எல்லாப் புதிய வசதிகளையும், முறைகளையும் விவசாயிகள் முழுமையாகப் பயன் படுத்தும்படிச் செய்ய வேண்டும்.

நமது மாநிலம் பூராவுமாக, அதிகப்படியான உணவு உற்பத்தி என்ற இலட்சியமானது நிறைவேற ஒவ்வொரு விவசாயியும் இன்னும் அதிகப்படியான முயற்சிகளைச் செய்கின்ற நிலையை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களை அதற்கு இணங்கச் செய்ய வேண்டும்.

## பொறுப்புப் பங்கீடு

இதுவரையில், முதல் இரண்டுத் திட்டக்காலத்தில், இந்த வேலைகள் நேரடியாக அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசாங்கத் துறைச் சிப்பந்திகளினால் செய்யப்பட்டு வந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில், இதற்கான முயற்சிகள் மிகவும் தீவிரப் படுத்தப்பட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ள பொழுது, அரசாங்கமே தனியாக, உதவியின்றி செய்ய இயலாத அளவுக்கு, இந்த வேலைகள் அவ்வளவு அதிகமாகப் பெருகியுள்ளன.



ஆகவேதான், தமிழ் நாட்டில் 1962 அக்டோபர் மாதம் முதல் புதிதாக உள்ளாட்சிப் பொறுப்புக்களை ஏற்றுள்ள பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இந்தப் பொறுப்பில் ஒரு பங்கினை ஏற்றுக் கொண்டு, அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு உள்ள சுமையினைக் குறைக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மேற் சொன்ன இரண்டு வேலைகளில் ஒன்றான, அதாவது, தேவைப்படுகின்ற அதிக அளவு முயற்சியினை செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை கூறி, அவர்களை இணங்கச் செய்கின்ற வேலை முழுவதும், பஞ்சாயத்துக்களாலும், பஞ்சாயத்து யூனியன்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும். விவசாயிகளுக்கு அதிகப்படியான வசதிகள் அளித்தல் என்ற இன்னொரு வேலை சம்பந்தப்பட்ட மட்டில், இந்த வேலை பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ளது; அரசாங்கம் சில வசதிகளை அளிக்கின்ற வேலையைத் தொடர்ந்து செய்யும். உள்ளாட்சி அதிகாரம் பெற்ற புதிய அமைப்புக்கள் மற்ற வசதிகளை அளிக்கின்ற வேலையைச் செய்யும்.

## தெளிவும் பயனும்

இப்படிப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டு, எப்படி இவற்றைச் சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைகள் நடை முறையில் அமுலுக்குக் கொண்டுவருவது என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் விளக்கமாகக் குறிப்பிட்டு அரசாங்க ஆணைகள் பல பிறப்பிக்கப் பட்டுள்ளன. தங்களுடைய புதிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் புதிய உள்ளாட்சி அதிகாரம் பெற்றுள்ள ஸ்தாபனங்களுக்கு உதவி புரியவேண்டி, தேவைப்படுகிற சிப்பந்திகளின் சேவை, அவைகளுக்கு

ஒதுக்கப்பட்டு, அளிக்கப்பட்டு வருகின்றது. மாநிலத் திட்டத்தில் இதற்கான போதிய நிதிகளும் ஒதுக்கப் பட்டுள்ளன.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்களாகவும் இயங்குகின்ற எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இந்தப் புதிய பொறுப்புக்களை எந்த அளவுக்கு தெளிவாகப் புரிந்து கொள்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான், இந்த நடவடிக்கைகள் எல்லாம் பயன் அளிக்கும்.

## 2. உற்பத்தி இலக்கு

**வி**வசாய அபிவிருத்தியில் நாம் மனப்பூர்வமான தீவிரமான அக்கறை எடுத்துக் கொண்டால் தவிர, நாம் முன்னேற்றம் காண முடியாது. ஏனெனில், நம் மாநிலத்தில் விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களின் பரப்பு குறைவு. அதாவது இங்குள்ள மக்கள் தொகையை வைத்துப் பார்க்கும்போது, போதுமான நிலம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

### மொத்த நிலப்பரப்பு

தற்போதைய அளவில், தமிழ் நாட்டின் நிலப் பரப்பளவு 320 லட்சம் ஏக்கர்களாகும். பார்ப்பதற்கு, இது ஒரு பெரிய நிலப்பரப்பாகத் தோன்றுகிறது. ஆனால், இந்த மாநிலத்தில் 350 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்த மக்கள் தொகையானது, ஆண்டொன்றுக்கு 4 லட்சம் என்ற விகிதத்தில் அதிகமாகிக்கொண்டே போகிறது. நமது மாநிலத்தில் நபர் ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கும் குறைந்த—அதாவது 95 செண்டு—அளவுள்ள நிலப்பரப்பு என்ற விகிதம் அமைந்துள்ளது. மேலும், மக்கள் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக, இந்த விகிதாசரம் குறைந்து கொண்டே போகும்.

## விவசாய நிலப்பரப்பு

தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள 320 லட்சம் ஏக்கர் என்பது மொத்தம் உள்ள நிலப்பரப்பின் அளவு—விவசாய நிலங்களின் பரப்பு அல்ல. இந்த மொத்த நிலப்பரப்பில், 31 லட்சம் ஏக்கர் நில அளவு கிராம அமைப்புக்கள், நகர அமைப்புக்கள், சாலைகள், ஆறுகள், வாய்க்கால்கள், குளங்கள் முதலியவை களாகப் பயன்படுகின்றன. 60 லட்சம் ஏக்கர்களை, காடுகள், புதர்கள், மேய்ச்சல் இடங்கள் ஆட் கொண்டு விடுகின்றன. இவை தவிர, 25 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு விவசாயத்திற்குப் பயன்படாத கற்பாறைகளாக உள்ளன. இதுவெல்லாம் போக, 204 லட்சம் ஏக்கர் நிலப்பரப்புத்தான் விவசாயம் செய்யக் கூடிய நிலங்களின் அளவாகும். இதில் ஏற்கனவே விவசாயம் செய்யப்படுகின்ற இடங்கள், விவசாயம் செய்யக் கூடிய இடங்கள் என்ற இரண்டும் இந்த 204 லட்சம் ஏக்கரில் அடங்கும். இதன்படி பார்த்தால், மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு 61 செண்டு நிலப்பரப்புத்தான் விவசாயத்திற்கென்று கிடைக்கிறது.

## கவலை தரும் நிலை

உலகத்தின் மொத்த நிலப்பரப்பு, உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும், தலைக்கு 12 ஏக்கர் என்ற அளவில் கிடைக்கும்படியான அவ்வளவு பெரிதாகும். உலகத்தை மொத்தமாகக் கொண்டு கணக்கிட்டால் கிடைக்கின்ற சராசரி அளவாகும் இது. ரஷ்யாவில் தலைக்கு 30 ஏக்கர்களுக்கும் குறையாத நிலப்பரப்பு என்ற அதிகபட்ச நிலை அமைந்துள்ளது. ஆனால், இந்தியாவிலோ தலைக்கு 2 ஏக்கருக்கும் குறைந்த



அளவுதான் கிடைக்கக்கூடிய குறைந்தபட்ச நிலை உள்ளது.

இந்திய நாட்டில், தலைக்கு ஒரு ஏக்கருக்கும் குறைந்த நிலப்பரப்பு உள்ள மிகவும் நெருக்க மான ஜனப்பகுதி உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. விவசாயத்திற்கு லாயக்கான நிலத்தைப் பொறுத்தவரை, தமிழ் நாட்டில் அத்தகைய நிலம் தலைக்கு 61 செண்டு வீதம் உள்ளது. இந்தியா பூராவிற்கும் இது தலைக்கு 80 செண்டாகும். உலகம் முழுமைக்கும் எடுத்துக்கொண்டால் இது ஒன்றே கால் ஏக்கராக உள்ளது. அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும், இரண்டரை ஏக்கருக்குமேல் உள்ளது.

ஆண்டுதோறும் மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக, நபர் ஒன்றுக்கு, விவசாயத்திற்கு லாயக்கான நிலப்பரப்பின் அளவும் குறைந்து கொண்டே வரு கிறது. இந்த நிலை உலகம் பூராவுக்குமே கவலைத்தரத் தக்க ஒன்ருகும். ஏன், இந்தியாவுக்கும், நமது மாநிலத்திற்கும் விசேஷமாகக் கவலைத்தரத்தக்க நிலையாகும்.

## அதிகப்படியான உபயோகம்

இந்த மாநிலத்தில் உள்ள மொத்தம் 204 லட்சம் ஏக்கர் விவசாயத்திற்கு லாயக்கான நிலப் பரப்பில், 143 லட்சம் ஏக்கர்கள் சீராகப் பயிர் விதைத்து பயிராக்கப்படுகின்ற நிலங்கள்; 25 லட்சம் ஏக்கர்கள், பயிர்களை, விட்டு விட்டு மாற்றி விதைக்க வேண்டி யிருப்பதினால், தரிசாக விடப்பட்டுள்ள நிலப்பரப்பு ஆகிறது. மிச்சமிருக்கின்ற 36 லட்சம் ஏக்கர்களில், 15 லட்சம் 'சக்தியிழந்து விட்ட தரிசு நிலங்கள், 21 லட்சம் "விவசாயக் கழிவு" நிலங்கள். சில இடங்கள்

தவிர, அநேகமாக எல்லா இடங்களிலும், மண்வளம் கொஞ்சம்கூட இல்லாமலும், போதிய மழை பெய்யாத தினுலும், இனிமேல் விவசாயம் செய்ய இயலாத எல்லேயில், அங்குமிங்கும் சிதறிக்கிடக்கிற துண்டு துண்டு நிலங்களாக இந்த 36 லட்சம் ஏக்கர்கள் உள்ளன. நீர்ப்பாசன வசதிகளேச் செய்து தந்தால் ஒழிய, இனிமேல் விவசாயம் செய்தால், அவைகளிட மிருந்து பயன் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற் கில்லே. இந்த மாநிலத்தில் விவசாயம் செய்வதற் கான நிலத்தை மிகவும் அதிகப்படியாகவே உபயோ கப் படுத்தியாகிவிட்டது.

விதைகள் விதைக்கப்படுன்ற 143 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், 28 லட்சம் ஏக்கரில் பல தடவை களில் விதைத்து பயிரிட்டாகி விட்டது. ஆகவே, இப்பொழுது 171 லட்சம் ஏக்கர் பரப்புதான் பயிர்கள் விளேகின்ற நிலங்களாக உள்ளன. இதில் 120 லட்சம் ஏக்கர்கள் உணவு தானியப் பயிர்கள் விளேவது; 51 லட்சம் ஏக்கர்கள் உணவு தானியமல்லாத மற்றப்பயிர்கள் விளேவது. உணவு தானியப் பயிர்களில், மிகவும் அதிகமாகப் பயிரிடப்படுகின்ற ஒரே பயிர் நெல்தான். 56 லட்சம் ஏக்கர்களில் நெல் மட்டும் பயிரிடப்படு கிறது.

### நபர் விகிதம்

மறுபடியும் விளக்கிக்கூற வேண்டுமானுல், நபர் ஒன்றுக்கு கிடைக்கின்ற நிலப்பரப்பு என்ற கணக்கில், தமிழ்நாட்டில் தலா 42 செண்டு அளவுள்ள 337 லட்சம் சிறு துண்டாக உள்ள நிலங்களில் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்லலாம். இந்த 42 செண்டுகளில், 8 செண்டு அளவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு பயிருக்குமேல் உற்பத்தி செய்யப்படு



கின்றது. ஆகவே, மாநிலத்தில் உள்ள ஆண், பெண், குழந்தை ஒவ்வொருவருக்கும் பயிர் விவசாயம் செய்யப்படுகின்ற நிலம் 50 செண்டு என்ற அளவு வருகிறது.

இந்த 50 செண்டுகளில், 17 செண்டுகளில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. 18 செண்டுகளில் சோளம், ராகி, கம்பு, வரகு போன்ற நிலேயான உணவுத் தானியங்களும், மற்றும் பலவகைப் பருப்பு, தானிய வகைகளும் பயிராக்கப் படுகின்றன. மிச்ச மிருக்கிற 15 செண்டுகளில், காய்கறிகள், பழச் செடிகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பலவிதப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. மனிதனின் உணவுக்காகவோ, கால்நடைத் தீவனங்களுக்கோ தேவைப் படுகின்றவைதான் இவை எல்லாம். இந்த 15 செண்டுகளிலேயே, ஒரு சிறு அளவில், பருத்தி பயிரிடப்படுகிறது.

### திட்டக்கால முயற்சி

நிலம் போதிய அளவுக்கு இல்லாமல் இருந்து, மக்கள் தொகைப் பெருக்கத்தினுல் ஏற்படுகின்ற அவதியை, நாடு சுதந்திரம் பெற்ற சிலவருடங்களில் உண்டான உணவுப் பற்றுக் குறையினுல் ஏற்பட்ட மிகவும் நெருக்கடியான நிலேயிலிருந்து தெளிவாக அறிய முடிந்தது. அதே அளவுள்ள நிலப்பரப்பில், மேலும் மேலும் அதிகமாக உணவினே உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளேக் கடைப்பிடிக்க வேண்டிய நிலேக்கு நாடு தள்ளப்பட்டது. இதைச் சமாளிக்க, உணவு உற்பத்திக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு முன்பாகவே எடுக்கப்பட்ட முயற் சிகள், முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கவனத்துடனும் நிலேயாகவும் கடைப்

பிடிக்கப்பட்டு வந்ததுடன், அதைத் துரிதப்படுத்துவ தற்கான வகைகளும் கடைப்பிடிக்கப் பட்டன.

## தேவைப் பெருக்கம்

இந்த முயற்சிகளினுல்தான், பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் உணவு விஷயத்தில் நிலவிய நெருக்கடியான நிலைமை, குறிப்பிடத்தக்க அளவில் நீங்கி, பெருவாரியான அளவில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. உணவுத் தானியங்கள் கடைகளில் தாராளமாக கிடைக்கின்றன. ஆனுல், விலைவாசியும் ஏறியிருக்கிறது. இதற்கு ஒரு காரணம் மக்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. மேலும், மக்கள் சத்துள்ள உணவையும், உணவு வகைகளில் தரமான வகைகளையும் உபயோகிக்கத் தொடங்கி விட்டார்கள்.

அதிக உணவு மட்டுமல்ல; நல்ல, தரமான உணவு, பல்வேறுபட்ட வகையான உணவு வேண்டி யுள்ளது. மற்ற உணவுத் தானியங்களைவிட அரிசி யின் தேவை மிகவும் வேகமாக அதிகமாகிக் கொண்டே போகிறது. பழங்கள், காய்கறிகள், எண்ணெய், சர்க்கரை, பால் போன்றவைகளின் தேவைகளும் இன்னும் அதிக வேகத்தில் பெருகிக்கொண்டே போகின்றன,

எனவே, எல்லா உணவுப் பயிர்கள், மற்றும் எல்லாத் தீவனத்திற்கான பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. அதுமட்டுமல்ல; பருத்தி விளைவிப்பதை விலக்கி விட்டு, அந்த இடத்தில் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதைத் தீவிரப் படுத்தவும் முடியாது. ஏன் என்ருல், இன்னும் அதிக மான பருத்தியும் தேவையாக இருக்கிறது.



## உற்பத்தி இலக்கு

இதனுல்தான், மாநிலத்தின் மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டமானது, மற்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் இருந்ததைவிட, மேலும் மேலும் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற முயற்சிகளை கொண்டிருக்கிறது. இதில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் உள்ளன. விவசாயம் செய்யப் படுகின்ற அதே அளவுள்ள நிலங்களிலேயே, மேலும் மேலும் அதிகப்படியான உணவு உற்பத்தியைப் பெறுவதற்கான முயற்சியை வெற்றியுடன் நிறை வேற்ற, இந்த வேலைத் திட்டங்களில் ஒவ்வொன்றும் தன்னுடைய பங்கினைச் செய்தாகவேண்டும்.

இந்த எல்லாத் திட்டங்களின் மொத்த விளைவாக (எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி போன்ற) மற்ற முக்கியமான பயிர்களுடன், ஆண்டொன்றின் நிலையான உணவுத் தானியங்களின் உற்பத்தியை 33 சதவிகித அளவுக்குப் பெருக்குவது என்ற இலக்கினை அடைய எண்ணம் கொண்டுள்ளோம்.

## 3. நீர்ப்பாசன வசதி

உணவு உற்பத்திக்குத் தேவைப்படுகிற வசதிகள் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது நீர்ப்பாசன வசதிகளேயாகும். இந்த மாநிலத்தில் பயிர்கள் விளைவிக்கப்படுகின்ற 143 லட்சம் ஏக்கர் நிலங்களில், 53 லட்சம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ளன.

இந்த 53 லட்சம் ஏக்கர்களில், 40 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு, நீர்ப்பாசன வசதிகள் அரசாங்கத்தினரால் பராமரிக்கப்படுகிற வாய்க்கால்கள், குளங்களிலிருந்து கிடைக்கின்றன. மற்ற 13 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு, விவசாயிகளுக்கே சொந்தமாக உள்ளதும் அவர்களாலேயே பராமரிக்கப்பட்டு வருவதுமான கிணறுகளிலிருந்து அநேகமாக நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. முன்பே குறிப்பிட்ட மாதிரி, ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு பயிருக்கு மேல் பயிரிடப்படுகின்ற நிலம் 28 லட்சம் ஏக்கர்களாகும். இந்த 28 லட்சத்தில், 20 லட்சம் ஏக்கர் நிலங்களில் நீர்ப்பாசன வசதிகள் கிடைப்பதனுல்தான், ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்களைப் பயிரிட முடிகிறது.

### அரசாங்க நடவடிக்கை

நீர்ப்பாசன வசதிகளைமென்மேலும் அதிகப்படுத்த, அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்



கொண்டு வருகிறது. அரசாங்க இலாக்காக்கள் செய்கின்ற பொது வேலைகள் ஒரு பகுதியாகவும், விவசாயிகளே அமைத்துக்கொள்கின்ற தனியாக உள்ள வேலைகள் ஒரு பகுதியாகவும், அரசாங்கத்தின் ஏற்பாடுகள் அமைந்துள்ளன. தனிப்பட்டவர்களுக்கு இதற்காகக் கடன்களும், பண உதவித் தொகைகளும் அரசாங்கத்தால் அளிக்கப்படுகின்றன.

மூன்ருவது திட்டத்திற்கு முந்திய பத்தாண்டுகளில், இந்தத் துறையில், ஒரு நிலையான முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் செய்யப்படுகின்றன.

மாநிலத்தின் எல்லாப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் ஆகியவற்றின் பயனுகக் கண்டுள்ள அதிகமான உணவு உற்பத்தியின் அளவு, முதல் திட்ட வேலைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு சுமார் மூன்று லட்சம் டன் என்றும் இரண்டாவது திட்ட வேலைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு சுமார் இரண்டேகால் லட்சம் டன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்ருவது திட்டக்காலத்தில் இந்த அதிகப்படியுள்ள அளவானது, ஆண்டொன்றுக்கு 3 லட்சம் டன்னுக இருக்கும் வகையில் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மூன்ருவது திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள 33 சதவிகித மொத்த உணவு அதிகரிப்பு அளவில் இந்த நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள் எட்டு சதவிகித அளவினுக்கு வழி செய்யும்.

இந்த வேலைத் திட்டங்களைச் செயல்படுத்த, அரசாங்கமே தொடர்ந்து நேரடிப் பொறுப்பேற்றுக்

கொண்டு, அரசாங்கத் துறையின் சிப்பந்திகளினுல் இந்தப் பணியானது நிறைவேற்றப்படுகின்றது.

**பஞ்சாயத்தின் பங்கு**

இவையன்றி நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகளில் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் பங்கேற்கும்படி அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகிற நீர்ப்பாசனப் பொது வேலைகளில், 200 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நில அளவுக்குச் செய்யப்படுகிற நீர்ப்பாசன வேலைகள், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. விட்டுப்போகாமல், தொடர்ந்து திறமையுடன் இந்த நீர்ப்பாசன வேலைகளைப் பராமரித்து வருதல் பஞ்சாயத்து யூனியன்களின் கடமையாகும்.

**குடிமராமத்தில் கவனம்**

அரசாங்க இலாக்காக்களினுல் பாதுகாக்கப்படாமலும், தனிப்பட்ட முறையில் சொந்தமாக இல்லாமலும் ஏராளமான நீர்ப்பாசன வேலைகள் உள்ளன. அவை சாதாரணமாக நீரினைக்கொண்டு வந்து வழங்குகின்ற, கால்வாய்களும், ஓடைகளுமாகும். தண்ணீர் ஓட்டத்தைத் தேக்கிவிடும்படி தூர் பிடிக்காமல் அவைகள் நல்ல நிலையில் இருக்க, வருடா வருடம் சுத்தப்படுத்தப்பட்டு சீரிய முறையில் அவை பராமரிக்கப்படவேண்டும்.

பழங்காலத்தில் இந்த வேலை விவசாயிகளின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியாக இருந்து வந்தது. இதைத்தான் இந்த மாநிலத்தில் 'குடி மராமத்து'



என்ற பெயரால் அழைக்கிறோம். சமீப காலமாக, இந்தக் கூட்டு முயற்சி வேலையில் அக்கறையும், ஆர்வமும் குறைந்து கொண்டே வந்துவிட்டது. அதன் விளைவாக, இந்த வேலை புறக்கணிக்கப்பட்டு, பின்தங்கி விட்டது. குடிமராமத்துக் கால்வாய்களை பழைய நிலைமைக்கு கொண்டு வந்து, மறுபடியும் ஆண்டு தோறும் தூர் இல்லாமல் சுத்தப்படுத்தும் வேலையைத் தொடங்கிச் செய்வது, இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியனின் தலையாய கடமையாகும். இப்பொழுதே பல மாவட்டங்களில் இந்தத் துறையில் காரிய ரீதியான வேலைகள் தொடங்கி விட்டன. இந்த வேலை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு, நிரந்தரமாகத் தொடர்ந்து செய்யப்பட வேண்டும்.

திட்டங்களில் செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசன வசதிகளில் தங்களுடைய பங்கினை, தங்களுடைய பொறுப்பினில் உள்ள பிரதேசங்கள் அடையும்படியான வகையில் நடவடிக்கை எடுக்க, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், இயற்கையாகவே அக்கறை கொண்டிருக்கும். இந்தத் திட்டங்கள் சம்பந்தமான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க, அவை பற்றி ஆலோசனைகளும் அறிவுரைகளும் சொல்ல, இந்த ஸ்தாபனங்களுக்கு முழு உரிமை உண்டு.

**துளிகூட வீணுகாமல்.....**

மற்ற சில மாநிலங்களில் இருப்பது போல், நீர்ப்பாசன வசதிகளின் அவசியத்தை உணராமல், விவசாயிகள் ஆர்வம் காட்டாமல் இருக்கின்ற ஒரு நிலை, நம் மாநிலத்தில் கிடையாது. வழங்கப்படுகிற நீர் சேதமில்லாமலும், திறமையுடனும் உடனுக்குடன்

பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்படும் என்ற முழு நம்பிக்கையுடன், நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்பெறலாம். அத்துடன், எதிலும் சேராமல் தனித்து நிற்கிற நிலைகள் சில இருக்கலாம். பிரதேசங்களில் உள்ள சில சிக்கல்களினால், இந்த வசதிகளை உபயோகப்படுத்துவதில் கொஞ்சம் காலதாமதம் எங்கோ ஓரிடத்தில் ஏற்படலாம். கிடைக்கின்ற நீரை மிகவும் சிக்கனமாகவும், கண்காணிப்புடனும் உபயோகப்படுத்தி, அதனால் அதிக உற்பத்தியைக் காண்பதற்கான வசதிகளும் சில இடங்களில் இருக்கலாம்.

இப்படிப்பட்ட அம்சங்களையெல்லாம் கூர்ந்து கவனித்து, அந்தந்தப் பிரதேசங்களில் நிலவுகிற சிக்கல்கள் களையப்பட்டு, பாசனத்திற்குக் கிடைக்கின்ற நீரை துளிகூட வீணாக்காமல் உபயோகப் படுத்தி, எவ்வளவு அதிகமாகப் பயனைப் பெற முடியுமோ, அந்த அளவு பயன் பெறுகின்ற வகையில் செயலாற்ற வேண்டியது பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

## 4. ரசாயன உரம்

விவசாய முறைகளில் நவீனமான அம்சங்களைப் புகுத்துவது என்ற துறையில், இந்த மாநிலத்தில், ஒரு வேகமான மாற்றம் நிச்சயமாக ஏற்பட்டுக் கொண்டுவருகிறது. ரசாயன உரங்களை உபயோகித்தல் என்ற வழக்கம் வெகுவேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது.

### ஆரம்பத்தில் பட்ட சிரமம்

இருபது வருடங்களுக்கு முன்னால், ரசாயன உரம் என்றால், அநேகமாக விவசாயிகளுக்கு அது என்னவென்றே தெரியாது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால், ரசாயன உரங்களை உபயோகிக்கின்ற முறையினை விவசாயிகள் கவனத்திற்குக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தது. இதற்காக எவ்வளவோ சிரமப்பட வேண்டிவந்தது.

பொறுமையாகவும், நிதானமாகவும் விவசாயிகளுக்கு இந்த முறையைப்பற்றிச் சொல்லி அவர்களை அதற்கிணங்கவைக்க வேண்டியிருந்தது. அத்துடன், அரை விலையில் இந்த ரசாயன உரங்களை அளித்து, ஊக்கத்தை ஊட்ட வேண்டியிருந்தது. இந்த முறையில் அம்மோனியம் சல்பேட்டை உபயோகிக்கின்ற வழக்கத்தை, முதல் திட்டம் தொடங்குவதற்கு முன்பு,

ஆண்டொன்றுக்கு 30,000 டன் அளவு உபயோகப் படுத்தப்படுகிறது. என்ற அளவினை எட்டுகின்ற வரையில் பரப்பவும், போற்றிக் கண்காணிக்கவும் வேண்டியிருந்தது.

## முற்போக்கு எண்ணம்

முதல் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், மாநிலத் தில் அநேகமாக எல்லா வட்டாரங்களிலும் உள்ள முற்போக்கு எண்ணம் படைத்த விவசாயிகள் இந்த விஷயத்தில் போதிய அனுபவம் பெற்று, அம் மோனியம் சல்பேட்டினை உபயோகப்படுத்துவது நல்லது, லாபகரமானதும் கூட என்பதைத் தெரிந்து, அப்படி உபயோகப்படுத்தி நெல் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்கின்ற நிலை வந்து விட்டது.

மாநிலத்தில்உபயோகிக்கப்பட்டு வந்த அம்மோனி யம் சல்பேட்டின் அளவு வருடா வருடம் வெகு வேக மாக அதிகரித்துக்கொண்டே வந்தது. இரண்டாவது திட்டத்தின் முதல் ஆண்டில், மாநிலத்தில் உபயோகப் படுத்தப்பட்ட அம்மோனியம் சல்பேட்டின் அளவு 120 ஆயிரம் டன்களுக்கு மேற்பட்டதாகும். அதாவது, முதல் திட்ட ஆரம்பத்திற்கு முற்பட்ட ஆண்டில் உபயோகப்படுத்தப்பட்ட அளவைவிட இது நான்கு மடங்கு அதிகமாகும்.

## வேகத்தைப் பாதுகாக்கும் சங்கடம்

இப்படி ஊக்குவிக்கப்பட்ட முன்னேற்றத்தின் வேகத்தினை இரண்டாவது திட்டத்தின் அடுத்து வந்த ஆண்டுகளில் அதே வேகத்தில் வைத்துப்பாதுகாக்க முடியாமல் போய்விட்டது துர்ப்பாக்கியமானதாகும். இது விவசாயிகளின் குற்றமல்ல. அவர்கள் இன்னும் அதிகமாக ரசாயன உரம் வேண்டும் என்ற உரத்தக்



குரலினைத் தொடர்ந்து எழுப்பிக்கொண்டேதானிருந் தார்கள். ஆனால், இதை ஒதுக்கி வழங்குகின்ற மத்திய அரசாங்கத்தினால் அப்படிச்செய்ய இயலாமல் போய் விட்டது.

சென்னை மாநிலத்தில் அம்மோனியம் சல்பேட்டின் உபயோகம் அதிகமாகப் பெருகிய கதையைப்போல், மற்ற மாநிலமெங்கணும் அதேமாதிரி ஒரு நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். முதல் திட்டக்காலத்தில் தமிழ் நாட்டில் அடைந்துள்ள முன்னேற்றத்தை இரண்டாவது திட்டக் காலத்தில் அடைந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் மற்ற மாநிலங்களும் இந்த முறையைப் பிடித்துக்கொண்டு, அதன்படி செயலாற்றத் தொடங்கி விட்டன.

உரஉபயோகம், நாடு பூராவிற்குமாக இரண்டாம் திட்டக்காலத்தில் மும்மடங்காகப் பெருகிய போதிலும், கிடைக்கின்ற அளவில், தமிழ் நாட்டிற்கு போதிய அளவுக்கு அதிகரிக்கப்படவில்லை. உண்மை யில் இது அதிகப்படாதது மட்டுமல்ல; ஒரு சந்தர்ப் பத்தில், இருந்ததற்கும் சற்று குறைந்தே கூட இருந்தது. அம்மோனியம் சல்பேட்டுடன், முதலில் அவ்வளவு வழக்கத்தில் இல்லாத நைட்ரஜன் சத்துள்ள உர வகைகளை வழக்கத்தில் கொண்டு வரவேண்டியதும் அவசியமாயிற்று.

## அனுபவத்தின் விளைவு

இதனால் ஏற்பட்ட அனுபவத்தின் விளைவினால், இந்திய அரசாங்கம், மூன்ருவது திட்டக்காலத்தில் நைட்ரஜன் சத்துள்ள உரத்தினை உற்பத்தி செய்வதில் வேகமான முன்னேற்றத்திற்கான ஒரு வேலைத் திட் டத்தைச் செயல் படுத்த முடிவு செய்தது. இதற்கான

தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. தேசியத் திட்டத்தில் கண்டுள்ள இலக்கின் அளவு அடையப் பெற்ருல், மூன்ருவது திட்ட இறுதியில் ஆண்டுக்கு உபயோகப்படுத்தும் அளவு, நைட்ரஜன் சத்துள்ள உரங்களைப் பொறுத்தவரையில், முதல் திட்ட ஆரம்பக்காலத்திலிருந்ததைவிட, ஐந்தரை மடங்கு அதிகமாக இருக்கும். பாஸ்பேட் உரங்களைப் பொறுத்த வரையில், இது மேலும் அதிகமாக இருக்கும்.

## கூடுதல் உற்பத்தி

ஆனல் நடைமுறையில் நைட்ரஜன் உரங்களுக்கு அவ்வளவு வரவேற்பில்லை. ஆகையால் இந்த உரங்களின் விலையைக் குறைத்து, விவசாயிகள் அதிகமாக உபயோகிக்கும்படி இப்போது செய்யப்பட்டு வருகிறது.

மூன்ருவது திட்டக்கால முடிவிலாவது, இந்திய அரசாங்கம் இந்த மாநிலத்தின் விவசாயிகளின் தேவைக்கும், அவர்கள் உபயோகிக்க லாயக்குள்ளவைகளை இந்த மாநிலத்திற்கு வழங்கக்கூடிய நிலையில் இருக்கும் என்ற நம்பிக்கையின் பேரில், தமிழ்நாடு அரசாங்கமும் தன்னுடைய மூன்ருவது திட்டத்தில் ஒரு பெரிய இலக்களவினை வரையறுத்துள்ளது. எல்லாம் நினைப்பதுபோல் நடந்து, செயற்கை உரங்களை வழங்குதல் காலாகாலத்தில் துரிதப்படுத்தப் பட்டால், சென்னை மாநிலம், இந்த வகைகளினுல் மட்டும், 12.5 சத விகித அளவுக்கு, மேலும் கூடுதலான உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற ஒரு நிலையை அடைந்துவிடும்.



## விநியோகப் பொறுப்பு

ரசாயன உரங்கள் வழங்குகின்ற வேலை, பஞ்சாயத்துக்களின், பஞ்சாயத்து யூனியன்களின் கையில் இல்லை. மாநில அரசாங்கத்தின் கையில்கூட இந்த அதிகாரம் இல்லை. இந்தியா பூராவுக்கும், மத்திய அரசாங்கம்தான் இந்த ரசாயன உரங்களைத் துரிதப் படுத்தி, தமிழ் நாட்டிற்குப் போதிய அளவு ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கிடைக்கின்ற உரத்தை, நேர்மையான அளவின் அடிப்படையில் பிரித்து விநியோகம் செய்வதும், இந்த உரத்தை உபயோகிக்க யார் தயாராகவும் உடன்பாடாகவும் இருக்கிருர்களோ, அந்த விவசாயிகளுக்கு நியாயமான அளவில் மேலும் பகிர்ந்தளிக்கப்படும்படி பார்த்துக்கொள்வதும், மாநில அரசாங்கத்தின் கடமையாகும்.

திட்டமிட்ட முறையில் விநியோகம் செய்கின்ற வேலையின் பகுதியாக, யாருக்குக் கடனில் வாங்குகின்ற நிலை உள்ளதோ, அந்த விவசாயிகள் இவற்றைக் கடனில் பெற்றுக்கொள்கின்ற முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியதும் அவசியமாகிறது. இவைகளை ஒழுங்கான முறையில் விநியோகம் செய்கின்ற வேலைகளையும், கடன்கள் அளிக்கின்ற வேலையினையும் ஏற்று நடத்துகின்ற அமைப்புக்களாகக் கூட்டுறவு ஸ்தாபனங்களை உபயோகப் படுத்திக் கொள்கின்ற முறைக்கு சமீப ஆண்டுகளில் அரசாங்கம் தன் போக்கினை மாற்றிக்கொண்டுள்ளது.

தேவைக்கேற்ப சப்ளை இல்லாமல் உரம்வழங்குதல் மிகவும் அதிகமாகக் குறைந்தும், உரம்வந்து சேருவது ஒரு நிச்சயமற்ற நிலையில் இருக்கும்பொழுது, விநியோக முறையில் சில கடுமையான பிரச்சினைகளும்,

சிரமங்களும் ஏற்படுகின்றன. அதனுல் பல குற்றச் சாட்டுகள் ஏற்படவும் காரணமாகின்றன. பெறுகின்ற சிறிதளவு அநுபவத்தை வைத்துக்கொண்டு, விநி யோகமுறையில் அவ்வப்போது விடாமல் சீரமைப்பு முறைகள் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

**உபயோகமான கடமைகள்**

ரசாயன உர விநியோகப் பொறுப்பை அரசாங்கம் தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருந்தாலும், பஞ்சாயத் துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இந்தத் துறையில், உபயோகமான சில கடமைகளைப் புரிய வேண்டும்.

விநியோக முறையில் ஒரு சீரான நிலையை ஏற்படுத்துவதில் பஞ்சாயத்து யூனியன்களும் அக் கறை எடுத்துக்கொள்ளும்படி செய்யப்பட்டு, அவை களின் வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட உர அளவின் பங்கு எவ்வளவு என்பது அவைகளுக்குத் தெரியப் படுத்தப்படும். உரம் சரியாக வந்து சேர்கிறதா என்று அவை கண்காணிக்கும். வருகின்ற உரங்கள் எங்கெங்கு எடுத்துச் செல்லப்படுகின்றன, என்ன செய்யப்படுகின்றன என்பதையும் கண்காணிக்கலாம். இப்படிச் செய்வதின் மூலம், ஒதுக்கப்பட்ட அளவு உரமானது வட்டாரத்தின் உற்பத்தியின் அபிவிருத் திக்காக உண்மையாக உபயோகப்படுத்தப்படுகிறதா, இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள லாம்.

**அறிவு பரப்பும் வேலை**

விவசாயத் துறையில், விவசாயிகள் இப்போது அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிருர்கள். விவசாயத்தைப்பற்றிய அறிவானது மிகவும் அதிக



மாகவே பரவி உள்ளது. இருந்தாலும், அறிவுரை களுக்கும் விளக்கிச்சொல்லி இணங்க வைத்தலுக்கும் இன்னும் அவசியம் இருக்கிறது. அதுவும் குறிப்பாக, புதிய மாதிரி நைட்ரஜன் சத்துள்ள உரங்களையும், பாஸ்பேட் உரங்களையும் உபயோகப்படுத்துவதில், விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட அறிவுரை கூறி விளக்கி அதற்கு அவர்களை இணங்கச் செய்வதற்கும் அவசியம் இருக்கிறது. இந்த அறிவு பரப்பும் வேலை பஞ்சாயத்து யூனியனின் ஒரு முக்கியமான கடமை யாகும். இந்த வேலை, வளர்ச்சி அலுவலர்கள் மூல மாகச் செய்யப்பட வேண்டும்.

தன்னுடைய பிரதேசத்திற்குள்ளாகவே, இந்த வேலைகளைச் செய்வதில், பஞ்சாயத்து யூனியனுக் கும், வளர்ச்சி அலுவலர்களுக்கும் உதவி புரிய வேண்டியது, ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமை யாகும்.

5.

## உள்ளூர் உரம்

மூன்ருவது திட்ட முடிவில் அடையவேண்டும் என்று திட்டமிட்டுள்ள அதிகப்படியான உணவு உற்பத்தி 33 சதவிகிதம் என்றும், இதில் எட்டு சதவிகித அளவினை நீர்ப்பாசன வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்தலின் மூலம் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் முன்பே குறிப்பிட்டேன். அதேபோல் ரசாயன உரங்களை மேலும் அதிகமாக உபயோகிப்பதன் மூலம் உணவு உற்பத்தியை 12.5 சதவிகிதம் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்னும் மிச்சமிருக்கிற 12.5 சதவிகித அதிக அளவு உணவு உற்பத்தியைப் பெருக்க வழிசெய்ய வேண்டும்.

### உயர்தரச்சாகுபடி முறைகள்

இதை மற்ற எல்லா வகையான 'முறைகளைக்' கையாளுவதின் பலனுகப் பெறலாம். இவை அத்தனை வகைகளையும் சேர்த்து ஒருங்கிணைப்பாக உயர்தரச் சாகுபடி முறைகள் என்று குறிப்பிடலாம். இந்த முறைகளைக் கிராம வட்டார அளவுகளில் திட்டமிட்ட முறையில் செயல்படுத்த வேண்டியது பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் தலையாய கடமையாகும்.



### கற்பனைச் சூழலில் .......

உயர்தரச் சாகுபடி முறைகளில் மிகவும் முக்கியமானது, உள்ளூர் எருக்களை உபயோகித்தலும், அதை மிகவும் அதிகப்படியான முறையில் பெருக்குவதுமாகும்.

இந்த விஷயத்தைப்பற்றி கிராமத் தலைவர்கள் தங்களுக்குத் தாங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன். மாநில அளவில் கருத்தரங்குகள், வட்டார அளவில் ஆராய்ச்சிக் குழுக்களின் மூலமாக இதைப்பற்றிய விஷயங்களைப் பரப்புகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உள்ளூர் எருக்கள் சம்பந்தப்பட்ட வரையில் தங்களால் என்னென்ன செய்ய முடியுமோ, அவ்வளவையும் விவசாயிகள் செய்வதாகவும், ஆனுல் அதிகப்படியான நீர்ப்பாசன வசதிகளும், அதிகப்படியான செயற்கை உரங்களும் இல்லாமல், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியைக் காண இயலவில்லை என்றும் அடிக்கடி கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும், இதைப்பற்றி முழுமையாக விவாதித்த பின்னர், இப்படிப்பட்ட ஒரு கருத்தானது ஒரு கற்பனையான சூழலில் எழுந்ததே என்ற உண்மை தெரியவந்தது.

### பற்ருக்குறை ஏன்?

தோட்ட எரு எல்லா வட்டாரங்களிலும் ரொம்பவும் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ஒன்ருகும். ஆனுல் அதே சமயத்தில் இது எங்கும் போதிய அளவுக்குக் கிடைக்காமலும் இருக்கிறது. போதிய அளவு பசுந்தழை உரம் கிடைப்பதில், ஒரு வட்டாரத்திற்கும் இன்னெரு வட்டாரத்திற்கு மிடையே மிகப் பெரிய

வித்தியாசங்கள் உள்ளன. சில வட்டாரங்கள் பசுந்தழை உர விஷயத்தில் நல்ல சாதகமான நிலையைப் பெற்றுள்ளன என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், அப்படிப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. அனேகமாக, அதிக வட்டாரங்களில் பயிர்த்தொழில் பெருகிக்கொண்டே போகிறது. மரங்களின் பெருக்கமும் செடி, கொடிகளின் பெருக்கமும் அழிந்துக்கொண்டே வருகிறது. இதனால் தாவர எரு கிடைப்பதில் மிகவும் கடுமையான ஒரு பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பற்றுக்குறை எவ்வளவு தூரம் உள்ளது என்பதை ஒரு ஊகத்தின் பேரில்தான் சொல்ல முடியும். ஒரு வட்டாரத்தில் சராசரியாக விளைகின்ற பயிர்களில் மூன்றில் ஒரு பாக அளவுக்குத்தான், முழுமையாக உரம் கிடைக்கிறது. இன்னும் ஒரு பகுதி அரை குறையாகவும், மற்றும் ஒரு பங்குக்குச் சுத்தமாக உரமே கிடைக்காத நிலையும்தான் உள்ளது என்பது பொதுவாக உள்ள ஒரு கருத்தாகும்.

## தேவைக் கணக்கெடுப்பு

மனிதர்களுக்கு வேண்டிய உணவின் தேவை எவ்வளவு என்று கணக்கெடுத்து நிர்ணயிப்பது போலவே, தன்னுடைய பிரதேசத்தில் உரம் சம்பந்தப்பட்ட வரையில் உண்மையாக உள்ள நிலை என்ன, கிராமத்தில் பயிர் செய்யப்படும் நில அளவுக்கு தேவைப்படுகின்ற உரத்தின் அளவு என்ன என்பது பற்றிக் கணக்கெடுத்து நிர்ணயிப்பதில் கவனத்தைச் செலுத்துதல், பஞ்சாயத்தின் முதல் கடமையாகும்; அதன் பிறகு, பஞ்சாயத்தானது, தற்சமயம் தாவர உரத்தைப் பெறுவதில் அவைகளுக்குள்ள பல்வேறு முறைகள் என்ன என்று பட்டியல் தயாரிக்க



வேண்டும். அதன் பிறகு அதிகப்படியாகத் தேவைப்படுகிற உரத்தைப் பற்றி, ஒரு மதிப்பீடு தயாரிக்க வேண்டும்.

## கவனத்திற்குரிய கேள்விகள்

எவ்வளவு உரம் பற்றுக்குறையில் இருக்கிறது என்று ஒரு முடிவுக்கு வந்த பிறகு, அந்தப் பற்றுக் குறையை எந்த வகையான உள்ளூர் எருவை உபயோகப்படுத்துவதன் மூலம் சரிகட்டலாம் என்பது பற்றி ஆராய வேண்டும்.

எந்த அளவுக்குப் பசுந்தழை உர உபயோகத்தை அதிகப்படுத்தலாம்? அதற்காக எவ்வளவு பசுந்தாள் விதைகள் தேவைப்படும்? வருடா வருடம் அந்த அளவு பசுந்தாள் விதைகளைப்பெற என்ன ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்? பசுந்தழை உரம் தயாரிக்க நிலத்தை நேரடியாகப் பயன் படுத்துவதை எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியும்? அதற்காக, என்ன மாதிரி மரங்களும் செடி கொடிகளும் பயிரிடப் படவேண்டும்? எப்படிப்பட்ட நிலங்களில் அவைகளைப் பயிரிடலாம்? எவ்வளவு கலவை எருக்குழிகள் தோண்டப்பட வேண்டும்? எந்த நிலங்களில் அவற்றைத் தோண்டுவது? யார் இவற்றைத் தோண்டுவது? இந்தக் குழிகளில் நிரப்பத் தேவைப்படுகின்ற அதிகப்படியான தாவரப் பொருள்களை எப்படி உற்பத்தி செய்வது? வேலிப் புதர்கள் அல்லது விவசாயிகளின் நிலங்களின் வரப்புகளில் பயிரிடுதல் என்ற முறையில், எந்த அளவுக்கு அவைகளை உற்பத்தி செய்ய முடியும்? புறம்போக்கு நிலங்களிலும், தரிசு நிலங்களிலும் எந்த அளவுக்கு அவைகளை உற்பத்தி செய்ய முடியும்? இந்தக் கேள்விகள் ஒவ்

வொன்றும் மிகவும் கவனத்துடன் ஆராயப்பட வேண்டும்.

இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் விடைகளின் பாணி, நிலத்தை உபயோகப்படுத்துவதில் தற்சமயம் உள்ள முறைக்குத் தகுந்தமாதிரி குறிப்பிடத்தக்க அளவில் மாறி மாறி இருக்கும். அதாவது தற்சமயம் உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களில் பயிரிடுதல், தோட்டம் பயிரிடுதல் முறை இவைகளைப் பொறுத்தும், புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்களில் கிடைக்கின்ற அளவுக்கும், கரிம எருப் பொருள்கள் கிடைப்பதில் பிரதேசங்களில் உள்ள வசதிகளைப் பொறுத்தும், இந்தக் கேள்விகளுக்கு அளிக்கப்படும் விடைகள் அமையும்.

**சமாளிக்கும் விதம்**

மோசமான பற்றுக்குறை நிலையை, புஞ்சை நிலங்களில்தான் சாதாரணமாகக் காண முடியும். ஒரு ஏக்கருக்கு ஒரே ஸ்டாண்டர்ட் அளவுள்ள குழி ஒன்று என்ற விகிதத்தில், நிலங்களிலேயே கலவை எருக் குழிகளைத் தோண்டுவதுதான் சாதகமான ஒரு முறையாகும்.

கிளிரிசிடியா, புங்கம், இபோமியா, ஆடாதொடா, காட்டாமணி போன்ற மரங்களையும் செடி கொடிகளையும் வளர்ப்பதின் மூலம் அப்படிப்பட்ட குழிகளுக்கு வேண்டிய உரப் பொருள்களைப் பெறமுடியும். அப்படிப்பட்ட மரங்களையும் செடிப் புதர்களையும் வேலிப் புதர்களாகவும், கரையோரங்களிலும் வைத்துப் பயிரிடுதலில், அவைகளுக்குத் தண்ணீர் ஊற்றவும், அவைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டியிருப்பதால், முதல் ஆண்டில் இது விவசாயிகளுக்கு ஒரு சிறு பிரச்சினையாகத்தான் இருக்கும்.



இந்தப் பிரச்சினையை நடைமுறையில் சமாளிப்பது எப்படி என்பதைத் தெரிந்துகொண்டுள்ள விவசாயிகள், மற்ற விவசாயிகளுக்கும் இதை எடுத்துச் சொல்லி, அவர்களும் அந்த முறைகளைக் குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளும்படிச் செய்வது பஞ்சாயத்தின் கடமையாகும். அவைகளைப் பாதுகாப்பாகப் பார்த்துக்கொள்ள போதிய கண்காணிப்பாளர்களையும் பஞ்சாயத்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

**எருவும் விறகும்**

தனிப்பட்ட முறையில் விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான இடங்களில் இப்படிப்பட்ட முறைகளை மேற்கொள்ளச் செய்வதுடன், தன்னுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு, தரிசு நிலங்களில் இப்படிப்பட்ட மரங்களையும், செடி, கொடிகளையும் வைத்துப் பயிர் செய்ய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தும் தவறாமல் செய்ய வேண்டிய கடமையாகும். அவைகளைப் பயிர் செய்வதன் முதல் நோக்கம், போதிய அளவு எரு கிடைக்கின்ற நிலையை, நிரந்தரமாக உண்டாக்கிக் கொள்வதுதான். ஆனால், அப்படிப் பயிரிடும் முயற்சி, இதற்காக மட்டுமல்ல. கிராம மக்களுக்கு உபயோகத்திற்குத் தேவையான விறகு, தீவனம் போன்றவைகளையும் அவைகளைப் பயிரிட்டு வளர்த்தல் மூலம் பெற முடியும். விறகு அதிகமாகக் கிடைத்தால், எருமட்டையை அடுப்பெரிக்க உபயோகிப்பது குறையும். அதே சமயத்தில், தோட்ட எருவும் அதிகமாகக் கிடைக்கும்.

## 6. விதை வகைகள்

அடுத்து விதைகள் விஷயம் முக்கியமான ஒன்ருகும். நீண்ட நெடுங் காலமாகவே, நமது மாநிலத்தின் விவசாயத் துறை, விதைகளைப் பற்றிய வகையில் நிறைய வேலை செய்து வந்திருக்கிறது. விதைகளைத் துருவித் துருவிப் பொறுக்கி எடுத்தும், அவைகளை நல்ல முறையில் வைத்துக் காப்பாற்றியும் வந்ததினுல், பல வகையான நெல், தினை விதை வகைகளை உபயோகத்தில் பயன் படுத்தும்படியான ஒரு நல்ல நிலை ஏற்பட்டுள்ளது.

### தரமான விதைப் பெருக்கம்

மாநிலத்தில் உள்ள பல்வேறு வகையான பயிரிடும் முறைக்குத் தகுந்த மாதிரி, இந்தப் பல வகைப்பட்ட விதை வகைகள் பொருத்தமாக உள்ளன. விவசாயிகள் கையாளுகின்ற வழக்கங்களுக்கேற்ப, பல்வகையான காலங்களில் மிகவும் ஜாக்கிரதையாக இந்த விதை வகைகள் உபயோகிக்கப் பட்டு, விளைவுகள் கவனத்துடன் ஆராயப் படுகின்றன. இதனுல் ஏற்படுகின்ற விளைவின் அளவு, அதனுடைய தரம் எல்லாம் மிகவும் கவனத்துடன் ஆராயப்பட்ட பின்புதான் இந்த விதை வகைகள் பலமடங்காகப் பெருக்கப்பட்டு, பெருவாரியாக உபயோகப்படுத்தப் படுகின்றன.



இந்தத் தரமான விதை வகைகளைப் பெருக்குதல், சுத்தமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல், ஆகிய இந்த வேலையானது, விவசாயத் துறை இயங்க ஆரம்பித்த காலத்திலிருந்தே, அதனுடைய மிக முக்கியமான வேலைகளில் ஒன்ருக இருந்து வந்திருக்கிறது.

### விவசாயிகள் பாராட்டு

விவசாயத் துறையினரால் தயாரிக்கப்பட்ட, தரமான, பொறுக்கு விதைகளினுல் கிடைக்கும் பயன்கள், மாநிலத்தில் எல்லா வட்டாரங்களிலும் உள்ள விவசாயிகளால் வெகுவாகப் பாராட்டப்படு கிறது. நெல் பயிரிடுதலைப் பொறுத்தவரையில், மாநிலத்தில் மொத்தம் நெல் பயிரிடப்படுகின்ற நிலப் பரப்பில் பத்தில் ஒன்பது பாக அளவு நிலங்களுக்கு மேல், பொருத்தமான தரமான விதை மணிகள் விதைக்காலத்திற்கு முன்னதாகவே கிடைக்கப் பெறு கின்ற நிலை உள்ளது. இரண்டாவது திட்ட முடிவுக் காலத்தில், 80 சதவிகித நிலங்களுக்கு மேல், இந்த விதை மணிகள் உபயோகிக்கப்பட்டன. தினை வகை களைப் பொறுத்த வரையில், அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லை. இருந்தாலும் குறிப்பிடத்தக்க அளவு நிலங்களில் இவை உபயோகப் படுத்தப்பட்டு வரு கின்றன; இதில், ஒரு நிலையான, உறுதியான முன் னேற்றம் அடையப்பட்டு வருகிறது.

### மூன்று வருடத்திற்கு ஒருமுறை......

புதிய வகை விதைகளை உபயோகிப்பது மட்டும் உற்பத்திப் பெருக்கத்திற்குப் போதாது என் பதையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளவேண்டும். தரமான விதை எந்தக் காலத்திலும் தரமான விதை

யாகவே இருந்து விடாது. மூன்று தடவை உபயோகித்த பிறகு, அது அதனுடைய சக்தியை இழந்து விடுகிறது.

நல்ல, தரமான விதைகளை உபயோகித்து உயர்ந்த முறையில் உற்பத்தி செய்யப் படுகின்ற நிலை நிரந்தரமாக இருக்கும்படி செய்ய வேண்டும் என்றால், ஒவ்வொரு நிலத்திலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த விதை மறுபடியும் புதிதாக மாற்றப்பட வேண்டும் என்பதை ஒவ்வொரு விவசாயியும் அறியும்படிச் செய்தாக வேண்டும். அப்படி என்றால், அதற்காகத் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

### கிராம விதைப் பண்ணை

ஒவ்வொரு ஆண்டும், கிராமத்தில் பயிர் விளைகின்ற நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பாகத்தில் இந்த விதையைத் தயாரிக்கின்ற வேலையானது நடைபெற வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம விதைப் பண்ணை இருக்க வேண்டும். அந்த விதைப் பண்ணையில், புதிதாக வேண்டியுள்ள விதைகளுக்குத் தேவைப்படுகின்ற அளவில், பொறுக்கு விதைகள் தயாரிக்கப்படவேண்டும். கிராம விதைப் பண்ணையில் அப்படிப்பட்டதொரு உற்பத்தியைக் காண வழி செய்யும் வகையில், மாநில விதைப் பண்ணையிலிருந்து கிராம விதைப் பண்ணைக்கு முறையான அளவில் வித்துக்குரிய மூல விதைகள் கிடைக்கும்படியான ஒரு நிலையான ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அது மட்டுமல்லாமல், கிராம விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பொறுக்கு விதைகள், நல்ல



முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, நல்ல விதை தான் என்று சான்றளிக்கப்பட்டு, சேகரித்து, ஒரு இடத்தில் வைத்து கண்காணிக்கப் படவேண்டும். பிறகு அடுத்து வருகின்ற விளைச்சல் காலத்தில் அவற்றை விவசாயிகள் உபயோகப்படுத்த, அவர்களுக்கு விற்பனை செய்யும்படியான நிலையான ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும். கடைசியாக, எந்தெந்த சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட நிலை அவசியமாகிறதோ, அப்பொழுது விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளைக் கடனில் வாங்கக்கூடிய உறுதியான ஒரு நிலையையும் உண்டாக்கவேண்டும்.

### கிராம சகாய வேலைத் திட்டம்

இந்த விதைகள் சம்பந்தமான அமைப்புமுறை வேலை இரு பகுதிகளாக உள்ளன. ஒன்று, அரசாங்கத்தினால் செய்யப்பட வேண்டியவை, இன்னொன்று, பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியவை. அரசாங்கத்தினால் பெருவாரியான அளவில் அரசாங்க விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். அவற்றில் கிராமங்களுக்கு வழங்குவதற்கான வித்துக்குரிய மூல விதைகள் தயாரிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் திட்டமிட்ட முறையில் விதைகளை மாற்றி உபயோகிப்பதற்காக, திட்டமிடப்பட்ட முறையில் பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்தல், பாதுகாத்து வைத்தல், விநியோகம் செய்தல் என்பது பற்றிய ஒரு வேலைத்திட்டம் ஒவ்வொரு கிராமத்திலும் கையாளப்படவேண்டும். இதைக் கிராம சகாய வேலைத் திட்டம் என்கிறோம்.

## உற்பத்தித் திட்டம்

அரசாங்க விதைப் பண்ணைகளை அமைத்து, அதற்காகத் தேவைப்படுகின்ற விதைகளைச் சேகரித்தல் ஒரு புதிய முயற்சியாகவும், ஆரம்பத்தில் அநேக சிரமங்களை அளிப்பதாகவும் இருந்தது. பல இடையூறுகளுக்கும் தவறுகளுக்கும் பிறகு, இந்தச் சிரமங்களும், சிக்கல்களும் பெருவாரியாகத் தீர்க்கப்பட்டு, வேண்டிய அளவுக்கு விதைப் பண்ணைகளை அமைத்துக்கொள்கின்ற ஒரு நிலையை நாம் இப்பொழுது அடைந்து விட்டிருக்கிறோம்.

அரசாங்க விதைப் பண்ணையின் வேலையானது ஒரு உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில் இயங்க வேண்டும். அரசாங்க விதைப் பண்ணைகளால் விதை வழங்கப்பெறுகின்ற கிராமங்களில் கிராம சகாய வேலைத்திட்ட அடிப்படையிலும், அதனோடு சேர்த்தும், இந்த உற்பத்தித் திட்டமானது அமைய வேண்டும்.

கிராம அளவில் அமைக்கப்படவேண்டிய புதிய அமைப்பு பற்றிய வேலைகள், விவரங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு, செயல் புரியப்பட்டு வருகின்றன. இந்தப் பணியினை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய பொறுப்பில் உள்ள பிரதேசத்தில் ஒரு திறமையான கிராம சகாயப் பணித்திட்டத்தை அமைக்க வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும்.

பஞ்சாயத்து யூனியனில் பணிபுரிகிற வளர்ச்சி அலுவலர்கள் வேண்டிய தொழில் நுணுக்க உதவிகளையும், மேற்பார்வை வேலையையும் செய்வார்கள். தன்னுடைய பிரதேசப் பொறுப்பில், இந்தப் பணிக்காக ஆகும் நிகர செலவுக்காகப் போதிய நிதிகளை பஞ்சாயத்து யூனியன் அளிக்கவேண்டும்.

# 7. பயிர்ப் பாதுகாப்பு

தரமான விதைகளை உபயோகிப்பதைப்போன்றே வளர்ந்துவரும் பயிர்களைப் பாதுகாப்பதும் முக்கியம். நல்ல முறையில் அமைந்துள்ள ஒரு பயிர்ப் பாதுகாப்புப் பணித்திட்டம் தமிழ் நாட்டில் உள்ளது. இந்தப் பணியின் மதிப்பினையும் உயர்வினையும் விவசாயிகள் பாராட்டியுள்ளார்கள். மேலும் பெருகிவருகின்ற தேவைக்கேற்ப, இந்த அமைப்பு முறையும் நல்ல முறையில் விரிவாக்கப்பட்டு வலுவுடன் இயங்கி வருகிறது.

எல்லா வட்டாரங்களிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் பயிர்ப் பாதுகாப்பு வேலையை ஏற்றுக்கொள்கின்ற வளர்ச்சி அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், எல்லா வட்டாரங்களிலும் ஒரேமாதிரி நிலைதான் இருக்கும். அவர்கள் பஞ்சாயத்து யூனியனின் அதிகாரத்திற்குள் பணிபுரிவார்கள்.

எல்லா வட்டாரங்களிலும் போதிய அளவு இருக்கக்கூடிய வகையில் பிரதேசங்களில் உள்ள ஸ்ப்ரேயர்கள், ட்ஸ்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான நிதி வசதிகள், பஞ்சாயத்து யூனியன் வசம் இருக்கும். வரையறுக்கப்பட்டு, ஒரு அளவுக்குட்பட்டு, பூச்சி மருந்துகளைக் குறைந்த விலையில் விற்பதினால் உண்டாகின்ற செலவையும்

பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக்கொள்ளும். அந்த அளவுக்கு மேல், பூச்சிகளினால் பயிர்கள் அதிகமாகத் தாக்கப்பட்டால், அதற்கான செலவு, அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாங்கத்தின் நிதியிலிருந்து சமாளிக்கப்படும்.

### மூலதனச் செல்வம்

கலவை எரு தயாரிக்க வேண்டிய தாவரப் பொருள்களைப் பற்றியும், பசுந்தழை உரம் பற்றியும் குறிப்பிடும் பொழுது, கிராமங்களில் திட்டமிட்ட முறையில் மரங்களை நட்டுப் பயிராக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி முன்பே குறிப்பிட்டேன்.

மரம் நடுதல் பல காரியங்களுக்குப் பயன்படுகின்ற ஒரு வேலையாகும். கிராம மக்களுக்கு வேண்டிய விறகு, தீவனம், மூங்கில் மற்றும் வீட்டிற்கும், விவசாயத்திற்கும் வேண்டிய சாதனங்கள், உபகரணங்களுக்கும் அவை பயன்படுகின்றன. பயிரிட முடியாத நிலையில் உள்ள எல்லா நிலங்களும் வீணுகப் போகாமல், சிறந்த பலனை அளிக்கின்ற முறையில் அவைகளை உபயோகப்படுத்துகின்ற நிலை, மரங்களை நட்டுப் பயிராக்குவதின் மூலம் உண்டாகிறது. கிராமத்தின் மூலதனச் செல்வத்தை உருவாக்கவும், பெருக்கவும் இது ஒரு வழியாகும்.

இந்த நோக்கத்தினை இரு வகையான முறையில் அணுக வேண்டும் என்று தமிழகத்தின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுல் கைக்கொள்ளப்படாத எல்லா நிலங்களும் (பெருவழித்துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள், பொதுப் பணித் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன ஆதாரங்கள்



குளங்கள், வனவளத்துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒதுக்கப்பட்ட காடுகள் தவிர) ஒவ்வொரு பஞ்சாயத்தின் நேரடி பராமரிப்பு உரிமை முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### சுதந்திரமான செயலாற்றல்

இப்படி அரசாங்கத்தால் கைக் கொள்ளப்படாத நிலங்களின் பராமரிப்பினை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருப்பதினுல் ஏற்படக்கூடிய பயன்களில் மிக முக்கியமானது என்று கருதப்படுவது, குளக் கரையோரங்களில் விறகுக்கு உபயோகிக்கக்கூடிய மரங்களைப் பயிரிட்டு வளர்ப்பதில், உபயோகமாக அமையக் கூடிய மரங்களையும், செடி கொடிகளையும் வைத்து வளர்ப்பதில் பஞ்சாயத்துக்கள் ஒருவிதக் கட்டுப்பாடு இல்லாமல், சுதந்திரமாகச் செயலாற்ற முடிகின்ற ஒரு நிலை உண்டாவதுதான். அப்படிப் பட்ட பயிர்களை நட்டு அவை பெரிதாக வளருகின்ற நிலை வரையில், அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சவும், கண்காணிப்பாகப் பார்த்துக் கொள்ளவும் ஆகின்ற செலவினைச் சமாளிக்க, பஞ்சாயத்தின் வரவு செலவுத் திட்டத்தில் நிர்ணயமான நிதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பல வட்டாரங்களில் பஞ்சாயத்துக்கள் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுத்து விட்டன.

### பண்ணைக்காடு திட்டம்

இதே சமயத்தில், காட்டிலாகாவின் சிப்பந்திகளினுல் செய்யப்படவேண்டிய ஒரு பண்ணைக்காடு திட்டத்தை அரசாங்கம் அனுமதித்துள்ளது. இது அவர்களுக்கு ஒரு புதிய வேலை. இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இணைப்பான பகுதிகளில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களைக் கலந்தாலோசனை

செய்து, இந்த வேலையை அவர்கள் செய்துவருகிறார்கள்.

மாநிலத் திட்டத்தில் இதற்காகச் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளிலிருந்து, இவைகளை உற்பத்திச் செய்வதற்காக ஆகும் செலவினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. மரம், செடிகள் பெரிதாக வளர்ந்தவுடன், அவைகள் பாதுகாக்கப்படவும், கிராமத்தின் நலனுக்காக உபயோகப்படுத்தப்படவும் வேண்டி, பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்படும். இந்த வேலையைச் செய்ய காட்டு இலாகா அலுவலர்களுக்கு, அந்தந்தப் பிரதேசத்தில் என்னென்ன உதவிகள் வேண்டியுள்ளனவோ, அவைகளை அவர்களுக்கு அளிப்பது பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

## மண்வளப் பாதுகாப்பு

இந்த மாநிலத்தில், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்தான், முதன் முதலாக மண்வளப் பாதுகாப்பு முறைகள் பற்றிக் கவனம் செலுத்தப் பட்டது.

முதல் திட்டக் காலத்தில், இரண்டு மாவட்டங்களில், சுமார் 17,000 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மண் வளப் பாதுகாப்புத் திட்டம், ஒரு சோதனைப் பயிற்சியாக, ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் நான்கு மாவட்டங்களுக்கு இது பரவியது. இரண்டு லட்சம் ஏக்கர்களுக்குக் கொஞ்சம் குறைந்த அளவு நிலப்பரப்பு அளவுக்கு இந்தத் திட்டம் பரவியது.

இதன் விளைவாக, நல்ல அனுபவம் ஏற்பட்டது. அதனால் இதற்கென்று ஒரு ஸ்தாபன அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. இந்த ஸ்தாபனமானது



மூன்றாவது திட்டக் காலத்தில் மேன்மேலும் குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பு வேலைகளை நடத்துகின்ற முறையில் சீராக இயங்கிவருகிறது. பெரும் அளவில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கச் சட்ட பூர்வமான ஆதரவு தருகின்ற வகையில் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

# 8. வளம் பெருக . . .

தமிழ் நாட்டில் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலும் விவசாய வளர்ச்சித்துறை அலுவலர் பகுதி இயங்குகிறது. அதற்காக அரசாங்கப் பணத்திலிருந்து ஊதியம் அளிக்கப்படுகிறது. அந்தப் பகுதியின் வேலைகளை மாவட்ட விவசாய அதிகாரி கண்காணிக்கிறார். அந்தப் பகுதி பஞ்சாயத்து யூனியன் அதிகாரத்திற்குட்பட்டுப் பணியாற்றும்.

## கிரகிக்கும் சூழ்நிலை

பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் மேற்கொண்டுள்ள பொறுப்புக்களின் விளைவாகச் செய்யவேண்டிய எல்லா வேலைத் திட்டங்களையும் செயல்படுத்தி வைப்பதில் இந்த விவசாயப் பணித்துறை பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு உதவியாக இருக்கும்.

தொழில் நுணுக்க சம்பந்தமான ஆலோசனைகளை அளிப்பது, உயர்ந்த கலாச்சாரப் பழக்க வழக்கங்களைச் செயல் விளக்க முறைகள் மூலமாகச் செய்து காட்டுகின்ற பணியினை அமைப்பு முறையில் நடத்துவது, ஆகிய இந்த வேலைகள் இந்த விவசாய வளர்ச்சிப் பணித்துறை அலுவலர்களின் முக்கிய பொறுப்புக்களாகும். அவர்களுடைய பணிகளி-



லிருந்து சிறந்த சேவையை கிரகித்துக் கொள்வதற்குப் பஞ்சாயத்து யூனியன்கள் பொறுப்பானபடியால், விவசாயிகள் நல்ல முறையில் இதையெல்லாம் வரவேற்கின்ற நல்லதொரு சூழ்நிலையினை ஏற்படுத்தும் வகையில் பஞ்சாயத்து யூனியன்கள் உதவி புரிய வேண்டும்.

## கடமைகள் பங்கீடு

உற்பத்தியைப் பெருக்க விவசாயிகள் மேற்கொள்கின்ற முயற்சிகளில், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளை அளிக்கின்ற விஷயத்தில், பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் மேற்கொள்கின்ற எல்லா நடவடிக்கைகளைப் பற்றியும் இங்கு நான் விளக்கமாகத் தொகுத்துக் கூறுவது இயலாது. ஆனால் பொறுப்புக்களையும் கடமைகளையும் பகிர்ந்து நடத்துவதுபற்றி விளக்கிக் கூறுவதற்குக் காரணம், கிராம மக்களின் தலைவர்களாக உள்ளவர்களிடம் ஒரு தூண்டுதலை ஏற்படுத்தி, அவர்களை இந்தப் பணிகளில் ஊக்குவிப்பதும், பிரதேசத் தேவைகள், பிரதேச ஆதாரங்களிலிருந்தே பெருவாரியான அளவுக்குச் சமாளிக்கப்படும்படியான ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதுமேயாகும்.

இந்த முறைப்படி, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் தன்னிச்சையாகத் தங்களுடைய முடிவுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஒப்ப நடக்க உரிமை பெற்றுள்ளன. அரசாங்கத்திலிருந்து அவர்கள் எதிர்பார்க்கின்ற தேவைகள், மாநில அரசாங்கத்தின் சக்திக்குட்பட்ட வகையில் பணம் அளிப்பது, ரசாயன உரங்கள் வழங்குவது ஆகிய இந்த அளவோடு இருக்கும் வரை, உள்ளாட்சி அதிகாரம் பெற்ற இந்த ஸ்தாபனங்கள், நடவடிக்கைகளை மேற்கொள்-

வதில் அவைகளுக்கு உள்ள சுதந்திரத்தில் அரசாங்கம் ஒருவிதக் கட்டுப்பாட்டையும் விதிக்காது.

## பொருளாதாரப் பிளவு

ஒவ்வொரு கிராமத்தில் உள்ள ஒவ்வொரு விவசாயியும், இயற்கையாகவே, தன் உடமையில் உள்ள நிலத்தையும், பயிரையும் மட்டுமே பார்த்துக் கொள்கிறார். பொதுவாக உள்ள நிலங்களைக் கவனிக்கவோ, எவை எவை உபயோகப்படுத்தப்படாமல் உள்ளனவோ, அவற்றை உபயோகப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்தித்து அதில் கவனம் செலுத்துவதற்கோ, தற்சமயம் போதிய அளவுக்கு உபயோகப்படுத்தப்படாமல் உள்ள நிலத்தை வேண்டிய அளவிற்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கான வழி வகைகளைப் பற்றி எண்ணிச் செயலாற்றுவதற்கோ, இதுவரையில் கிராமங்களில் ஒருவருமே இல்லாத ஒரு நிலை இருந்து வந்தது. மேலும் கிராமம் முழுவதற்குமாக, உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆதாரங்களையும் வசதிகளையும் பற்றிக் கவனித்துச் செயலாற்றுகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவும், கிராமத்தில் உள்ள ஒவ்வொரு துண்டு நிலமும், அது யாருக்குச் சொந்தமாயிருந்தாலும் யாரால் விவசாயம் செய்யப்பட்டு வந்தாலும் சரி, மக்களுக்கு உணவளிப்பதற்காக அதிக பட்சமான அளவுக்கு அதில் உணவு உற்பத்தி காணுகின்ற நிலையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கும், கிராமத்தில் ஒரு நபரும் இல்லாமலிருந்தனர்.

தமிழ்நாட்டின் கிராமப் பொருளாதார அமைப்பில் நிலவி வந்த இந்தப் பிளவானது இப்பொழுது அடைக்கப்பட்டு வருகிறது. பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரம் பெற்றவராகவும், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் உறுப்பினராகவும் திகழ்கின்ற ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவரும் இந்தப் பொறுப்பானது தன்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை இப்பொழுது தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.



## திட்டமிட்ட செயல் முறை

ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கி, செயல் முறையில் துல்லியமாக நடத்துவது எப்படி என்பது பற்றிய சுத்தமான கருத்துணர்வு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டில் இல்லாமலிருந்தது. மத்திய அரசாங்கம்,மாநில அரசாங்கங்கள் சம்பந்தப்பட்டமட்டில், எப்படி இது நடத்தப்பட வேண்டும், எப்படி நடக்கிறது என்பது பற்றி இப்பொழுது நமக்குத் தெரியும்.

திட்டமிட்ட அபிவிருத்திக்கான இந்தச் செயல் முறையானது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அதனால் ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு வட்டாரமும் இந்தத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்ற வேலையில் பங்கு கொள்ளும்படியாக உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகவே எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. ஆனால், இந்த எண்ணத்தைச் செயல் முறையில் எப்படி நடத்துவது என்பது பற்றித் தெளிவான கருத்துணர்வு இல்லாமலிருந்தது. இப்பொழுது இது நமக்குத் தெரிந்துவிட்டது என்று நாம் எண்ணுகிறோம்.

## தேவைப் பூர்த்தி

இப்போதைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மாநிலத்தின் விவசாய உற்பத்தி வேலைத் திட்டம் பற்றிய பல்வேறு வேலைகளை 12,540 பஞ்சாயத்துக்கள், 373 பஞ்சாயத்து யூனியன்கள், மாநில

அரசாங்கத்துறை பிரிவுகள் ஆகியவற்றினிடையே எந்த முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது பற்றிய ஏற்பாட்டினை நாம் பார்த்தோம்.

இனி அடுத்து வருகின்ற சில ஆண்டுகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் பணி புரிந்து, இந்தத் திட்டத்தைச் செயல்முறையில் அமுல் நடத்திக் காட்டுவோம். விவசாயத் துறையில் அபி விருத்தி காண்போம். உற்பத்தியைப் பெருக்குவோம். வளரும் தமிழகத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வோமாக.

# 9. அளவான குடும்பம்

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 373 பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செய்ய வேண்டிய முக்கிய தேசியப் பணிகள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று, ஆண்டுதோறும் மக்களுடைய எண்ணிக்கை பெருகுவதற்கு ஏற்ப, உணவு உற்பத்தியைத் தொடர்ந்து பெருக்குவது. அதன் விவரங்களைத்தான் இதுவரை ஆராய்ந்தோம். மற்றொன்று, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது.

## பிறப்பும் இறப்பும்

மரணங்களைவிட பிறப்புக்கள் அதிகமாக இருப்பதினால், மக்கள் எண்ணிக்கை பெருகுகிறது. க்ஷேமநல அரசாங்கத்தின்கீழ், மக்களின் மரண விகிதம் குறைய வேண்டியதுதான் முறை இப்போது கூட மரணங்களின் எண்ணிக்கைக் குறைந்துகொண்டுதான் வருகிறது. இதுகூடப் போதாது. நம்முடைய சுகாதார, சமூகநலத் திட்டங்கள் மூலம், மேலும் அந்த எண்ணிக்கையைக் குறைக்க நாம் முயலுகிறோம். ஆகவே, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமெனில், பிறப்புக்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைப்பதுதான் வழி.

அவை, மரணங்களின் எண்ணிக்கை குறையும் வேகத்தைவிட அதிக வேகத்துடன் குறையவேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொருஆண்டும், எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன? மக்கள் எண்ணிக்கைப் பெருக்கம், ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டுமென்றால், பிறக்கும் குழந்தைகள் எத்தனையாக இருக்க வேண்டும்? இவற்றை நமக்கு நாமே நிர்ணயம் செய்தால்தான் நம்முடைய நோக்கத்தை அடைய வழி பிறக்கும்.

## பூர்த்தியான விவரம்

ஒவ்வொரு கிராமத்திலும், உண்டாகின்ற ஒவ்வொரு பிறப்பும், மரணமும், மணியக்காரருக்கு அறிவிக்க வேண்டும் என்பது சட்டம். அவர் இந்த விவரங்களைப் பதிவு செய்துகொண்டு, ஒவ்வொரு மாதமும், ஒரு மாதாந்தர அறிக்கை அனுப்புகிறார். துரதிருஷ்டவசமாக, ஒவ்வொரு பிறப்பு பற்றியும், அவருக்கு அறிவிக்கப்படுகிறது என்ற உறுதியில்லை. ஆகவே, அவர் அனுப்பி வைக்கின்ற புள்ளி விவரங்கள், பூர்த்தியானவையாக இல்லை. ஆகவே, இந்த அறிக்கையிலிருந்து தொகுத்துச் சேகரிக்கப்படும் தகவல்கள், விவரக் குறைவு உள்ளனவாகவும், சிலசமயம் உபயோகமற்றவையாகவும் ஆகிவிடுகின்றன. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்த நிலை; இன்னும் இந்தியாவிலுள்ள மற்ற எந்த மாநிலத்திலும் இதே நிலைதான் உள்ளது.

மக்கள் எண்ணிக்கை, ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமாயின்,ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு மாதத்திற்கும், இது பற்றிய சரியான முழு விவரங்களும் கிடைக்கப்பெறுவது,மிகவும் அவசியமாகிறது. இந்த வகையில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் மாதாந்தர அறிக்கையை அனுப்பி வைப்பதற்கு முன்னால், பதிவு செய்யப்பட்ட விவரங்களை மாதந்தோறும் பரிசீலனை செய்ய முன் வந்தால், எல்லாப் புள்ளி விவரங்களையும், சுலபமாகப் பெற முடியும்.பஞ்சாயத்து ஆட்சியில் குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் செய்யப்பட வேண்டிய வேலைகளில், இந்த வேலையும் ஒன்றாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.



## பிறப்பு விகிதம்

இந்த எளிய காரியத்தைப் பஞ்சாயத்து யூனியன், சீர்திருத்தி, தனது வட்டாரத்திலுள்ள எல்லாக்கிராமங்களிலிருந்தும், சரியான தகவல்களைச் சேகரிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். 1961-ம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்கின்படி அந்த வட்டாரத்தின் ஜனத்தொகை 80,000 என்று வைத்துக் கொண்டால், அந்த வட்டாரத்தில் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் சுமார் 3,000 குழந்தைகள் பிறக்கின்றன என்றாகும்.

ஒரு பிரதேசத்தின் ‘பிறப்பு விகிதம்’ என்பது சாதாரணமாக, ஆயிரம் பேர் கொண்ட மக்கள் தொகைக்கு,ஆண்டொன்றுக்குஉண்டாகின்ற பிறப்புக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடும். இந்த மாநிலத்தில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொருவட்டாரத்திற்கும், பிறப்பு விகிதமானது 35-க்குக்குறையாமல் 40-க்கு மேற்படாமல் இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதே மாதிரி, இதே அளவு மக்கள் எண்ணிக்கையைக்கொண்ட பிரதேசத்தில், இங்கிலாந்து நாட்டிலோ அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளிலோ, ஒரு கணக்கு எடுப்பதாக வைத்துக் கொள்வோம்.

அப்படி எடுத்தால், ஒவ்வொரு வட்டாரத்திலும், பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை 1, 200ஆக இருக்குமே தவிர, 3,000ஆக இருக்காது. அங்கெல்லாம், பிறப்பு விகிதம் 35-லிருந்து 40-க்குள் இருக்கின்ற நிலையில்லாமல், அது பதினைந்தோ அதற்கும் சற்று குறைவாகவோ அல்லது அதிகமாகவோதான் இருக்கும்.

## இரண்டு பகுதிகள்

மணியக்காரர் ஒரு குழந்தை பிறந்ததைப் பதிவு செய்யும்போது, பல விவரங்களைப் பதிவு செய்கிறார். அதில் ஒன்று, 'எத்தனையாவது குழந்தை' என்பது பற்றிய விவரமாகும். அதாவது, பிறந்த குழந்தை, அந்தப் பெற்றோருக்கு முதல் குழந்தையா, நான்காவது குழந்தையா அல்லது பத்தாவது குழந்தையா என்பது பற்றிய விவரம் பதிவு செய்யப்படுகிறது. எல்லாக் குழந்தைகளின் பிறப்புக்களும், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். முதல் குழந்தை, இரண்டாவது குழந்தை, மூன்றாவது குழந்தை ஆகியவை ஒரு பகுதியாகும். இந்தப் பகுதியை "சாதாரண பிறப்புக்கள்" என்று அழைக்கலாம். நான்காவது குழந்தை, ஐந்தாவது, அதற்கு அப்பாற்பட்டவை எல்லாம் இரண்டாவது பகுதி. இதை "அதிகப்படியான பிறப்புக்கள்" என அழைக்கலாம்.

ஒரு வட்டாரத்தில், ஓராண்டில் ஏற்படுகின்ற 3, 000 பிறப்புக்களை, பஞ்சாயத்து யூனியன், இந்த இருவகைப் பிரிவுகளாகப் பிரித்தால், அதில் 1, 800 "சாதாரண" மானதாகவும், 1, 200 "அதிகப்படியான" தாகவும் இருப்பது தெரியவரும்.



## வித்தியாசம் எப்படி?

இங்கிலாந்து அல்லது மற்ற சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இதே மாதிரி, பிரதேச அளவில், இப்படிப்பட்ட ஒரு கணக்கு எடுத்தால், கிடைக்கின்ற எண்ணிக்கை வேறுபட்டதாகவும், சுவாரசியமானதாகவும் இருக்கும்.

"சாதாரண பிறப்புக்கள்," 1,800ஆக இருக்காது; அது 1, 000 மாக இருக்கும். அதேபோல், "அதிகப்படியான பிறப்பு"க்களின் எண்ணிக்கை 200-ஆக இருக்குமே தவிர, 1, 200 ஆக இருக்காது.

இப்படிப்பட்ட வித்தியாசங்கள் எப்படி ஏற்படுகின்றன? இதற்கான முதல் காரணம் திருமணத்திற்கும், முதல் குழந்தை பிறப்பதற்கும் இடையேயுள்ள கால வெளி நம்மைவிட அவர்களிடையே அதிகமாக இருப்பதேயாகும். மேலும் ஒரு குழந்தை பிறந்து, அடுத்த குழந்தை பிறப்பதற்கு இடையே உள்ள காலவெளி, நம்மைவிட அவர்களிடையே அதிகமாக உள்ளது. அங்கே அநேகமாக எல்லோரும், இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பிறந்ததுமே, அதற்குப் பிறகு குழந்தை பெறுவதைக் கட்டுப்படுத்திக்கொண்டு விடுகிறார்கள். ஆனால் நம்மிடையோ, தாய் கருத் தரிக்கக்கூடிய காலம் முழுவதிலும் குழந்தைப் பிறப்பு தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றது.

## பூர்த்தியான குடும்பம்

இந்த மூன்று வித்தியாசங்களில் கடைசியாகச் சொல்லப்பட்ட வித்தியாசம், அதாவது பூர்த்தியான குடும்பத்தின் அளவில் காணப்படும் வித்தியாசம் மிகவும் முக்கியமானதாகும். குழந்தை பெறுகின்ற

கால அளவினைக் கடந்து விட்ட ஒரு 100 தாய்மார்களை, ஒரு பஞ்சாய்த்து யூனியன்; தேர்ந்தெடுத்து ஆராய்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஒரு வட்டாரத்தில் இந்த 100 தாய்மார்களுக்கும் பிறந்த அத்தனை குழந்தைகளின் எண்ணிக்கையை (இறந்து போன குழந்தைகளையும் சேர்த்து) கணக்கிட்டுப் பார்த்தால், அது 600-க்குக் குறையாமல் இருப்பதைக் காணலாம். இறந்து போன குழந்தைகளின் எண்ணிக்கையைத் தள்ளிவிட்டு, உயிரோடு இருக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால், அது 400-க்கு மேல் இருக்கும்.

இதே மாதிரி ஒரு கணக்கை, இங்கிலாந்திலோ மற்ற மேற்கத்திய நாடுகளிலோ எடுத்துப்பார்த்தால், 100 தாய்மார்களுக்குப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 240-க்கு மேற்படாது. இந்த நாடுகளில், நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்து, பூர்த்தியான குடும்பங்களின் எண்ணிக்கை மிகவும் அபூர்வமாக இருக்கும். ஆனால் நம்முடைய மாநிலத்திலோ (இந்தியாவில் மற்ற எல்லா மாநிலங்களிலும் கூட) நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்காமல் பூர்த்தியான குடும்பங்களின் எண்ணிக்கைதான் அபூர்வமாகவும், விதிவிலக்காகவும் உள்ளதைப் பார்க்கமுடியும்.

## அளவான குடும்பத்தின் அவசியம்

தேசிய ஐந்தாண்டுத் திட்டமானது, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்துவதற்கான காரணத்தை மிகவும் சுலபமாகச் சொல்லிவிடலாம். இங்கிலாந்து மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போல் சிறிய அளவுள்ள (அதிக குழந்தைகள் இல்லாத) குடும்பங்கள் நம் நாட்டிலும், பெருவாரியாக இருக்கவேண்டும் என நாம் விரும்புகிறோம்.



இந்த விருப்பத்திற்கான காரணத்தையும் சுலபமாக விளக்கிவிடலாம். ஐந்து, ஆறு என்றில்லாமல், நமது மாநிலத்தில் ஒவ்வொரு ஏழ்மையான குடும்பத்திலும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் என்றிருந்தால், பெற்றோர்கள், உணவு, உடை, கல்வி ஆகிய விஷயங்களில் அந்தக் குழந்தைகளுக்கு இருமடங்கு வசதிகள் அளித்து, அவைகளை நல்லமுறையில் வளர்க்க முடியும். குழந்தைகளை வளர்த்து உருவாக்குவதில், பெற்றோர்களால் மிகவும் மேம்பாடான முறையில், தங்களுடைய தனிப்பட்ட கவனத்தையும், அக்கறையையும் காட்டி அவர்களை வளர்க்க இயலும்.

அனேகம் பெற்றோர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்ட, வாழ்வில் நல்லதொரு ஊக்கத்தைத் தரக்கூடிய ஆரம்பத்தை, புதிய பரம்பரையில் வருகின்ற குழந்தைகள், இதனால் பெறமுடியும். அவர்கள் பெரியவர்களாகின்ற நிலையில், அவர்களுடைய பெற்றோர்கள் இன்று இருக்கின்ற நிலையை விட, அதிகமான கல்வி வசதிகள் பெற்று, அதனால் மேலும் அதிகமான ஊதியங்களைப் பெறுகின்ற வேலைகளில் அமரவும் முடியும். தொழில், வியாபாரத் துறைகளில் ஈடுபட அதிக வாய்ப்புக்கள் ஏற்படும்.

# 10. குடும்பக் கடமை

பெற்றோர்களுக்கு எது பொருத்தமோ, அதே நிலை தான் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், அரசாங்கம் ஆகியவற்றுக்கும் பொருந்தும். ஏனென்றால், ஒரு சமூக நல ஆட்சியில், குழந்தைகளுக்குத் தேவையான வசதிகளை, இந்த அமைப்புக்களால், அவர்களுக்குப் பொது வசதிகளாக அளிக்கவேண்டும். தாய் சேய் நல விடுதிகள், ஆரம்பக் கல்வி மற்றும் பல்வேறுவகைப்பட்ட பள்ளிக்கூட வசதிகள் எல்லாம் செய்து தரப்படவேண்டும்.

## பாதியளவு ; ஆனால் நிறைந்த வசதி

ஐந்தாண்டு காலத்திற்குமட்டும் எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வி வசதிகள் செய்து தருதல், நாளொன்றுக்கு ஒரு வேளை உணவு பள்ளிச் சிறுவர்களுக்கு அளித்தல் என்ற இரண்டு வேலைகளையும் எடுத்துக் கொண்டு செய்யவேண்டும் என்று வரும் போதே, அதனால் ஏற்படும் சிரமங்கள் மிகவும் அதிகமாக உள்ளன என்பதை இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் உணரத் தொடங்கியுள்ளன. வேண்டிய பள்ளிக்கூட கட்டட வசதிகள், தேவைப் படுகிற ஆசிரியர்களை நியமித்தல் ஆகிய வேலைகளைச் செய்யப் போதிய பணவசதி இல்லை.

ஆனால், மேற்கத்திய நாடுகள் போல், ஒவ்வொரு வட்டாரத்தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் பிறக்கின்ற



குழந்தைகள் எண்ணிக்கை 3, 000லிருந்து 1,200ஆகக் குறைக்கப்பட்டால், இந்தச் சிரமங்கள் எல்லாம் அகன்று விடும். இன்று ஆரம்பப்பள்ளி வைக்க இடவசதி போதாத நிலையில் உள்ள கிராமப் பள்ளிக் கூடத்தில் உயர்தர ஆரம்பப்பள்ளி வைக்கும் அளவுக்கு இடவசதி இருப்பதை அப்பொழுது நாம் பார்க்கமுடியும். ஏனென்றால், எல்லாக் குழந்தைகளுமே சேர்க்கப்பட்டாலும் கூட, அப்பொழுது, இப்பொழுதுள்ளதைவிட ஒவ்வொரு வகுப்பிலும் பாதியளவுக்குக் குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள குழந்தைகள்தான் இருப்பார்கள். கல்விக்காக இப்பொழுது செலவிடப்படுகிற அதே அளவுள்ள பணத்தைக்கொண்டு, கிராமங்களில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இன்னும் அதிகப்படியான,உயர்ந்த கல்வி வசதியை அளிக்கமுடியும்.

## வாழ்க்கைத் தரத்தில் உயர்நிலை

இதனால், தொடர்ந்து நிறைவேற்றப்படுகிற ஐந்தாண்டுத் திட்டங்களினால் உருவாக்கப்படுகிற நல்ல வாய்ப்புக்களையும், நல்ல ஊதியம் அளிக்கிற வேலை வசதிகளையும், குழந்தைகள் பெறுவதற்கு இயலும். அத்துடன் மட்டுமல்லாமல் அளவான, சிறு குடும்பமாக வாழும் வழக்கத்தை மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும்பொழுது, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும்.

அப்படிப்பட்ட ஒரு நிலையில், மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை உத்தேசித்து, அதற்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இப்போது ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற வசதிகள், உழைப்பு அத்தனையையும், விவசாயம் சம்பந்தமில்லாத வருமானத்தையும், வேலை வசதிகளையும் பெருக்குகின்ற

வேறு திசைகளில் செலுத்த முடியும். மக்களின் வாழ்க்கைத்தர அளவில் ஓர் உயர்நிலை ஏற்படுத்த முடியும்.

### குடும்பக் கடமை

குடும்பக் கட்டுப்பாட்டிற்கான நடவடிக்கைகளைப் பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், இதன் நோக்கம் என்ன என்பதை எல்லோரும் உடனே புரிந்து கொள்கின்ற முறையில், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் விளக்கவேண்டியது' மிகவும் அவசியமாகிறது.

ஆகவே, அளவுள்ள குடும்பம், குடும்பக்கட்டுப்பாடு என்று இப்படிப் பேசுவது மட்டும் போதாது. இந்தக் கட்டுப்பாட்டின் அளவு என்ன?எவ்வளவு குறைந்த அளவுள்ள குடும்பம் இருந்தால் போதும்? சிறிய குடும்பத்திற்கும், பெரிய குடும்பத்திற்கும் உள்ள வித்தியாசம், மூன்றுக்கும் அதிகமாயுள்ள குழந்தைகளே என்பதைக் குறிப்பாக வற்புறுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ''சாதாரண பிறப்பு''க்களுக்கும், ''அதிகப்படியான பிறப்பு''க்களுக்கும் உள்ள வித்தியாசம் 3-க்கு அதிகமான குழந்தைகளே.

தேசிய ஐந்தாண்டுத் திட்டமானது, நாட்டிலிருந்து ஏழ்மையை ஒழிக்கவும், ஒவ்வொரு குடும்பமும் மகிழ்ச்சியாகவும், நலமாகவும் வாழ்வதற்காக வேண்டியும் இடையருமல் தொடர்ந்துபணிபுரிவதை இலட்சியமாகக் கொண்டுள்ளது என்பதை மக்களுக்கு விளக்கியாக வேண்டும். இந்தப் பணியானது பயனளிக்க வேண்டுமென்ருல், இந்த வேலையில் ஒவ்வொரு குடும்பமும் பங்கேற்றுக்கொண்டு, தன்னுடைய பங்கினைச் செய்தாக வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் நிறைவேற்றக்கூடிய பணி ஒன்றுள்ளது. ''அதிகப்படியான பிறப்பு''க்களைக் கட்டுப்படுத்துவதே இந்தப் பணியாகும்.

## 11. விளக்கப்பணி

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் அவசியத்தை விளக்கி, ''அதிகப்படியான பிறப்பு''க்களைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு குடும்பத்தைத் தூண்டுவதும், அதற்கான உதவிகளைச் செய்வதும், ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும். இத்துறையில் பஞ்சாயத்துக்களுக்குப் போதிய உற்சாகத்தையும், தூண்டுதலையும் ஊட்டி, வேண்டிய உதவிகளைச்செய்ய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனின் கடமையாகும்.

### சரியான தகவல் சேகரிப்பு

இந்தத் துறையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் ஒரு திட்டவட்டமான வேலைத் திட்டத்தை வகுத்துக்கொண்டு செயலில் இறங்கும் என்று உத்தேசித்தால், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவிற்குள் செய்யப் படவேண்டிய வேலைகள் என்னென்ன ? பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியன என்ன ? தம்முடைய அதிகாரத்திலுள்ள வட்டாரச் சிப்பந்திகளையும் சேர்த்துக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் என்ன செய்யவேண்டும் ? அரசாங்கத்தின் இலாக்காக்கள் சம்பந்தப்பட்ட துறைகள் என்ன செய்யவேண்டும் ?

முதல் வேலையாக, ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன்னுடைய பொறுப்பில் உள்ள பிரதேசத்தில்

உண்டாகின்ற பிறப்புக்களைப் பதிவு செய்வது தவறில்லாமலும், விட்டுப் போகாமலும் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளவேண்டும். இது உடனடியாகவும் மிகவும் அவசியமாகவும் செய்யப்படவேண்டிய ஒரு வேலையாகும்.

ஒவ்வொரு குழந்தை பிறந்ததும், அது உடனே அறிவிக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டம் உள்ளது என்றாலும், அனேக குழந்தைகள் பிறப்பதை அறிவிக்காமலேயே விட்டுவிடப்படுகிறது என்று முன்பே குறிப்பிட்டேன். பூர்த்தியடையாத அரைகுறையான பதிவு விவரங்களிலிருந்து சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் உபயோகமற்றவையாகப் போய்விடுகின்றன. இப்பொழுது பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும், நிறைவேற்றப்படவேண்டிய ஒரு வேலைத் திட்டத்தை வைத்துக் கொண்டிருப்பதில் அவைகளுடைய சொந்த உபயோகத்திற்கு ஒவ்வொரு குழந்தையின் பிறப்பு பற்றிய, தவறில்லாத, சரியான, முழு விவரமும் தேவைப்படும்.

## அடிப்படை விவரங்கள்

இதற்காக, ஒவ்வொரு குழந்தையின் பிறப்பையும் பதிவு செய்து, அந்தப் பதிவு விவரங்களின் பேரில் மாதாந்தர அறிக்கையைத் தயார் செய்கின்ற மணியக்காரர், அந்தப் பதிவேட்டையும், மாதாந்தரக் கணக்கையும், பஞ்சாயத்து மாதாந்தரக் கூட்டத்தில், பஞ்சாயத்தின் முன்னால் வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். ஒவ்வொரு மாதத்திற்கும் பதிவு செய்கின்ற விவரங்கள் குறைவாகத்தான் இருக்கும். பதிவேட்டில் பதியாமல் விட்டுப்போன குழந்தை—பிறப்பு ஏதாவது இருக்கிறதா என்பதை, பஞ்சாயத்து உறுப்பினர்கள் கிராமத்தைப் பற்றித் தங்களுக்குத் தெரிந்துள்ள விவரங்களிலிருந்து கண்டுபிடிக்க முடியும். குறிப்பாக பஞ்சாயத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெண் அங்கத்தினர் இந்த விஷயத்தில் போதிய விவரங்களைச் சேகரிக்கக்கூடும். அப்படி அவர்கள் சேகரிப்பதினால், இதற்கான பதிவேட்டைத் தவறில்லாமலும், அரை குறையாக விட்டுப்போகாமலும் வைத்துக் கொள்ள அவரால் உதவி புரிய முடியும்.



இந்த வழியில், திட்டவட்டமாக ஒரு நடவடிக்கை எடுப்பதற்கான அடிப்படை விவரங்கள் கிடைத்து விடும். மாதாமாதம், வருடா வருடம் இந்த விவரங்கள் தப்பில்லாமல், சரியாகச் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டால், திட்டத்தைச் செயல்படுத்தப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவும், இவற்றை அடைவதில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம் என்பதைக் கவனிக்கவும் சாத்தியமாகும்.

## கட்டுப்பாடு விளக்கம்

குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய வேலைகள் மூன்று பிரிவுகளாக உள்ளன. ஒன்று, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துச்சொல்லி அறிவுறுத்தல். இரண்டாவது இந்தத் திட்டத்தை ஏற்று நடக்க அவர்களை இணங்கச் செய்தல். மூன்றாவது அறுவை சிகிச்சை செய்தல். இதில் அறிவுறுத்தலுக்கான வேண்டியநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு (தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டுள்ள சிப்பந்திகளையும் சேர்த்து) பஞ்சாயத்து யூனியனுடையதாகும். திட்டத்திற்கு மக்களை இணங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் பஞ்சாயத்தினுடையது. அறுவை சிகிச்சை செய்து கொள்

வதற்கான வசதிகளை அளித்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அறிவுறுத்தல் இருவகையின்பாற்படும். ஒரு சாதாரண செய்தித்தாளைப் படித்து, புரிந்து கொள்கின்ற அளவுக்கு உள்ள மக்களுக்கு இது பற்றிய விவரங்களைச் சொல்லுதல், இந்த விஷயத்தில் தனக்குத்தானே நேரடியாகத் தெரிந்துகொள்ளுதல் சாத்தியமானது; போதுமானதுங்கூட. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள குடும்பக்கட்டுப்பாடு புத்தகத்தை அவர்கள் வாங்கிப் படிக்கும் வகையில் பஞ்சாயத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். 1961 ஜனவரி 30-ம் தேதி வரையில்மட்டும், இந்தப் புத்தகத்தில் சுமார் 4 லட்சம் பிரதிகள் வினியோகம் செய்யப்பட்டன. இந்தப் புத்தகத்தின் விலையை மிகவும் குறைவாக 12 காசுகளாக அரசாங்கம் வைத்துள்ளது. பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேவையான பிரதிகளை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது. அவர்கள் அந்தப் பிரதிகளைப் பெற்று பஞ்சாயத்துக்களுக்கு வழங்கலாம். பஞ்சாயத்துக்கள் அதை எழுதப் படிக்கத் தெரிந்த மக்களுக்கு வழங்கலாம்.

**வாய்மொழி மூலம்......**

கடந்த சில ஆண்டுகளில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகை அதிகமாயிருந்தாலும், பத்திரிகைகளைப் படித்துப் புரிந்து கொள்கின்ற மக்களின் எண்ணிக்கை, அப்படி முடியாதவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மிகவும் குறைவாகத்தான் உள்ளது. ஆகவே, குடும்பக்கட்டுப்பாடு புத்தகத்தில் சொல்லியுள்ளவற்றை, வாய்மொழி மூலமாகத்தான் அவர்களுக்குத் தெரிவிக்க முடியும். இதற்காக, தாய்மார்களுக்குத் தனியே விளக்கங்கள் செய்யவும்,



அதேபோல் தந்தைகளுக்குத் தனியே விளக்கங்கள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியம்.

இந்த வேலைகளைச் செய்வது பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்ய இலாயக்குள்ளவர்களாக யூனியனில் அதிகார வரம்பிற்குட்பட்ட பல்வேறு வகை சிப்பந்திகளில் ஒன்றுக்கு மேற்பட்ட வகையினராவது கண்டிப்பாக இருப்பார்கள். இதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறை ஏற்பாடுகள் மாநிலத்தில் எல்லா வட்டாரங்களிலும் ஒரேமாதிரி இருக்க வேண்டும் என்பதல்ல. அந்த அந்தப் பிரதேச நிலைமைகளுக்கேற்ப அவை கையாளப்படலாம்.

**இருவகை உதவி**

அறிவுறுத்தல் பணியைப் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி வைப்பதில், அவைகளுக்கு அரசாங்கத்தினிடமிருந்து இரண்டு வகையான உதவிகள் தேவைப்படலாம்.

முதலில், பஞ்சாயத்து யூனியன் இந்த வேலைக்காகத் தேர்ந்தெடுக்கிற பிரதேச சிப்பந்திகளுக்குப் போதிய பயிற்சி அளிக்க அரசாங்க இலாகா, துறைகள் ஏற்பாடு செய்யும். அரசாங்கம் முன்பே இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இந்த வசதிகளை மேலும் மேலும் விரிவாக்கிக் கொள்ளலாம். மாதர் பகுதி சம்பந்தப்பட்ட வரையில், தாய்-சேய் நல சம்பந்தமாகப் பணியாற்றும் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களை ஒருமுகப்படுத்தி இயக்குவிக்க வேண்டி, சமீபத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சமூக நல போர்டின்வசம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தாய்-சேய் நலத் திட்டங்களிலெல்லாம்

குடும்பக்கட்டுப்பாடு திட்டம் மிகவும் முககியமான ஒரு பங்கினைப் பெறும்.

இரண்டாவதாக, அறிவுறுத்தல் பணிக்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆகின்ற எல்லாச் செலவுத் தொகையும், மாநில அரசாங்கத்தினுல், பின்னுல் அதற்குத் திருப்பித்தரப்படும். இதற்காக வேண்டிய நிதி வசதிகள் மாநிலத் திட்டத்தில் செய் யப்பட்டுள்ளன.

## கட்டாயத்திற்கு இடமில்லை

இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதில், எந்தக் கட்டத்திலும், எந்தவிதமான கட்டாயத்திற்கும் இட மில்லை என்பதைத் தெளிவாகக்கொள்ள வேண்டும். விளக்கங்கள் பெறுதலில் கூட கட்டாயத்திற்கு இட மில்லை. ஆகவே, மூன்று வகையான ஏற்பாடுகளில் ஒரு முக்கிய அம்சமான 'இணங்கச் செய்தலுக்கு' தனி முக்கியத்துவம் உண்டு. இதைப் பற்றிய விளக்கங்கள் சொல்லுகின்ற கூட்டங்களில் தாய்மார்களும், தந்தை மார்களும் வந்து உடனே கலந்து கொள்ளும்படியான நிலையில், தன் பொறுப்பில் உள்ள மக்களிடையே ஒரு நல்ல பொது எண்ணத்தை உருவாக்கவும், அதற்குப் பழுதுவராமல் பார்த்துக்கொள்ளவும், அதற்கான சாத் தியக்கூறுன நடவடிக்கைகளை எடுப்பதும் பஞ்சா யத்தின் கடமையாகும்.

தாய்மார்களுக்கு விளக்கம் கூறுவது பற்றி ஓர் குறைந்தபட்ச வேலைத் திட்டத்தைப் பஞ்சாயத்தின் பெண் அங்கத்தினர் உருவாக்க வேண்டும். குழந்தை பிறப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்போ அல்லது பின்போ இந்தக்காலவரையறைக்குள், குழந்தை பெற்ற ஒவ்வொரு தாய்மாரும், குடும்பக் கட்டுப்பாடு பற்றிய



விளக்கங்களைத் தெரிந்துகொள்ளும் முறையில், இந்தக் குறைந்தபட்சத் திட்டமானது இருக்க வேண்டும். பிரசவ காலத்திற்கு முன்னும், அதன் பின்னும் கொடுக் கப்படும் யோசனைகளில் ஒரு பகுதியாகக் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விளக்கங்களையும், முறைகளை யும் பற்றிச் சொல்ல வேண்டும்.

### ஆபத்தில்லாத சிகிச்சை

முதலில்,குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வதற்குரிய சிறந்த வழி, வேண்டிய குழந்தைகள் பிறந்த பிறகு, அறுவை சிகிச்சை செய்து கொள்வதுதான் என்பதை ஒவ்வொரு குடும்பமும், உறுதியாக அறிந்து கொள்கின்ற முறையில் அறிவுறுத்த பஞ்சாயத்து ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கடந்த இருபதாண்டுகளில் இந்த மாநிலத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் வழக்கம், அதுவும் குறிப்பாக தந்தைமார்கள் செய்துகொள்வது, மெள்ள மெள்ள அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. இந்தக் கால எல்லையில், நாடு பூராவிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அறுவை சிகிச்சைசெய்து கொண்டுள்ளார்கள். இந்த முறையில் ஒருவித அபாயமும் கிடையாது. பல ஆண்டுகளுக்குத், தொடர்ந்து கையாளப்பட வேண்டிய வேறு முறைகளைப் போல் அல்லாமல் இந்த முறையினால் ஒரே தடவையிலேயே காரியம் சித்தியாகிவிடுகிறது.

### அனுபவத்தில் மகிழ்ச்சி

அறுவை சிச்சை முறை எந்தவித ஆபத்துமில்லாதது என்பதும்,மிகவும் சுலபமானது என்பதும் கடந்த ஐந்தாண்டுகளாகத்தான் பெருவாரியான மக்களால் உணரப்பட்டு வருகின்றன.

அப்படிப்பட்ட அனுபவத்தின் பேரில் சொல்லப் படுபவை சரியாகத்தானிருக்கும் என்று ஒப்புக் கொள்வது ஒருவிஷயம்.ஆனால், அந்த அடிப்படையை வைத்து நாமே அப்படிச் செய்துகொள்வது என்பது வேறு விஷயம். தனிப்பட்ட முறையில் மக்கள் ஒரு முடிவுக்கு வந்து, காரியத்தில் இறங்குகின்ற அளவுக்கு



குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக மக்களை இணங்கச் செய்வதும், அதற்கான விளக்கங்களை அவர்கள் பெறும்படிச் செய்தலும் முதல் கட்டத்தில் செய்கின்ற வேலைகள் தாம்.

### சிரமமான வேலை

அடுத்தபடியாகச் செய்ய வேண்டியது, இப்படிச் சிபார்சு செய்யப்பட்ட முறைகளைக் கையாளும்படி மக்களை இணங்கச் செய்தலே. இது முன்னையதை விட மிகவும் சிரமமான வேலை. இப்படி இணங்கச் செய்தலும் ஒரு வரையறைக் குட்பட்டுத்தான் செய்ய முடியும். அப்படி இருந்தபோதிலும், அப்படி மக்களை இணங்க வைக்கும்போது, குடும்பக் கட்டுப்பாடுமுறையில் மிக முக்கியமான அம்சமான அறுவை சிகிச்சை செய்து கொள்ளுகின்ற ஆர்வத்தை மக்களிடையே தூண்டி, அதை அவர்கள் செய்து கொள்ளுகின்ற வகையில், திட்டமிட்ட முறையில் இந்த வேலையானது செய்யப்பட வேண்டும்.

இந்தக் காரியத்தில், மக்களை இணங்கச் செய்து வெற்றிகரமாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஒவ்வொரு பஞ்சாயத்தும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

ஜனங்களிடையே ஓர் உறுதிப்பாட்டினை உண்டாக்கு கின்ற அளவுக்குக் கொண்டு வருவதற்குச் சிறந்த வழி என்னவென்றால், ஒவ்வொரு கிராமத்திலும், தங்கள் நண்பர்களுக்கு, சுற்றத்தார்களுக்கு, அக்கம்பக்கத்தி லுள்ளவர்களுக்குத் தெரிந்த இரண்டு, மூன்று பேர்கள் அறுவை சிகிச்சை செய்துகொண்டு, அவர்கள் அனுப வத்தில் எல்லா வகைகளிலும் பூரண மகிழ்ச்சியுடன் உள்ளனர் என்ற நிலையை ஒவ்வொரு கிராமத்திலும் உண்டாக்குவதுதான்.

அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன் வருபவர் களுக்கு எல்லா வகைகளிலும் போதிய வசதிகளைச் செய்து தந்து, ஊக்குவிக்கின்ற முறையில் உள்ள ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளதற்கு இதுவே காரணமாகும். இந்தத் திட்டத்தின் நோக்கம், மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் இப்படி அறுவை சிகிச்சையை ஆரம்பமாகச் செய்து கொண்ட வர்கள் 250 பேராவது இருக்கின்ற நிலை ஏற்பட வேண் டும் என்பதே. இவர்களில் ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்தவர் சில பேராவது கண்டிப்பாக இருப்பார்கள்.

## இணைந்த செயல்

சமீப காலமாகக் கிடைக்கின்ற விவரங்களி லிருந்து இந்தத் திட்டத்திற்கு நல்ல ஆதரவு இருக் கிறது; நல்ல முன்னேற்றத்தை அடைந்து வருகிறது என்று தெரியவருகிறது. தன்னுடைய பொறுப்பில் உள்ள வட்டாரத்தில் இந்தத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது, அடைந்துள்ள முன்னேற்றம் என்ன என்பதைப் பற்றி இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் கவனித்துப் பார்க்க வேண்டி யது அவசியமாகிறது.



ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள 250 என்ற எண்ணிக்கையில் சம்பந்தப்பட்ட ஒவ் வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு தனி விகிதாச்சாரம் ஒதுக்கப்படும். அப்படி ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை யுள்ள பேர் முன் வந்து அறுவை சிகிச்சை செய்து கொள்ளவும், மற்ற மக்களுக்கும் இந்த வழியை வெகு விரைவில் பின்பற்றும் வகையிலும் இணைந்து செயலாற்ற பஞ்சாயத்து எல்லா வகையான முயற்சி களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட முன்னோடியாக விளங்கும் இந்த அறுவை சிகிச்சைத் திட்டம் ஒவ்வொரு வட்டாரத்தி லுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நிறைவேற்றி வைக்கப்பட்டால், ஓராண்டுக்குள்ளாக அல்லது அதற்குச் சற்றுக் கழித்தோ, அதனால் ஏற்படுகின்ற பயன் தெளிவாகத் தெரியும். ஆரம்பத்தில் இருந்த மாதிரி இந்த இணங்கச் செய்தல் வேலை அவ்வளவு சிரமமாக இல்லாமல் மிகவும் லேசான ஒன்றாக மாறி விடுவதைப் பஞ்சாயத்து தெரிந்து கொள்ளும்.

## வழக்கமான வேலைகளில் ஒன்று

அதிகப்படியான மக்கள், குறைந்தபட்ச முயற்சி யின் பேரில் அதிகமாகக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத் தில் கலந்து கொள்வதைப் பார்க்க முடியும். அதற்குப் பிறகு செய்ய வேண்டியதெல்லாம், ஜனங்களுக்கு இதைப்பற்றி முறையாக நினைவு படுத்திக் கொண் டிருக்கும் வேலைதான். இதைச் செய்வதற்குச் சிறந்த வழி, முன்பே சொன்னமாதிரி இந்த இணங்கச் செய்தல் முயற்சியை, மாதந்தோறும் பிறப்புக்களைப் பற்றிய மாதாந்திர பரிசீலனை வேலையோடு சேர்த்து, அதைப் பஞ்சாயத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும்

செய்யப்பட வேண்டிய வழக்கமான வேலைகளில் ஒன்ருகச் செய்துவிடுவதுதான்.

அதிகப்படியான அளவில் பிறப்புக்கள் இருக்கின்ற ஒவ்வொரு விஷயத்திலும், சம்பந்தப்பட்ட தந்தையைத் தனிப்பட்ட முறையில் அணுகி, அவரை வேண்டிக்கொள்ளும்படியான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும், மற்றபடி தானே முன்வந்து அறுவை சிகிச்சை செய்து கொள்ள வரும் சந்தர்ப்பங்களிலும், வட்டார சிப்பந்திகள், அறுவை சிகிச்சையை அவர்கள் செய்து கொள்வதற்கு வேண்டிய எல்லா வகைகள் செய்து கொள்வதற்கு வேண்டிய எல்லா வகையான ஏற்பாடுகளையும் வட்டாரத்தில் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ மனையுடன் கலந்து செய்து, அறுவை சிகிச்சை செய்துமுடிக்கப்படுகின்ற வகையில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

## குன்ருத முயற்சி

வருடந்தோறும் ஒருநாளை 'குடும்ப நல தினம்' ஆக, கொண்டாடப்பட வேண்டும். அந்தத் தினத்தன்று, இந்தத் திட்டமானது மக்களுக்கு விளக்கிச் சொல்லப்பட வேண்டும். கடந்த ஆண்டில் அடைந்துள்ள சாதனையைப் பற்றி பொதுமக்கள் முன்னிலையில் மதிப்பிட வேண்டும். வருகின்ற ஆண்டில், திட்டத்தை மேன்மேலும் வெற்றிகரமாக நடத்தி வைக்கும் வகையில் மக்களுடைய ஒத்துழைப்பானது பெறப்பட வேண்டும். மூன்ருவது திட்டக் காலம் பூராவும் இந்த முறையில் இந்த முயற்சியானது குன்ருமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதிகப்படியான, வளருகின்ற தேவைக்கேற்ப, அறுவை சிகிச்சை வசதிகளைக் கடந்த சில ஆண்டு



களாக அரசாங்கம் அதிகப்படுத்திக் கொண்டே வந்திருக்கின்றது. மாநிலத்தில் ஒவ்வொரு தாலுக்காவிலும், இந்த வசதிகள் (முன்பே அப்படியில்லாத இடங்களில் வெகு விரைவில்) கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளன. பயிற்சித் திட்டம் விஸ்தரிக்கப்படும் பொழுது, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், தந்தையர்களுக்கு அறுவை சிகிச்சை செய்கின்ற வசதிகள் செய்ய இயலும்.

அறுவை சிகிச்சை வசதிகள் பற்றிய தேவைகளை கிராம மக்கள் எவ்வளவு ஊக்கத்துடன், உற்சாகத்துடன் வளர்த்துக் கொள்கிருர்களோ, அந்த அளவுக்குப் போதிய தேவைகளை அரசாங்கம் கண்டிப்பாகப் பூர்த்தி செய்யும் என்ற முழு நம்பிக்கையை கிராம மக்கள் பெறலாம் என்ற அடிப்படையைச் சொல்லி மக்களை இணங்கச் செய்கின்ற பணியை மேலும் அதிகமாகப் பஞ்சாயத்து செய்யலாம்.

## ஆயிரத்தில் ஐந்து பேர்

இந்தத் திட்டமானது முழு வேகத்துடன் வேலை செய்யும் பொழுது, ஓராண்டுக்கு ஆயிரத்திற்கு 5 பேர் என்ற விகிதத்தில் அறுவை சிகிச்சை நடைபெற வேண்டியது அவசியம் என்ற நிலை உண்டாகிவிடும். அதாவது, சராசரியாக அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் இந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஓராண்டுக்கு 10 பேர்களும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஓராண்டுக்கு 400 பேர்களும் என்ற நிலையிருக்கும்.

மூன்ருவது ஐந்தாண்டுக் கால முடிவிற்குள் அடைய வேண்டிய எண்ணிக்கை என்று, தனக்கென்று ஒரு இலக்கை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் கைக்கொள்வது மிகவும் நலமாக இருக்கும்.

## சம்பிரதாய சம்பவம்

இந்த வேலை கடுமையான வேலைதான். ஆனால், சிறிது காலத்திற்குத்தான் இந்த வேலை கடுமையாகத் தோன்றும். அதன் பிறகு இதற்காக விசேஷ உற்சாக மளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசிய மிருக்காது. அறுவை. சிகிச்சை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி ஆயிரம் பேர்களுக்கு, ஆண்டொன்றுக்கு 5 பேர்கள் என்ற விகிதத்தை அடைந்து விட்டால் இந்த வேலை சம்பந்தப்பட்ட வகையில் பஞ்சாயத்தின் வேலை முடிவடைந்து விட்டது என்று கருதலாம்.

அதிகப்படியான பிறப்புக்கள் இருக்கின்ற நிலையானது முடிந்து, ஏற்படுகின்ற பெரிய நிம்மதியானது, தனிப்பட்ட அனுபவத்தின்பேரில் கிடைக்கின்ற ஒரு விஷயமாகி விடும். வேண்டாத அளவில் குழந்தைகளைப் பெறுதலிலிருந்து பெண்கள் விடுதலை பெறுவார்கள். இதன் விளைவாக, ஒரு புதிய சுதந்தர உரிமையை அவர்கள் உணர்கின்ற நிலைமை ஏற்படும். சிறு அளவுள்ள குடும்பங்கள் சமுதாயத்தில் சகஜமாகி வேரூன்றி விட்டிருக்கும்.

இப்படிச் சிறிய அளவுள்ள குடும்பங்கள் ஏற்பட்ட பிறகு, தாமாகவே அருகிலுள்ள மருத்துவ மனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்து கொள்வது என்பதை வாழ்க்கையில் ஏதோ சம்பிரதாயமான சம்பவமாகவும், ஒரு சாதாரண விஷயமாகவும் மக்கள் கருதத் தொடங்கி விடுவார்கள். மாநிலத்தின் பொது சுகாதார வேலைத்திட்டம் போலவே, அம்மைக் குத்துதல், நோய்களைத் தடுக்க ஊசி குத்துதல் போன்று அறுவை சிகிச்சை முறையையும் ஏதோ ஒரு சாதாரண, அன்றாட சிகிச்சையாகக் கொள்ளப்படுகின்ற நிலைமை வந்துவிடும்.



## பயன்தரும் புரட்சி

தமிழ் நாட்டில் உள்ள 12,540 பஞ்சாயத்துக்களும், 373 பஞ்சாயத்து யூனியன்களும் செயலாற்ற வேண்டிய திட்டம் இதுதான். வரலாற்றிலே இப்படிப் பட்ட ஒரு திட்டத்திற்கு முன் மாதிரியே இல்லை. இதை வெற்றிகரமாக நடத்தி வைப்பதின் மூலம், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் பதவியேற்றுள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்கள் ஒரு புதிய வரலாற்றையே உருவாக்குவார்கள்.

தங்களைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்தமக்களின் வாழ்க்கையிலே ஒரு புரட்சி ஏற்படுவதை அவர்கள் கண்ணுறுவார்கள். உருவாகின்ற புதிய பரம்பரையைச் சேர்ந்த எண்ணில்லா இளஞ்சிறுர்களுக்கும், இளஞ்சிறுமியர்களுக்கும், அவர்களைப் பெற்ற தாய், தந்தையர்களுக்கும், எல்லோருக்கும், மகிழ்ச்சியையும், செழிப்பையும் அளிக்கின்ற மகத்தானதொரு பயன் விளைவிக்கின்ற புரட்சி அது.

## 13. காட்டுச் செல்வம்

காடுகள் நமது தேசியச் செல்வமாக விளங்குவதையும், அதனால் காடுகள் பராமரிப்புக் கொள்கை நமது ராஜ்யத்திற்குச் சமீப காலத்திலும், நீண்டகால அடிப்படையிலும் எவ்வாறு தக்க முறையில் பயன்படவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

### குறைந்தபட்ச அளவைவிட...

ராஜ்ய பிரிவினைகளுக்குப் பிறகு, சென்னை ராஜ்யத்தில் சுமார் 6,750 சதுர மைல்கள் பரப்புள்ள பாதுகாக்கப்பட்ட (ரிசர்வ்) காடுகள்தான் உள்ளன. அதாவது ராஜ்யத்தின் மொத்தப் பரப்பில் காடுகளின் அளவு 13.4 சதவிகிதம்தான் இருக்கிறது. தேசியக் காடுகள், கொள்கை அடிப்படையில் 33 1/3 சதவீதம் அதாவது மூன்றில் ஒரு பாகம் காட்டு வளம் உள்ளதாக இருக்கவேண்டும். ஆகவே நமது ராஜ்யத்தில் காட்டு வளம் இருக்கவேண்டிய குறைந்த பட்ச அளவுக்கு 20 சத வீதம் குறைந்தே இருக்கிறது. அதனால் ஏற்கெனவே இருக்கும் காட்டு வளத்தைப் பாதுகாக்கவும், மேலும் காட்டு வளத்தை அதிகரிக்கவும் தகக நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கின்றன.

மாஜி ஜமீன் பிரதேசங்களான சுமார் 1,416 சதுர மைல் பரப்புள்ள காடுகளைக் காட்டிலாகா தன் மேற்



பார்வையின் கீழ் எடுத்துக்கொண்டு, அவைகளைப் பாதுகாக்கப்பட்ட (ரிசர்வ்) காடுகளாக அமைக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதல்லாமல் நீலகிரி ஜில்லாவில் சுமார் 12 சதுர மைல் பரப்புள்ள பாதுகாக்கப்படாத காடுகளைக் காட்டிலாகா தன் மேற்பார்வையில் எடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

காட்டுவளத்தைச் சீர்திருத்துவதும், மேற்கொண்டு காட்டு வளத்தை அதிகப்படுத்த வேண்டியதும் மிக அவசியம் என்று அரசாங்கம் உணர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாகக் காட்டு வளத்தை மேம்படுத்தப் பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. பல திட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைந்தே தீரவேண்டும் என்னும் நோக்கத்தோடு காட்டிலாகாவும் முழு மூச்சுடன் இத்திட்டங்களை நடத்தி வருகிறது.

### அரசாங்க திட்டங்கள்

காட்டு வளத்தை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட சில திட்டங்களை இங்கு விவரிப்பது பொருத்தமெனக் கருதி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இத்திட்டங்கள் மேலும் தொடர்ந்து நடத்தப் படுகின்றன :

1. மண் அரிப்பு ஏற்பட்ட பிரதேசங்களில் காடுகளை வளர்த்துப்பாதுகாத்தல் (பாதுகாக்கப்பட்ட காடுகளின் வெளிப்புறத்திலுள்ள மண் அரிக்கப்பட்ட பிரதேசங்களை சர்வே செய்வதும் இதில் அடங்கியிருக்கிறது).

2. அழிக்கப்பட்ட காடுகளை மீண்டும் வளப் படுத்துதல்.

3. சில பாதுகாக்கப்பட்ட காடுகளில் முந் திரி செடிகளை வளர்த்தல்.

4. நல்ல விலை போகும் மரங்களை வளர்க்கும் பிரதேசங்களை மேலும் அதிகப்படுத்துவது.

5. தீப்பெட்டி தொழிலுக்கு வேண்டிய மரங்களை மேலும் அதிகரித்தல்.

6. வாட்டில், ப்ளுகம் போன்ற தொழில் முக்கியத்துவம் வாய்ந்த மரம் வளர்ப்புப் பிரதேசங்களை உண்டாக்குதல்.

7. சவுக்குத் தோப்புகளை இன்னும் அதிகப் படுத்தல்.

8. ஆறு, கால்வாய், ஏரி படுகைகளில் காடுகளை வளர்த்தல்.

9. அரக்கு உற்பத்தியை மேலும் ராஜ்யத்தில் விஸ்தரிப்பது.

10. வன விலங்குகளைப் பாதுகாப்பது.

11. கால்நடை தீவன கிடங்குகளை ஆரம்பிப்பது, மேய்ப்பு நிலங்களை அபிவிருத்தி செய்வது.

## நல்ல கிராக்கி

மாஜி பஞ்சாயத்துக்காடுகளை மீண்டும் வளமுள்ளதாகச் செய்ய விறகு, கால்நடைத் தீவனம் முதலியன கிடைக்கக்கூடிய மரங்களை வளர்க்க ஒரு திட்டமிடப்பட்டு, சுமார் 9,000 ஏக்கர்களில் ஆரம்ப வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. சுமார் 2,759 ஏக்கர்களில் மரங்கள் நடப்பட்டுவிட்டன. இதனால் காற்றினாலும், நீர் அரிப்பினாலும் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதோடு மண் வளத்தைப் பாதுகாக்கவும் முடியும். மண் அரிப்பு நிலங்களைச் சர்வே செய்யும் திட்டத்தின்கீழ்



சுமார் 7,047 ஏக்கர்களில் சர்வே முடிந்திருக்கிறது. செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் ஆகிய ஜில்லாக்களில் வறண்ட நிலக்காடுகளை வளர்க்கும் திட்டத்தின்கீழ் சுமார் 20,500 ஏக்கர் நிலப் பரப்பில் காடுகளை மீண்டும் வளர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லாவில் மேய்ப்பு நிலமாகவும், விறகு கிடைக்கும்படியாகவும் இரு தேவைகளைப் பூர்த்தி செய்ய சுமார் 3,750 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்யப்படுகிறது.

வாசனைப் பொருள்கள் விசாரணைக் கமிட்டியார் சிபார்சு செய்த சில திட்டங்களின்படி, முந்திரி மரங்களை ஏராளமாக வளர்க்க ஒரு பெருந் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முந்திரிபருப்புக்கும், முந்திரி எண்ணெய்க்கும் நல்ல கிராக்கி இருப்பதினால் இவைகளின் மூலமாக இன்னும் சில ஆண்டுகளில் நமக்கு அயல்நாட்டுச் செலாவணி அதிகம் கிடைக்க வழிகள் ஏற்படுமென்று நம்பப்படுகிறது.

## தொழிலுக்கு உதவி

விலையுயர்ந்த தேக்கு போன்ற மரங்களைப் பயிரிடவும் காட்டிலாகா ஒரு திட்டத்தை வகுத்து நடத்தி வருகிறது. கட்டட வேலைக்கான உறுதியான மரங்கள் அதிகப்படியாகக் கிடைக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் இத்திட்டம் வகுக்கப்பட்டது. 1956-57-ஆம் ஆண்டின்போது 398 ஏக்கர் நிலப் பரப்பில் தேக்கு பயிரிடப்பட்டது. மேலும் 105 ஏக்கர்களில் மூங்கில்கள் பயிரிடப்பட்டன. மேற்கொண்டு சுமார் 580 ஏக்கர்களில் தேக்கும் மற்றும் உறுதியான மர வகைகளும், சுமார் 120 ஏக்கர்களில் மூங்கில்களும் பயிரிடப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர்ஜில்லாவில் சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் பாசனவசதி

செய்து தேக்கு மரங்களைப் பயிரிடவும் ஒருதிட்டம் உத்தேசிக்கப்பட்டு வருகிறது.

தீப்பெட்டி தொழிலுக்கும் பிளைவுட் தொழிலுக்கும் வேண்டிய மிருதுவான மரவகைகளின் தேவை அதிகரித்து இருக்கிறது. தற்போது இம் மர வகைகள் அதிகப்படியாக அந்தமான் தீவுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. ராஜ்யப் பிரிவினைக்குப் பிறகு நிலைமை இன்னும் கஷ்டமாக இருக்கிறது. ஆகையினால் தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய மர வகைகளைப் பயிரிட ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சுமார் 1,550 ஏக்கர் நிலப்பரப்பில் இது மேலும் பயிரிடப்படுகிறது.

### காகிதம், ரேயான்

மதுரை, நீலகிரி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய ஜில்லாக்களில் சுமார் 2,500 ஏக்கர் நிலப்பரப்பில் வாட்டில் மரங்களை வளர்க்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் 575 ஏக்கர்களுக்கு மேல் ப்ளூகம் மரங்களை வளர்க்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. தோல் பதனிடும் தொழிலுக்கு வேண்டிய ஒருவித "டானின்" என்ற எண்ணெய், வாட்டில் மரப்பட்டையில் இருந்து கிடைக்கிறது. ப்ளூகம் மரத்திலிருந்து "நீலகிரித் தைலம்" என்று வழங்கப்படும் தைலம் கிடைக்கிறது.

வாட்டில் மரத்திலும் ப்ளூகம் மரத்திலும் நல்ல விறகுகிடைக்கிறது. இந்த மரங்களின் மரக்கூழிலிருந்து பத்திரிகைக் காகிதம் செய்யவும், ரேயான் நூல் தயாரிக்கவும் முடியும். மேட்டூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பத்திரிகை காகிதம், ரேயான் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மரங்களை சப்ளை செய்வதற்கு



இந்த மரத் தோட்டங்கள் மிகவும் பயனுள்ளதாய் உள்ளன.

### நீரோட்டத்தைக் கட்டுப்படுத்த...

நகர்ப் புறங்களில் விறகுத் தேவை அதிகரித்து வருவதைப் பூர்த்தி செய்யவும், கடலோரங்களிலும், ஆற்றுப்படுகைகளிலும் மணல் வெளியைத் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் பொருட்டும், காட்டிலாகா சவுக்குத் தோப்புகளை வளர்த்து வருகிறது. 1956-57-ம் ஆண்டில் சுமார் 239 ஏக்கர்களில் சவுக்கு பயிரிடப்பட்டது. அடுத்த ஆண்டு 825 ஏக்கர்களில் சவுக்கு பயிரிடப்பட்டது. நீரோட்டத்தினால் ஆற்றங்கரைகள் அரித்துப்போகாமல் இருக்கவும், நீரோட்டத்தைக் கட்டுப்படுத்தவும், ஏரிகளிலும் குளங்களிலும் வண்டல் படிந்து தூர் விழாமல் தடுக்கும் பொருட்டும் காவிரி, பாலாறு, பெண்ணாறு, தாமிரபரணி, வைகை ஆகிய ஆற்றுப்படுகைகளில் மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கீழ் முகப் பிரதேசங்களிலும் மரங்கள் நடப்படும். சுமார் 130 ஏக்கர்களில் ஏற்கெனவே தேக்கு பயிரிடப்பட்டிருக்கிறது. இன்னும் 2,300 ஏக்கரில் தேக்கு நடப்பட்டுவருகிறது.

### வர்த்தகப் பொருள்

அரக்கு ஒரு முக்கியமான வர்த்தகப் பொருளாக இருப்பதாலும், அதன்மூலம் பலவகைப்பட்ட பொருள்களைச் செய்ய வழி இருப்பதாலும், அரக்கு உற்பத்தியை அதிகரிக்க ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் இரண்டு வளர்ப்புப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு 100 மரங்களுக்கு ஊசி குத்தப்பட்டிருக்கிறது. மதுரை ஜில்லாவில் அரக்கு

உற்பத்தியைக் கணிசமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

வன விலங்குகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற தேசிய வனக் கொள்கையின் அடிப்படையில் முதுமலை வனவிலங்கு புகலிடத்தை அபிவிருத்தி செய்துள்ளது. காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதைத் தடுக்கும் பொருட்டு இரண்டு விசேஷ நடமாடும் கோஷ்டிகள் வேலை பார்த்து வருகின்றன. இந்த நடமாடும் கோஷ்டியார் திடீர் என்று காட்டுப் பிரதேசத்திற்கு விஜயம் செய்வதையொட்டி காடுகளைப் பாதுகாக்கும் சிப்பந்திகளும் விழிப்பாக இருக்க உதவியாக இருக்கிறது.

பொதுமக்களின் நன்மைகளை உத்தேசித்துத் தனிப்பட்டவர்கள் வசமுள்ள காடுகளும் தராதரமின்றி அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்பதும், திட்டமிட்டபடி மரங்கள் வெட்டப்படவேண்டும் என்பதும் அரசாங்கத்தின் கொள்கை. இந்த நோக்கத்துடனேயே சென்னை தனிப்பட்ட காடுகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இது பயனுள்ள வகையில் அமுலாக்கப்பட்டு வருகிறது.

**மொபைல் பார்ட்டி**

இந்த ராஜ்யத்தில் காட்டுவளம் வெகுவாக அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. விவசாயத் துறைக்கும், தொழில் பொருளாதார மேம்பாட்டிற்கும் காட்டு வளம் மிகவும் அவசியம்.

காட்டு இலாகாவைப் பொறுத்தமட்டில் குறைகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. கீழ்த்தர சிப்பந்திகள் தவறுதலாக நடந்து கொள்வது பற்றி குறிப்பிடப்படுகிறது. அதற்கு அவர்கள் குறைந்த சம்பளம்



வாங்குவதே காரணம் என்று சொல்கிறார்கள். சம்பளத்திற்கும், தவறுதலாக நடந்துகொள்வதற்கும் அதிக சம்பந்தம் இல்லை என்றுதான் நான் கூறுவேன். அப்போதைக்கப்போது கீழ்த்தர சிப்பந்திகளின் சம்பளம் பற்றியும், மற்ற வசதிகள் பற்றியும் கவனிக்கப்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் கூடியவரையிலே லஞ்சம், மற்ற குறைபாடுகள் எல்லாவற்றையும் தவிர்ப்பதற்கு, இந்த இலாகா நிர்வாகத்தில் உள்ள லஞ்சம் போன்ற மற்ற குறைபாடுகளை நீக்க கண்டிப்பான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. காடுகளில் அதிகமாக மரங்கள் வெட்டப்படுகிறது என்றால் அதைத் தவிர்ப்பதற்காகத்தான் ஒரு மொபைல் பார்ட்டி வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் கண்காணிப்பு இருந்துகொண்டுதான் வருகிறது.

வனமகோற்சவம் என்ற பெயர் பெரியதாக இருப்பதனால் ஒரு தவறுதலான அபிப்பிராயம் இருக்கிறது என்று கருதுகிறேன். வனமகோற்சவம் என்றால், சர்க்கார் லட்சக்கணக்கான பணம் ஒதுக்கிவிட்டு செடிகளை வாங்கி, மொத்தமாகக் கொண்டு வந்து அவைகளை ஒரு நாள் நட்டு விட்டுத் தண்ணீர் வார்த்து விட்டுப் பின் திரும்பிப் பாராமல் போய் விடுவது என்பதுஅல்ல. அவ்வாறு அநேகர் தவறாக நினைத்துக் கொண்டிருப்பதாக எனக்குப் புலப்படுகிறது.

**வனமகோற்சவம்**

வனமகோற்சவம் என்பது,வனத்தின் அருமையை, அதனால் ஏற்படும் பலனை மக்கள் அறியச் செய்வது என்பதுதான் அதன் உத்தேசம். மக்கள் தங்களால் இயன்ற அளவு செடிகளை வைத்துப் பாதுகாத்து, அதற்குப் பொதுமக்களிடையே ஒரு ஊக்கத்தை அளிப்

பதும், அதை பரவச் செய்வதுமே இந்த வனமகோற்சவத்தின் நோக்கமாகும்.

இதற்காகச் சர்க்கார் ஒன்றும் அதிகப்பணம் செலவு செய்யவில்லை. பெயர் பெரிய பெயராய் இருந்தாலும், சர்க்கார் ஒரு ஆயிரம் ருபாய் கூட நேரிடையாகச் செலவு செய்வதில்லை. தனி நபர்களை செடி கொடிகளை வையுங்கள், தோட்டங்களை அதிகப்படுத்துங்கள், மரங்களை வளரச் செய்யுங்கள், என்றெல்லாம் வற்புறுத்தும் வகையில்தான் இந்த விழா நடத்தப்படுகிறதே தவிர, வேறொன்றும் அல்ல.

**மரம் வெட்டு விழா**

மரம் வெட்டு விழா நடத்த வேண்டுமென்றால், அது, முன் காலத்தில் நடத்தப்பட்டிருக்கலாம். அப்பொழுது காடுகள் அதிகமாக இருந்து, நாட்டு மக்கள் வாழ அக்காடுகளை வெட்டியிருக்கலாம். ஆனால் இன்று அப்படி ஒரு வாரம் போட்டால் எல்லாக்காடுகளும் அந்த வாரத்திலே அழிந்து விடும். இப்பொழுது காடுகளை எவ்வாறு பாதுகாப்பது என்பதில்தான் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

காட்டு மரங்களை ஏலத்தில் விட்டால் பெரிய பணக்காரர்கள்தான் ஏலம் பிடிக்கிறார்கள். ஆகவே, நேரிடையாக மரங்களை எல்லாம் இலாகாவே விற்றால் என்ன என்று கேட்கப்படுகிறது. சாதாரணமாக சிறு சிறு விவசாயிகள், 5 அல்லது 10 ஏக்கர் சவுக்குத் தோப்புப் போட்டிருந்தால், அந்த விவசாயி கூட நேரிடையாக மரத்தை வெட்டித் தானாக விலைக்குக் கொடுப்பது கிடையாது. அதை மொத்தமாகவே விற்கிறான். நேரிடையாக மரத்தை வெட்டி, அதை நேரிடையாக விற்பது என்பது பலனளிக்காது. அதைச் சிறு சிறு விவசாயிகளும் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறார்கள்.



அரசாங்கமும் அதை உணர்ந்திருக்கிறது. ஆகவே "கூப்" பாக பிரித்துக் கொடுக்கிறோம். பணக்காரர்கள் மாத்திரம் அல்லாமல் சாதாரண மக்களும் வாங்கும்படி, கூடிய அளவு குறைத்துத்தான் கொடுக்கிறோம்.

**பறிபோகவில்லை**

கோடைக்கானலில் பைன் மரங்கள் என்று ஒருவகை இருக்கின்றன. அவைகள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவை. ஆனால் இவைகள் மேலும் மேலும் வளர்க்கப்படுவதில்லை. இந்த மரங்கள் விறகிற்குத்தான் உபயோகம் என்று தெரிந்தது. அதற்கு ஒரு ஜீவியகாலம் உண்டு. அவைகள் ஒவ்வொன்றாக மடிய ஆரம்பித்துவிடும். அவைகள் பட்டுப்போனால், விலை மதிப்பில்லை. அவைகள் மடிகின்ற காலம் வந்துவிட்டது என்று தெரிந்தது. அப்போது சென்னையில் ஸைக்கிள் பாக்டரி வைத்திருக்கிறவர்களுக்கு இந்தப் பைன் மரங்கள் வேண்டியிருந்தது. இவைகள் ஸைக்கிளின் ஒரு பாகத்திற்குத் தேவையாயிருந்தது. அதை எடுத்துக் கொள்கிறோம் என்றுசொன்னார்கள். ஒரு பகுதியை விலை பேசி,மடியக் கூடிய நிலையில் உள்ள மரங்கள் விற்கப்பட்டன. இவைகளை ஏலத்தில் விட்டால் விறகிற்குத்தான் வாங்குவார்கள். அதுவும் மிகவும் குறைந்த விலையில்தான் வாங்குவார்கள். பைன் மரங்கள் பறிபோகிறது என்று கிளர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. பைன் மரங்களை அடியோடு எடுத்துவிடவில்லை. ஒரு பகுதிதான் கொடுக்கப்பட்டது. அப்படி அவைகள் கொடுக்கப்படாவிட்டால் பயனற்றதாகத்தான் ஆகியிருக்கும். பைன் மரங்களில் சிறந்தவகையைப் பயிரிட ஒரு திட்டத்தின் மீது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

### நாடாறு மாதம், காடாறு மாதம்

'நாடாறு மாதம், காடாறு மாதம்' என்று சொல்வார்கள். முன்பெல்லாம்—அந்தக் காலத்திலே—அரசர்கள் ஆண்ட காலத்திலே—அவர்கள் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார்கள். வன விலங்குகளைப் பரிபாலிப்பதைத் திட்டத்திலே சேர்த்திருக்கிறோம். ஆகையால் இப்போது வன விலங்குகளை வேட்டையாட அவசியமில்லை. அதோடு வேட்டையாட, வேண்டிய ஆற்றலுமில்லை. காட்டுக்குப் போகவேண்டிய அவசியமில்லை. காட்டுக்குப் போகாமலேயே, தக்கமுறையில் காட்டு நிர்வாகத்தில் ஊழல்கள் இல்லாதவாறு காட்டை எப்படி வளர்ப்பது என்பதிலே கவனம் செலுத்தி வருகிறோம்.

## 14. வருமான அதிகரிப்பு

விவசாயத்திற்காகத் தனி நிலம் இருக்கிறது. ஆங்காங்கு நிலம் இல்லாதவர்களுக்கு அதைப் பிரித்துக்கொடுக்க அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. காட்டை அழித்து, நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று சென்னால், அது காட்டுச் செல்வத்தை உணராதது ஆகும். காட்டை வளர்ப்பது தான் உண்மையான சமதர்மம். அதை விட்டு நான்கு பேருக்குப் பங்கு கொடுப்பது தனி தர்மம்.

எங்கெங்கே காட்டை வளர்க்கக்கூடுமோ, அங்கங்கே வளர்த்து, சமுதாயம் அனைத்திற்கும் பயன் படுத்தும் வகையில் காட்டைப் பெருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் உறுதியான அபிப்பிராயம்.

### குமரி சாகுபடி

விவசாயிகள் ஏதோ காட்டு நிலம் என்றால் விவசாயம் நன்றாக வருகிறது என்று எண்ணுகிறார்கள். அதில் பொருள்கள் நன்றாகத்தான் வளரும். ஏனென்றால் அந்த நிலம் "வர்ஜின் சாயில்" அதாவது அதுவரை ஏதும் பயிரிடப்படாததால் நன்றாக வளரும். காட்டை அழித்து விவசாயம் செய்வது என்பது நாம் கவனிக்கவேண்டிய விஷயம். இப்போது நம் ராஜ்யத்திலே காட்டுச் செல்வம் குறைவாக இருக்கிறது. காட்டை அழிக்காமலேயே நிலமில்லாதவர்கள் விவ

சாயம் செய்யலாம். இம்மாதிரி பல இடங்களில பயிரிடப் படுவதாக கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஒரு சில இடங்களில் நேரிலும் பார்த்திருக்கிறேன்.

ஒருமுறை பவானிக்குச் சென்றிருந்தபோது ஒரு குடும்பத்தைப் பார்த்தேன். அங்கு முந்திரிச் செடி தோட்டச் சாகுபடியாக நடத்தப்படுகிறது. இம்மாதிரி 120 ஏக்கர் இருக்கிறது. முந்திரிச் செடியும் வளர்கிறது. அதோடு 18 குடும்பங்கள், ஆளுக்கு நாலு ஏக்கர் நிலம் எடுத்துக்கொண்டு சோளம், கம்பு முதலிய தானியங்களைப் பயிரிடுகிறார்கள். இதற்காக நாலு அல்லது ஐந்து ரூபாய் டெபாஸிட் கட்டுகிறார்கள். அதேசமயத்தில் முந்திரி செடியையும் பாதுகாக்கிறார்கள். அவ்வாறு செய்வதால் காட்டு வளர்ச்சிக்குக் குந்தகம் ஒன்றும் ஏற்படுவதில்லை. இம்மாதிரி செய்வதுதான் குமரி சாகுபடி என்பது.

## விருத்தியில் கவனம்

குமரி சாகுபடியைப் பல இடங்களிலும் விருத்தி செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆவல். நான் இதைப் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி விவசாயிகளிடம் சொன்னதில் அவர்களும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அரசியல் தலைவர்கள்தான் முடியாது என்கிறார்கள். அந்த வகையிலே காட்டுக்குக் குந்தகம் இல்லாமல் கோடைக் கானலிலே சில நிபந்தனைகளுக்குட்பட்டு, விவசாயம் நடக்கிறது. இதில் அரசியலைப் புகுத்தி, அவர்களை வேறு வழியிலே திருப்பப்பார்த்தால், இடைஞ்சல்தான் ஏற்படும். காட்டு வளத்திலே அக்கறைகொண்டவர்களும காட்டு வளத்தைக் குறைக்க இடம் தராமல் அதில் அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மருந்துச் செடிகள், மரங்கள் இவைகளைப்பற்றி ஏற்கனவே காலேஜ் ஆப் இண்டியன் மெடிஸினைச் சேர்ந்தவர்களைக்கொண்டு பரிசீலனைச்செய்யச்சொல்லியிருக்கிறோம். பல இடங்களில் இவைகள் வளருவதற்கு வசதிகள் இருக்கின்றன. முக்கியமாகக் குற்றாலத்திலே இவைகள் தாராளமாக இப்போதே இருக்கின்றன. அவைகளையெல்லாம் கண்டறிந்து, விருத்தி செய்வதற்கு எந்தெந்த வகையிலே கவனம் செலுத்த முடியுமோ, அந்தந்த வகையிலே கவனம் செலுத்தப்படும்.

## நல்ல உபமானம்

தண்ணீர் இல்லாமலேயே பனை மரங்களை வளர்க்க முடியுமென்றும், அதைக் கழுதைக்கு ஒப்பிட்டும் கூறுகிறார்கள். கழுதை நல்லவேலைசெய்கிறது. அதற்காக செலவுஒன்றுமில்லை. இந்த உபமானம்நல்ல உபமானம் தான். அவ்வாறே, தண்ணீர் இன்றி பனைமரமும் வளருகிறது. அதேமாதிரிதான், முந்திரிமரமும் தண்ணீர் அதிகம் இல்லாமலேயே வளருகிறது. காடுகளில் வைத்த செடிகள், 100-க்கு 95, 97 பங்கு பழுது இல்லாமல், வளர்ந்திருக்கிறது. அம்மாதிரி மரங்கள் வைப்பதற்குத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

நீலகிரி பிராந்தியத்தில் வளரக்கூடிய வாட்டில் முதலியவைகளை நல்ல முறையில் பயன்படுத்த அங்கேயே ஒரு தொழிற்சாலையை ஏன் நிறுவக்கூடாது? என்று கேட்டார்கள். தொழிற்சாலை ஏற்படுத்துவது வேறு விஷயம். மேலே, மலையில், தொழிற்சாலைகள் அமைத்தால், அவற்றில் உற்பத்தியாகும் பொருள்களைக் கீழேதான் கொண்டுவரவேண்டும். இவைகளையெல்லாம் மலையிலேயே உபயோகித்துக் கொள்ள முடியாது. இதையெல்லாம் கவனித்து, பொருளாதாரத்

துறையில் எது சௌகரியமானது என்று பார்த்துத் தொழிற்சாலைகளை ஆங்காங்கே நிறுவ வசதி செய்து தரவேண்டியிருக்கிறது. மலைகளிலேயே வளரும் மரங்களினின்று தொழிற்சாலைகள் அமைக்க முடியுமானால் அதையும் அரசாங்கம் கவனிக்காமல் இருக்காது.

### சொந்த சௌகரியமா?

சிலர் யோசனை கூறும் பொழுது, காட்டிலாகா வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் குறைபாடுகளை மட்டும் சொல்ல வேண்டியிருக்க, அவர்கள் தங்கள் சௌகரியங்களையும் உத்தேசித்து, ''இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்யவேண்டும். இதை விட்டு விடுங்கள், அதைவிட்டுவிடுங்கள்'' என்று சொல்கிறார்கள். ஓரிடம், காட்டிலாகாவிற்கே பிரயோசனமில்லை என்று, நான் போன இடத்தில் ஒருவர் சொன்னார். நான் அதிகாரிகளைக் கலந்து பதில் சொல்வதாகச் சொன்னேன். பிறகு அவர் எதிரிலேயே அதிகாரிகளை வைத்துக்கொண்டு கேட்டேன். அதிகாரிகள், அந்த இடத்தில் விலை உயர்ந்த சந்தனமரங்கள் இருப்பதாகச்சொன்னார்கள். ஆனால், முதலில்அதிகாரிகளைக் கேட்கவேண்டாம், நீங்களே கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்கள். பிற்பாடு அதிகாரிகள் சொல்வதைப்பற்றிக் கேட்டபொழுது, அது உண்மைதான் என்று சொன்னார்கள். இன்னும் சில நபர்கள், தங்களுக்கு ஆதரவு அளிப்பவர்களும்,தங்களைச் சார்ந்தவர்களும் ஏழை கிராம மக்களும், தங்களைத் தொந்திரவு செய்கிறதால், அவர்களுக்கும் ஏதாவது கொடுத்தால் என்ன, என்ற ரீதியில் கேட்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அரசாங்கத்துக்கு அதோடு காட்டை வளர்க்க வேண்டும் என்ற அக்கறையும் இருக்கிறது என்பதை உணரவேண்டும்.



### மூன்று ரகம்

காட்டுச் செல்வம் மிகவும் முக்கியமான ஒரு செல்வம். அது நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும், இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் காட்டுச் செல்வம் எவ்வளவு இருக்க வேண்டுமென்று தேசிய மதிப்பீடு படிக் கணக்கிடப்பட்டிருக்கிறதோ, அதற்குப் பாதி தான் இருக்கிறது; குறைவாகத்தான் இருக்கிறது, என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த ராஜ்யத்தில் ''ரிசர்வ் பாரஸ்ட்ஸ்'' 6, 735 சதுர மைல் இருக்கிறது. ''protective and remunerative forests'' 5, 776 சதுர மைல் இருக்கிறது. ''Ryots forests'' 959 சதுர மைல் இருக்கிறது. இவ்வாறு மூன்று ரகங்களாக இந்தக் காடுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

### வருமான அதிகரிப்பு

காட்டுச் செல்வம் பல வகைகளில் பயன்படுகிறது. இந்தக் காடுகள் மூலம் அரசாங்கத்துக்கு வருமானம் வர வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். வருமானம் அதிகமாக வருகிறது. முன்பு இருந்த பஞ்சாயத்துக் காடுகளும், ஜமீன் பிராந்தியக் காடுகளும் அழிக்கப்பட்டு விட்டன. அவைகளையெல்லாம் சீர் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். பொதுவாகக் காடுகளின் நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதற்காக இப்பொழுது அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

காடுகளில் நம்முடைய தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மரங்களை நடவேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கம். ''ப்ளுகம்,'' தேக்கு போன்ற

மரங்கள் நம்முடைய ராஜ்யத்தில் மிகக் குறைவு. கன்னியாகுமரி ஜில்லாவில் பழைய ஜமீன் பாரஸ்டுகளில் தேக்கு வைத்துச் சாகுபடி செய்து வருகிறோம். ஆற்று ஓரங்களிலும், தண்ணீர் பூமியில் 'மாய்ச்சர்' உள்ள இடங்களிலும் இந்தத் தேக்கை வைப்பதுபற்றி கவனம் செலுத்தி வருகிறோம். தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களில் இந்தத் தேக்கை வைக்க மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## மேய்ப்பு நிலங்கள்

மேய்ப்பு நிலங்களையும் பஞ்சாயத்துக் காடுகளையும் ஒன்றோடொன்று இணைக்கவேண்டுமென்பது நோக்கம். 2, 900 ஏக்கர் ரிசர்வ் பாரஸ்டில் 72, 000 ரூபாய் செலவு செய்து, மேய்கால் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அரக்குப்பயிரிடவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. முந்திரி சாகுபடி இப்பொழுது அதிகமாக இருக்கிறது. வேறு எதுவும் வளராத இடங்களில் முந்திரி அதிமாக வளர்க்கப்படுகிறது. ஏக்கருக்கு 30, 35 ரூபாய் செலவாகிறது. மூன்று, நான்கு வருஷங்கள் கழிந்த பிறகு, ஆண்டு தோறும் ஏக்கருக்கு 100 ரூபாய் கூட கிடைக்கும். அதிகமாக இப்பொழுது முந்திரி பயிரிடப்படுகிறது.

கன்னியாகுமரியில் 3,000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிரிட காட்டிலாகாவினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். காகிதத் தொழிலுக்குப் பயன் படுகிற "வாட்டில்" என்ற மரம் கோடைக்கானலிலும், நீலகிரியிலும் பயிரிடப்பட்டு வருகிறது. 3, 580 ஏக்கர் அழிந்து போய்விட்ட பாரஸ்டை எடுத்துச் சீர்படுத்த, இரண்டு லட்சம்ரூபாய் செலவு செய்துள்ளோம். முன்பு ஜமீன் காடுகளாக இருந்ததைச் சீர்செய்யவேண்டும். அவைகளை யெல்லாம் துரிதமாகச் செய்ய வேண்டும். மரங்களை வெட்டாமல் அவைகளைப் பாதுகாக்கவும், விஞ்ஞான ரீதியில் என்னென்ன செய்வது என்பது பற்றிக் கவனம் செலுத்தப்படும்.



## நேஷனல் பார்க்

இப்பொழுது விறகுப் பற்றுக்குறை இருக்கிறது. காடுகளில் சவுக்கு மரமும், விறகுக்கு உபயோகப் படும் மரங்களும் வைக்கப்படுகின்றன. கிண்டியில் கவர்னர் அவர்கள் பெரும் பகுதியைக் காட்டிலாகாவுக்குக் கொடுத்துவிட்டார்கள். தேசிய பார்க் சிறந்த அழகான காடு. வேடந்தாங்கலில் பல பறவைகள் வருகின்றன. அதே போல் இங்கு பலவித மான்கள் இருக்கின்றன. அதை ஒரு நேஷனல் பார்க்காக எடுத்துக் கொண்டு நடத்தி வருகிறோம்.

முக்கியமாகக் காடுகளின் பரப்பு மொத்தத்தில் குறைவு. காட்டில் இருக்கக்கூடிய நிலங்களை "வர்ஜின் சாயில்" என்று சொல்லுவார்கள். நன்றாக விளைந்தாலும் தனி உடைமையைப் பொறுத்ததாக இருக்கக் கூடாது. பொது உடமையாக இருத்தல் வேண்டும். நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கிறோம். காட்டு வளர்ச்சியில் குந்தகம் இல்லாமல் கொடுக்கக் கூடிய வகையில் கொடுக்கிறோம். "குமரி கல்டிவேஷன்" என்று இருக்கிறது. எங்கெங்கு இடங்கள் காட்டுக்குப் பயன் இல்லையோ, அதைக் கொடுக்கிறோம்.

காட்டு இலாகா ஏற்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் நல்ல முறையில் கவனிக்க வேண்டுமென்றமுறையில் கவனம் செலுத்தி வருகிறார்கள். நூறு ஆண்டுகளாகப்பாதுகாக்கப்பட்டு வரும் இந்தக் காடுகள் மேலும் அபிவிருத்தியடையும் வகையில் பொதுமக்கள் உருப்படியான யோசனைகளை அளிக்க வேண்டுகிறேன்.

## 15. நடைமுறை வேலைகள்

காடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஒரு நிபுணரை அமைத்துப் பரிசீலனை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். காட்டிலாகாவைப் பொறுத்த வரையில், அதுதான் அடிப்படை. திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் காட்டிலாகாவிலேதான் "ஒர்க்கிங் பிளான்" என்று இருக்கிறது. அனுபவம் வாய்ந்த நிபுணர்களைக் கொண்டு, வெவ்வேறு பிராந்தியங்களிலே காட்டு அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி நன்றாக ஆராய்ந்து, எந்த வகையிலே காடுகளை மேலும் அபிவிருத்தி செய்வது என்பதை உருப்படியான முறையில், சம்பிரதாயமான முறையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் விரிவான முறையிலே கவனம் செலுத்தப்படும்.

### அந்நிய செலாவணி சேமிப்பு

நல்ல மதிப்புள்ள மரங்கள், உபயோகமான மரங்கள் வைப்பதைப்பற்றிக்குறிப்பிட்டார்கள்.தேக்கு மரம் முக்கியமானதுதான். வீடு கட்டுவதற்கு வேண்டும். அது நாட்டிலே பற்றாககுறையாக இருக்கிறது. ரயில்வே ஸ்லீப்பர்களாக உபயோகப்படுத்துவதற்குக் கூட தேக்கு மரம் வேண்டும். ஆனால், அது கிடைக்காத காரணத்தால் இரும்பு வாங்கவேண்டியிருக்கிறது. அன்னிய நாடுகளிலிருந்து வரவழைக்க



வேண்டியிருப்பதால் அன்னியநாட்டுச் செலாவணி நமக்குத் தேவைப்படுகிறது. அன்னிய நாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்கு நாம் தேக்கு மரங்களை உபயோகப்படுத்துவோம் என்றால், ரயில்வேயின் தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியவில்லை.

### தேக்குமரம்

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் தேக்குப் பற்றாக்குறையாக இருக்கிறது. அதைப் போக்க வேண்டி, தேக்கு அதிகமாகப் பயிரிடவேண்டியிருக்கிறது. தேக்கு மரம் நம்முடைய காடுகளிலே ரொம்பக் குறைவு. அதை எந்த எந்த வழியிலே வளர்க்கலாம் என்று திட்டமிட்டு, மழை அதிகமாக உள்ள இடங்களில் தேக்குமரம் அதிகமாகப் பயிர் செய்யப்பட்டு வருகிறது.

கோயமுத்தூர் ஜில்லாவிலே காட்டுப் பகுதிகளில் ரோடு போடப் ரோடு போடவேண்டிய இடங்களில் ரோடு போடப் பட்டிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவிலும் தேக்கு பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மதுரை ஜில்லாவில் கண்டமநாயக்கன் ஜமீன் காடுகளில் மழை இருக்கிறது. தேக்கு நன்றாக வளரும். அங்கே ஐயாயிரம் ஏக்கருக்கு மேல் தேக்கு பயிரிட எடுத்துக் கொள்ளலாம். அது மட்டு மல்ல, தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களிலேகூட ஆற்றோரங்களிலே தண்ணீர், ஈரம் இருந்தால் தேக்கு வளரும் என்று இப்பொழுது உணரப்படுகிறது. ஆகவே அங்கும் தேக்கு மரங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இன்னும் அதிகமாகச் சாகுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படி எல்லா இடங்களிலும் அதிகமாகச் சாகுபடி செய்வது

என்பதுமுடியாது. இது ஒரு 'டெக்னிக்.' அந்த அந்தப் பிராந்தியங்களில் ஒரு அளவுக்குத்தான் சாகுபடி செய்யமுடியும். எந்த அளவுக்குச்சாத்யப்படுகிறதோ, அந்த அளவுக்குத்தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## ரொம்ப மதிப்பு

சந்தன மரங்களைப்பற்றி சொல்லும்போது, அந்த மரங்கள் இயற்கையாகவேதான் வளருகின்றன. அப்படி வளருவதற்கு அநேகமாக பறவைகள்தான் உதவுகின்றன. அதை மேலும் மேலும் விருத்தி செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம்.

சந்தன மரத்திற்கு ரொம்ப மதிப்பு இருக்கிறது. அதனுல்தான் அது அதிகமாக திருட்டுப் போகிறது. அதை எந்த அளவு தடுக்க முடியுமோ அந்த அளவு தடுத்துக்கொண்டுதான் வருகிருேம். அதிகப்படியான மரங்கள் திருட்டுப் போனதால் இன்னும் அதிகமான மரங்களை வளர்ப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. சந்தன மரங்களைத் திருடுகிறவர்கள் மீது பெரிய கேஸ்கள் எல்லாம் போட்டு கடுமையான தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது. சந்தன மரங்களை இங்கேயிருந்து பம்பாய்க்குக்கூட கொண்டுபோகப்படுகிறது. அவ்வளவு கிராக்கி அதற்கு இருக்கிறது. திருட்டுத்தனமாகக் கொண்டு போவது தடுக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு பாதுகாப்பு செய்யவேண்டுமோ அந்த அளவுக்குக் கட்டுப்பாடு செய்யப்பட்டும் வருகிறது. திருட்டுத்தனமாக வெட்டி எடுத்துக்கொண்டு போகிறவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்பேரில் வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.



## ரப்பர் உற்பத்தி

கன்யாகுமரி ஜில்லாவில் நல்ல தரமான ரப்பர் தயாரிக்கப்படுகிறது. இது காட்டிலாகா மூலமாகவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கத்தாரும் இதில் அக்கறை கொண்டிருக்கிருர்கள். இந்த திட்டத்தின்படி காட்டிலாகாவின் மூலமாக மூவாயிரம் ஏக்கரில் இதைப் பயிரிடவேண்டும் என்ற யோசனை செய்யப்பட்டிருக்கிறது. அதை 'ரொட்டேஷன்' மூலமாகப் பயிரிடவேண்டும் என்றும் யோசனை செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது தனி நபர் கையில் ரப்பரை வைத்திருக்கிருர்கள். ரப்பரைப்பொறுத்த மட்டில் நான் அறிந்ததில் ரப்பரை குத்தகைக்கு விடுவது என்பது சரியல்ல. அப்படிக் குத்தகைக்கு விட்டால் அது பயன் உள்ளதாகத் தோன்றவில்லை. அதை காட்டிலாகாவின் மூலமாகத்தான் பயிரிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## அதிக லாபம் எது?

சந்தனத்தை எண்ணெயாக ஆக்கி அதன் மூலமாக அந்தத் தொழிலை நடத்தலாமா, அதன் மூலமாக நமக்கு அதிகப்படியாக லாபம் கிடைக்குமா என்றுகூட பரிசீலனையில் இருக்கிறது. இதைப்பற்றியும் நான் ஆராய்ந்து பார்த்தேன். சந்தன மரமாகவே விற்பதில் லாபம் இருக்கிறதா அல்லது அதை எண்ணெயாக்கி அந்த எண்ணெயை விற்பதில் அதிகப்படியான லாபம் இருக்கிறதா என்பதை ஆராயவேண்டியதாக இருக்கிறது. அந்நிய நாட்டில் இதன் பலனை கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

சந்தன மரத்தையே வெட்டி விற்ருல் அதை வாங்குகிறவர்கள் அதை எண்ணெயாக்கி, அந்த எண்

ணையை அந்நிய நாடுகளுக்கு விற்க ஏற்பாடு செய்யலாம். அப்படி அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிகப்படியான லாபம் சம்பாதிக்கலாம். சந்தனத்தை வெட்டி இங்கேயே பாக்டரி வைத்து எண்ணெயாக்கி, அதை நாமே அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்கலாமா என்றுகூட யோசனை செய்யப்பட்டு வருகிறது. எண்ணெயாக ஆக்கி விற்றால் அதில் அதிகப்படியான லாபம் வரவில்லையானால் அப்படி எண்ணெயாக ஆக்கி விற்பதில் பலன் இல்லை. ஏனென்றால், இப்பொழுது மரங்களாகவே அதிக விலைக்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள். இதைப்பற்றி யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அனாவசியமாக எண்ணெயாக்கி விற்பதில் அதிகப்படியான லாபம் வரவில்லையானால் அந்தத் தொழிலைச் செய்வதில் பிரயோசனம் இல்லை. இப்பொழுது நடத்துகிற வியாபாரம் பாதிக்காத முறையில், அதை ஆரம்பிக்கவேண்டும். இந்த நோக்கத்துடன்தான் இந்த அரசாங்கம் இருக்கிறது.

**ஜமீன் காலம் போல . .**

ஜமீன் பிராந்தியங்களிலுள்ள காடுகள் அதிகப்படியாக அழிக்கப்பட்டிருக்கிறது என்று புகார் வருகிறது. ஆகவே அதைச் சரியான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். அதிலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. ஆனால், ஜமீன் பிராந்தியங்களில் ஒரு உருப்படியான திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் அங்கே சர்வே செய்யவேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது சில தகராறுகள் ஏற்படுகின்றன. அங்குள்ளவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஜமீன் காலத்தில் தங்களுக்குச் சில உரிமைகள் இருந்தன என்றும், அவைகள் இப்பொழுது

V2;11 N64



பறிக்கப்படுகின்றன என்றும் சொல்லுகிறார்கள்; அதையும் கவனிக்கவேண்டியதாக இருக்கிறது.

ஜமீன்தார்கள் ஆட்சிக் காலத்தில் அவர்களும் காடுகளை அழித்துக்கொண்டிருந்தார்கள், ஜனங்களும் அழித்துக்கொண்டிருந்தார்கள். எடுத்துக்கொண்டு போனவரையில் லாபம் என்ற முறையில் இருவரும் அழித்துக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட உரிமையை இப்பொழுது கேட்பது சரியல்ல. விவசாயிகளுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பது வாஸ்தவம்தான். காடுகளை அழிக்கக்கூடிய அளவில் சலுகைகள் கொடுக்கமுடியாது. அந்தக் கொள்கையை இப்பொழுது பின்பற்ற அனுமதிக்க முடியாது.

**குறைகளுக்குப் பரிகாரம்**

இப்படிப்பட்ட பல குறைகள் என்னிடம் வருகின்றன. அவைகளை நேரில் சென்று கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். அந்தந்த இடத்திற்குச் சென்று மக்களையும் மக்களுடைய பிரதிநிதிகளையும் கண்டு பேசி, ஒரு பரிகாரம் தேடிக்கொடுத்துக்கொண்டுதான் வருகிறேன். குறைகள் நியாயமான குறைகளா, இல்லையா என்பதைக் கவனித்து, நியாயமான குறைகளாக இருந்தால் அதற்குப் பரிகாரம் தேடிக்கொடுத்துக்கொண்டும் வருகிறேன். அவரவர்களுடைய குறைகள், அவரவர்களுடைய கோணத்தில்தான் காண்கிறார்கள். பொதுவாக நன்மையாக இருக்கக்கூடிய குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

108746

# 16. காட்டில் விவசாயம்

எல்லோரும் இப்பொழுது நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நிலம் உள்ளவர்கள் குறைவாக இருக்கிறார்கள். நிலம் இல்லாதவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

நிலம் வேண்டுமென்ற பேச்சு அதிகமாக இருக்கிறது. எந்த அளவு காட்டிலிருந்து கொடுக்க முடியுமோ அந்த அளவுதான் கொடுக்க முடியும். இது பற்றி அதிகாரிகளையும் கேட்கப்படுகிறது. இதில் 'டாக் இன் தி மேஞ்சர்' பாலிசி கூடாது. காடு வளர்ப்பதற்கு அது அவசியமாக இருந்தால் அதைக் கொடுக்க முடியாது. பலன் அடையக்கூடியதாக இருந்தால் விவசாயிக்குக் கொடுக்க முடியும். அப்படி காடுகளுக்கு அவசியம் இல்லை என்று கருதுகிற இடங்களை விவசாயிகளுக்குக் கொடுக்காமல் இல்லை.

**பயனைப் பார்த்து . .**

காட்டிற்கு லாயக்குள்ளதாக இருந்தால் நிலம் கொடுக்க முடியாது. அந்த இடங்களில் காட்டிற்கு எந்த விதமான பயனும் இல்லை என்றால் அப்படிப் பட்ட இடங்களைக்கொடுக்க ஆட்சேபம் கிடையாது. பயன் அளிக்கக்கூடியதாக இருந்தால் அதைக் கொடுக்க முடியாது. காடுகளுக்குப் பயன் கொடுக்கக்



கூடிய இடங்களை எடுத்து, நாலு பேர்களுக்குக் கொடுப்பது என்பது சரியல்ல.

இன்றைக்குக் காடுகள் எல்லாம் சீரழிந்த நிலையில் உள்ளன. அவைகளை யெல்லாம் சீரான நிலைமைக்குக் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. இதில் அரசாங்கம் இப்பொழுது கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. சில இடங்களில் இன்றைக்கு மரங்களே இல்லை. அங்கே யெல்லாம் மரங்களை வைத்துப் பயிரிட வேண்டியதாக இருக்கிறது. அந்த இடங்களை யெல்லாம் பரிசீலனை செய்தபிறகு ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லை யென்றால்தான் விவசாயத்திற்குக் கொடுக்க முடியும்.

**குந்தகம் இல்லாமல் . . .**

குமரி கல்டிவேஷன் முறையில் காட்டு நிலங்களைக் கேட்கிறார்கள். நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தால், காடுகளுக்கு எந்த விதமான அழிவும் வராமல் இருந்தால் அப்படிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். சில இடங்களில் குறிப்பாக தென்னாற்காடு ஜில்லாவில், விழுப்புரம் தாலுக்காவில் ரொம்பவும் திருப்திகரமாக இருந்தது. அதை நானே போய் பார்வையிட்டேன். அங்குள்ள ஏழைகள், ஒன்றுமில்லாதவர்கள். 50 அல்லது 100 அல்லது 200 பேர்கள் அங்கே பயிரிடுகிறார்கள். அவர்கள் காட்டையும் பார்த்துக் கொள்கிறார்கள். அப்படி காடுகளைப் பார்த்துக் கொள்வதாக இருந்தால் குமரி கல்டிவேஷனுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். காடுகளுக்குக் குந்தகம் இல்லாமல் இருந்தால் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

இந்த மாதிரி மதுரை ஜில்லாவில் இருக்கிற காடுகளில், மலைப் பிராந்தியங்களில் குத்தகைக்கு ஒரு

அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு கொடுத்தால் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. மண் அரிப்பைத் தடுக்க வேண்டும். ஆறுகள் இருந்தால் அந்த ஆறுகளைப் பாதுகாக்க வேண்டும். ரிவர் எரோஷன், சாயில் எரோஷன் இவைகளைப் பார்த்துக் கொள்வது முக்கியமான விஷயம். நிலம் இருக்கிறது, அதைக் கேட்கிறார்கள். அதைக் கொடுத்து அவர்கள் அதில் பயிரிட்டு, நல்ல பலன்கிடைத்தால் அதைப் பாதுகாக்க வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது காட்டிலும் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது.

### பிடிவாதம் இல்லை

"இருக்கிற நிலங்களை ஏன் கொடுக்கக் கூடாது" என்று சிலர் கோபப்படுகிறார்கள். காட்டுக்குப் பிரயோஜனம் இல்லை யென்றால் கொடுக்கலாம். சில இடங்களில் கொடுத்தால் அங்கு இருக்கக் கூடிய ஆற்று நீர் குறைந்து விடலாம். அரிப்பு ஏற்படலாம். அங்கு ஓடுகிற நீரிலிருந்து கிடைக்கக் கூடிய மின் சாரம், நீர்ப்பாசன வசதி ஆகியவை பாதிக்கப்படலாம். கோபப்படுபவர்கள் தங்கள் தங்கள் கண்ணோட்டத்தில் இருந்து இவைகளைக் கவனிக்காமல் நான் சொன்ன நிலைமைகளை யெல்லாம் கவனித்துப் பார்ப்பார்களேயானால் காட்டிலாகா பிடிவாதம் பிடிக்கிறது என்று சொல்லும் நிலைமை இருக்காது.

### கட்டுப்பாடு எதற்கு?

மாடுகள் மேய்க்க வசதி செய்து கொடுக்கிறோம். காடுகளைப்போல் மாடுகளும் சிறந்த செல்வம். அந்த மாடுகள் நன்றாக வளர்க்கப்பட மேய்கால் வசதி நன்றாக இருக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்துக் காடுகளை மேய்கால் வசதிக்காக இணைக்கும் வகையில் கவனம் செலுத்தி வருகிறோம். ஒரு கட்டுப்பாட்டுக்காக வருஷத்திற்கு 1 ரூபாய், 2 ரூபாய் என்று மேய்ப்புக்குக் கட்டணம் வைத்திருக்கிறார்கள். இது ஒன்றும் அதிகமில்லை. பர்மிட் இல்லாமல் விட்டுவிட வேண்டுமென்று சொல்வது சரியல்ல.



எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் விட்டு விட்டால் காடுகள் அழிந்துவிடும். இப்பொழுது இயற்கையாக உள்ள காடுகள் மட்டுமல்லாமல், செயற்கை முறையிலும் செடிகளை வைக்கிறோம். எல்லாப் பிராந்தியங்களிலும் எவ்வளவு மாடுகள் மேயும் என்று கணக்குப் போட்டு அதற்கேற்றபடி அனுமதி கொடுக்கிறோம். மாடுகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு போகிறவர்கள் மைல் கணக்காகக் கொண்டு போவதுண்டு. காடு என்றால் 2 மைல்கூடப் போகமாட்டேன் என்கிறார்கள். "இங்கு ஏன் செடி வைத்திருக்கிறது?" என்று கேட்கிறார்கள். அப்படிச் சொல்லுவது சரியல்ல.

### பசுந்தாள் உரம்

விவசாயத்துக்குப் பசுந்தாள் உரம் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இலவசமாகக் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுத்தால் வலுத்தவன்தான் எடுத்துக்கொண்டு போகமுடியும். எளியவனுக்குக் கிடைக்காது. யார் யார் செல்வாக்குள்ளவர்களோ, அவர்கள் 100 ஆட்களைக் கொண்டு வந்து எல்லாவற்றையும் சுரண்டிக் கொண்டு போய்விடுவார்கள். ஏழைகள், சிறிய விவசாயிகளுக்குக் கிடைக்காது. ஆகவே, அதற்கு ஒரு வரம்பு இருக்க வேண்டும். பர்மிட் வேண்டும்.

இலவசமாகக் கொடுப்பது என்று முடிவு செய்தால் அடிதடிதான் நடந்து கொண்டிருக்கும். இந்த உரத்தின் அருமையை விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைக் காண அவர்களைப் பாராட்டுகிறேன். புதுக்கோட்டையில் ஒன்றுமே கிடைக்காத நிலை இருந்தது. அதற்குப் பிறகு "ஆக்ஷன்" விட்டு விவசாயிகளுக்குப் பயன்படும்படிச் செய்யச் சொன்னேன். அந்த வகையில் அரசாங்கம் சில நிபந்தனைகளை வைத்திருக்கிறது.

## 17. கண்காணிப்பில் கவனம்

காடுகளில் திருட்டுப் போவதைத் தவிர்க்க வேண்டும். கண்காணிப்பதற்காகவும், நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்காகவும் நாம் சட்டத்தைக் கடுமையாக்குகிறோம்.

### அதிக கண்காணிப்பு

சில அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதை நான் மறுக்க வில்லை. மறுப்பதில் பயன் இல்லை. மிகைப்படுத்திக் கூறுவதும் லட்சியத்தை நிறைவேற்றப் பயன்படாது. கடுமையான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டு வருகிறோம். இதற்குப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்கள் கண்காணிப்பு செய்யவேண்டும். அவர்களுடைய ஒத்துழைப்பு இந்தச் சமயத்தில் இல்லை யென்று நான் சொல்லவில்லை. மேலும் அதிகமாக நான் கோருகிறேன்.

"இப்பொழுது அதிகமாக முந்திரிச் செடிகளையே வைக்கிறார்களே! அதற்குப் பதிலாக சவுக்கை வைக்கலாமே" என்று கேட்கப்படுகிறது. வேறு ஒன்றும் பயிர் செய்ய முடியாத இடங்களில்—முந்திரிச் செடிகள் பயிரிடப்படுகின்றன. மழை இல்லாத இடங்களில், தண்ணீர் இல்லாத இடங்களில் இந்தச் செடியை வைத்து விட்டால் தானாகவே வளரும். மாடுகள்

போய் மேய்ந்துவிடக் கூடாது. ஒரு வருஷத்தில் தானுகவே 6, 7 அடி வளர்ந்து விடுகிறது. அதனுல் தான் அது அதிகம் பயிரிடப்படுகிறது.

## பச்சைமரப் பாதுகாப்பு

செங்கோட்டையில் ஒரு பழக்கம் இருக்கிறது. உலர்ந்த மரங்களை இலவசமாகவே எடுத்துக்கொண்டு போகிருர்கள். ஜமீன் கிராமங்களில் இருந்து வந்ததைப் போல இப்பொழுதும் இருக்க முடியாது. அது சரியல்ல அப்போது கிடைக்கிறது கிடைக்கட்டும், போவது போகட்டும் என்ற நிலைமை இருந்திருக்கலாம். யார் வேண்டுமானுலும் உலர்ந்த மரங்களை எடுத்துச் செல்லலாம் என்று இவர்கள் உலர்ந்த மரங்களோடு பச்சை மரங்களையும் எடுத்துச் சென்று விடுகிருர்கள். தலையில் சுமையை எடுத்துக் கொண்டு வருகிறவர்களிடம் பச்சை மரங்களும் இருந்ததை எனக்குக் காட்டினுர்கள்.

இன்றைக்கு உலர்ந்த மரத்தை எடுத்துக்கொள்ளப் போகிறபோது பச்சை மரத்தையும் வெட்டி விடுகிருர்கள். மறு நாள் அது உலர்ந்துபோகும். அதை உடனே உலர்ந்த மரம் என்று எடுத்துக் கொண்டு வருவது என்று இருக்கிறது. இதை நாம் நன்ருகக் கவனிக்க வேண்டும். இப்படி இவர்கள் தலைச்சுமையாகக் கொண்டுபோகிற விறகுக்கட்டுகளை ஆறு அணு ஏழு அணுவுக்கு விற்கிருர்கள். அதை வாங்குகிறவர்கள் பொதுமக்களுக்கு ஒரு ருபாய்க்கு விற்கிருர்கள். இப்படி லாபம் இவர்களுக்கும் இல்லை. காட்டிலுள்ள பச்சை மரங்களையும் அழித்து விடுகிருர்கள். இதை எப்படி நாம் பார்த்துக்கொண்டிருப்பது?



## அளந்து போடவேண்டாமா?

சமுத்திரத்தில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்று சொல்வார்கள். அப்படி வெட்டிக் கொண்டு போகிறதைத் தடுத்தால் ஆத்திரம் வருகிறது. அதைத் தடுக்க முடியாது. ஆனுல் யார் வெட்டிக் கொண்டு போகிருர்கள் என்பது நமக்குத் தெரிந்தால்தான் பச்சை மரத்தை வெட்டினுல் தடுக்க முடியும். குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க முடியும். அதற்காக பர்மிட் ஸிஸ்டம் போடலாம் என்று யோசித்தோம். அப்போது கூட இதற்கு ஏதாவது கட்டணம் போட்டால் நல்லது என்ருர்கள். அது எல்லாம் ஒன்றும் வேண்டாம். இலவசமாகவே பர்மிட் வழங்கலாம். ஆனுல் பெயரைக் கொடுத்து, உலர்ந்ததைப் பொறுக்கிப்போக அவர்கள் பாஸ் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்று செய்திருக்கிருேம். இவர்கள் நாம் புதிதாக எங்கே செடி வைக்கிருேமோ, அங்கே போகக் கூடாது. இப்படி அவர்களும் இதுவரையில் நடந்து கொண்டு வந்தது போலவே நடக்கட்டும். ஆனுல் காடுகளையும் அவர்கள் அழித்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறு என்ன செய்வது? இதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

## ஆத்திரம் வருகிறது

சில ஆண்டுகளுக்கு முன்னே நான் நேரில் போய்ப் பார்த்தேன். இவர்கள் குறிப்பிடுகிற பல குறைகளையும் நீக்க வேண்டும் என்பதுதான் என் நோக்கம். ஒரு விஷயம். நம்முடைய காடு இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு பெரிய முதலாளிக்குச் சொந்தமான பிளாண்டேஷன் இருக்கிறது. அவரையும்கூட அழைத்துக்கொண்டு நம்முடைய பிரதிநிதிகளே வந்திருந்

தார்கள். இந்தக் காட்டை ஏலம்விட்டு அவர்களுக்குக் கொடுத்துவிடலாம் என்று சொன்னார்கள். அப்படிக் கேட்பது சகஜம். ஆனால் நம்முடைய பிரதிநிதிகளே கொடுங்கள் என்று சொல்வது அசாதாரணமானது.

மக்கள் பிரதிநிதிகள் சொல்வதை, உடனே அதைப் புறக்கணிக்க முடியாது. ஆகவே ஆராய்ந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். அங்கே சென்று பார்த்தால் அங்கே ஓர் ஆறு ஓடுகிறது. இதைப் பெரிய முதலாளிக்கே, இத்தனைப் பொதுஜனப் பிரதிநிதிகளும் சொல்கிறார்கள் என்பதற்காகக் கொடுத்துவிட்டால் இங்கே பாதிக்கப்படாதா? அது எப்படி முடியும்? ரிவர் கன்சர்வன்ஸி, சாயில் கன்சர்வன்ஸிக்காகக் கொடுக்க முடியவில்லை. முடியாது என்று சொன்னால் ஆத்திரம் வருகிறது. காட்டிலாகாவைப் பற்றித் தாக்கிப் பேசுகிறார்கள். அது ஆற்றோரத்தில் உள்ள சர்க்கார் காட்டைச் சார்ந்தது. எந்த இடமாக இருந்தாலும் தனிப்பட்டவருக்குக் கொடுப்பது, அதுவும் ஆற்றுப்பாதுகாப்புப் பகுதியைக் கொடுப்பது என்பது ஒப்புக்கொள்ள முடியாத விஷயம்.

## மூலிகைப் பயிர்

கடுக்காய், நெல்லிக்காய், கால்நட்டு இவைகளை எல்லாம் காட்டில் பயிரிடவேண்டும். அதற்குத்தான் பிரத்தியேகமான கவனம் செலுத்தி வருகிறோம். காலேஜ் அப் இண்டக்ரேடெட் மெடிசினில்—இருந்து ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு, நம்முடைய காடுகளில் எங்கெங்கே, என்ன என்ன உயர்ந்த மூலிகைகளை எல்லாம் வளர்க்கலாம் என்பதைப் பரிசீலனை செய்தோம். காரணம் விலை உயர்ந்த மூலிகைகள் எல்லாம் நம்நாட்டில் இருக்கிறது. அந்நிய நாட்டிலுள்ள நிபுணர்கள் இதைப் பாராட்டுகிறார்கள். அந்த ஸ்பெஷல்



ஆபீசரும் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். அந்த அறிக்கையை சுகாதார இலாகாவினர் கவனித்து வருகிறார்கள். அதன்படி எங்கெங்கே, என்ன என்ன மூலிகைகளை எல்லாம் வளர்க்கலாமோ அதுபற்றி கவனம் செலுத்தலாம். சிங்கோனா பிராந்தியத்தில் கூட இது ஓர் பகுதியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

காட்டை அழிப்பதற்காகத் தீ இடுகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் போதுமான கவனம் செலுத்தி வருகிறது, இது விஷயத்தில் பொது மக்கள் ஆதரவு காட்ட வேண்டும். காட்டு இலாகா ஜனங்களுக்குச் சங்கடத்தை விளைவிப்பதாக நினைக்கக் கூடாது. வேறு வகையில் பிரசாரம் வேண்டாம். இந்த இலாகா இருப்பதனால் மக்களுக்குச் சங்கடம் இல்லை. தேசியச் செல்வத்தைப் பெருக்குவதற்குத்தான் இது இருக்கிறது என்பதைப் பற்றி பிரசாரம் செய்ய வேண்டும்.

## செல்வத்தின் அருமை

காடுகளை வளர்ப்பதோடு மட்டும் அல்ல, அந்தக் காடுகளிலேயே வசிக்கின்ற, அந்த மலைப் பிராந்தியங்களையே சார்ந்த மலைவாசிகளுடைய நல்வாழ்விலும், பிற்போக்கு இனத்தவர்களுடைய நலனிலும் அக்கறை காட்டும் இலாகாவைப் போலவே காட்டு இலாகாவினரும் அக்கறை காட்டி, பல காரியங்களில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இப்படி பல துறைகளில் காட்டு இலாகா கவனம் செலுத்தி வருகிறது. மிகவும் உற்சாகத்தோடு இங்குள்ளவர்கள் வேலை செய்கிறார்கள். பொதுவாக அந்நியர்கள் ஆட்சி காலத்திலும் கூட இந்த இலாகாவில் உள்ளவர்கள் எவ்வளவு அதிகமாகக் கவனம் செலுத்தி யிருக்கிறார்கள் என்பதையும்

நான் காண்கிறேன். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக மக்கள் காட்டுச் செல்வத்தின் அருமையை உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு கண்காணிப்பு எல்லாம் அவசியமாகும். காட்டுவளத்தை நன்றாகப் பெருக்குவதற்கு எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 18. மீன் வளம் பெருக...

மீன்பிடித் தொழிலில் ஏராளமான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும், இத் தொழிலின் மூலம் மக்களுக்கு அவசியமானதும், முக்கியமானதுமான உணவுப்பொருள்கள் கிடைக்கின்றன வென்பதையும், நான் ஆரம்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இலாகா மூலமாக மீன் பிடிப்பதினாலும், உள் நாட்டு மீன் பிடிப்புத் தொழிலுக்கு லைசென்ஸ் வழங்குவதினாலும், முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், முதலிய தொழில்கள் மூலமாகவும் அரசாங்கத்திற்குக் கணிசமான வருமானம் கிடைக்கிறது.

### அபிவிருத்திப் பிரச்சினைகள்

ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக பெரிய மீன்பிடிப் படகுகள், அதற்கு ஏற்ற சாதனங்களை வாங்கவேண்டியிருக்கிறது. ஆழ்கடல் மீன் பிடிப்பினால் நமக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றாலும், ஆரம்ப முதலீட்டுத் தொகை அதிகமாக வேண்டியிருப்பதினால் தற்போதைக்கு இத்திட்டத்திற்காக மேலும் அதிக நிதி ஒதுக்க முடியாமல் இருக்கிறது.

உள்நாட்டு நீர் நிலைகளில் அதிகப்படியாக மீன்களை வளர்ப்பதினாலும், கடலோரங்களிலும், ஆழ்கடல்களிலும் மீன் பிடிப்பிற்கு படகுகளை வாங்குவதினாலும் மட்டும் மீன் பிடிப்புத் தொழிலை நாம் அபிவிருத்தி

செய்துவிட முடியாது. மீன்பிடித்தொழிலுக்கு வேண்டிய சாதனங்கள், பலதரப்பட்ட மீன் வகைகளின் வளர்ச்சி, ஓர் இடத்தில் வளரும் மீன் வகைகளை மற்ற இடங்களிலும் வளர்க்கமுடியுமா என்ற ஆராய்ச்சி, மீன் பிடித் தொழிலை அதிகப்படுத்துவதற்கு, தற்போதுள்ள மீன் வளங்களைப் பாதுகாத்து, விசைப் படகுகள் முதலியன கொண்டு மீன் பிடித்தல், முதலிய எல்லாபிரச்சினைகளும் மீன்பிடித் தொழில் அபிவிருத்தியில் அடங்கியிருக்கின்றன.

## நடைமுறைத் திட்டங்கள்

துரதிருஷ்டவசமாக, நமது ராஜ்யத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் பொருளாதார நிலையில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். இம்மக்களின் வாழ்க்கை நிலைமையை எல்லா வகையிலும் உயர்த்த வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, இவ்விஷயங்களையும் அரசாங்கம் மனத்தில் கொண்டு தங்கள் கொள்கையை வகுக்க வேண்டியிருக்கிறது. மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், இது சம்பந்தமான தொழில்களை வளர்க்கவும், புதுமுறைகளைக் கையாளவும், அபிவிருத்தி செய்யப்பட்ட சாதனங்களை உபயோகிக்கும்படி வற்புறுத்தவும், விஞ்ஞான ரீதியாய் ஆராய்ச்சி நடத்தப்பட்டவைகளை நடைமுறையில் கொண்டு வரவும், வர்த்தக முறையில் மீன்பிடித் தொழிலைச் சீர்திருத்தி அமைக்கவும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் வாழ்க்கைத் தரத்திலும், சமூகத் துறையிலும் மேம்பாடு அடையும்படி செய்வதையும் மீன் இலாகா தனது கடமையாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.



இந்த லட்சியங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் கீழ்க்கண்ட விதங்களில், இலாகா பணியாற்றி வருகிறது.

அ. உள்நாட்டு மீன் வளத்தை அபிவிருத்தி செய்வது;

ஆ. கடல் மீன் பிடிப்பை அபிவிருத்தி செய்வது;

இ. ஆராய்ச்சி;

ஈ. சமுதாய, பொருளாதார நடவடிக்கைகள்.

## உள்நாட்டு வளம்

உள்நாட்டு மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும் என்னும் நோக்கத்தோடு, உள்நாட்டு நீர் நிலைகளில் விரைவாக வளரக்கூடிய மீன் வகைகளைச் சேகரித்து, வளர்த்து, விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை பல லட்சம் மீன் குஞ்சுகளை மீன் இலாகா சேகரித்து வழங்கியிருக்கிறது. மீன் வளங்கள் எங்கெங்கே உள்ளன என்று கண்டுபிடிக்கவும், தனிப்பட்டவர்களுக்கு ஆலோசனைகள் கூறவும், அவர்களுக்கு மீன் குஞ்சுகளை வழங்கவும், புது இடங்களில் மீன் வளர்ப்புப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், கடைசியாக மீன் விற்பனை சம்பந்தமாகவும், பலதரப்பட்ட பணிகளைச் செய்வதற்காக, பலவிடங்களில் உத்தியோகஸ்தர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். நீடித்து உழைக்கக் கூடியதும், மீன் பிடிப்பை அதிகரிக்கக் கூடியதுமான "நைலான்" வலைகளும், தூண்டில்களும் மொத்த விலையில் மூன்றில் ஒரு பங்கு விலைக்குப் பரதவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மேட்டூர் பவானிசாகர் போன்ற பெரிய நீர்த்தேக்கங்களில் மீன் வகைகளைச் சேகரித்து வளர்க்கவும்,

லைசென்ஸ் கொடுத்து மீன் பிடிக்கக் கட்டுப்பாடுகள் விதிக்கவும், ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. மீன் உணவு, மீன் உரம், இரால் மீன் வற்றல் முதலியன மீன் இலாகாவின் மாதிரி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில் நாகப்பட்டினத்தில் 1956-57-ஆம் ஆண்டில் இரால் மீன் வற்றல் தயாரிக்கும் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தூத்துக்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தினமும் 20 அந்தர் நிறையுள்ள மீன் உணவும், மீன் எண்ணெய்யும் தயாரிக்க 1957-58-ம் ஆண்டின் போது இரண்டு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## விசைப் படகுகள்

நாகப்பட்டினத்திலிருந்து சென்னை வரையிலும் கடற்கரை ஓரமாக மீன் வளம் பற்றி ஒரு சர்வே எடுக்கப்பட்டது. இதன் விளைவாய் கடலூருக்கு அருகாமையில் இரால் மீன்கள் மிகுதியாக வளர்ச்சியுறும் ஒரு இடமும், பழவேற்காடு அருகில் ஜெல்லி மீன் நிறையக் கிடைப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

நமது ராஜ்யத்தில் மீன்பிடிப்பிற்கு உபயோகப்படுத்தப்படும் நாட்டுப் படகுகளை விசைப் படகுகளாக மாற்றவேண்டும் என்ற திட்டம் 1955-56-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அதன்படி 20 "பாப்லோடைப்" விசைப்படகுகள் குறைந்த விலையில் பரதவர்களுக்காகக் கட்டப்பட்டு விற்கப்பட்டன. 1956-57-ம் ஆண்டில் 11 படகுகள் கட்டப்பட்டன. 1957-58-ஆம் ஆண்டிலும் இதேமாதிரி 17 படகுகளுமாகத் தொடர்ந்து நடக்கிறது. இந்த முயற்சியில் எல்லாம் போதுமானதாயில்லை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.



## ஆழ்கடல் மீன் பிடிப்பு

ஆழ்கடல் மீன் பிடிப்பிற்காக நமது ராஜ்யத்தில் ஒரு நிலையம் ஏற்படுத்தவேண்டுமென்று இந்திய அரசாங்கத்திடம் நாம் வற்புறுத்தி வந்தது பலனளிக்கவில்லை. ஏனெனில் இந்திய அரசாங்கமே கொச்சியில் ஒரு நிலையம் ஏற்படுத்தப் போவதாகக் கூறிவிட்டனர். ராஜ்ய சீரமைப்பிற்குப் பிறகு நமது ராஜ்யத்திற்கு ஒரே ஒரு ஆழ்கடல் மீன் பிடிப்புப் படகுதான் கிடைத்தது. அதற்கு முன்பு இருந்த பழைய படகுகள் உதவாது என்று மீன் இலாகா அவைகளை நிராகரித்து விட்டது. நமது ராஜ்யத்திற்கு அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழாவது இன்னும் சில ஆழ்கடல் மீன்பிடிப்புப் படகுகளை ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை அடிக்கடி கேட்டு வருகிறோம். இதன் விளைவாக இம்மாதிரிப் படகுகளை எல்லாம் கணக்கிட்டு, நமது ராஜ்யத்திற்கும் அதிகப்படியாக ஒதுக்குவதாக இந்திய அரசாங்கம் நமக்குப் பதிலளித்திருக்கிறது.

## முத்துக் குளித்தல்

நமது ராஜ்யத்தில் கிழக்குக் கடற்கரையோரத்தில் மட்டும் முத்துச் சிப்பிகள் கிடைக்கின்றன. முதன் முதலாக 1926-28-ஆம் ஆண்டில் முத்துக் குளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு மீண்டும் 25 ஆண்டுகள் கழித்து 1955-ஆம் ஆண்டில் மார்ச், மே மாதங்களில் முத்துக்குளித்தல் நடைபெற்றது. அப்போதிருந்து ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டுகளில் நடத்திய முத்துக் குளித்தலின் விளைவாக நமது அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும்

முத்துக் குளித்தல் வேலையை நடத்தவும், இதை ஒரு இலாபகரமான தொழிலாகச் செய்யவும் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

இதேமாதிரியாக, சங்கு எடுத்தல் வேலையும் வெற்றிகரமாக நடந்து வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பகுதியிலும் சங்கு எடுக்கும் வேலை, இலாகா மூலமாக நடத்தப் பட்டு வருகிறது. இப்படி எடுக்கப்பட்ட சங்குகள் மேற்கு வங்காள அரசாங்கத்திற்கு நல்ல விலைக்கு உடனுக்குடன் விற்கப்படுகிறது. இராமநாதபுரம், செங்கற்பட்டு, தென்னாற்காடு, மற்றும் தஞ்சாவூரில் ஒரு பகுதியிலும் சங்கு எடுக்கும் வேலை தனிப்பட்ட வர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. மீன் இலாகாவிற்கு சங்கு மூலம் கிடைக்கும் வருமானமே ஒரு முக்கிய வருவாயாக இருந்து வருகிறது.

## பயிற்சி நிலையங்கள்

அயல் நாட்டு உதவித் திட்டங்களைக் கொண்டு மீன் பிடித் தொழில் நிபுணர்களைச் சிக்கனச் செலவில் வேலைக்கு அமர்த்தவும், தொழிலுக்கு வேண்டிய சாதனங்களையும், பொருள்களையும், வாங்கிக்கொள்ள வும், அரசாங்கம் மிகவும் பயன்படுத்தியிருக்கிறது. கடல் மீன் பிடிப்புத் தொழிலை அபிவிருத்தி செய்யவும், நவீன முறையில் மாற்றி அமைக்கவும், இந்திய அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. இந்த ஒப்பந் தத்தின் விளைவாக, நமது அரசாங்கத்திற்கு மீன்பிடித் தொழிலுக்கு வேண்டிய சாதனங்களும், பொருள்களும் நிறையக் கிடைக்கப் பெற்று, பரதவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பட்டிருக்கின்றன.



இந்த உதவித் திட்டத்தின் கீழ், பரதவர்களுக்கு விசைப்படகில் சென்று மீன் பிடிக்கப் பயிற்சி அளிப்ப தற்காக தூத்துக்குடியில் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினம், சென்னை ஆகிய இடங்களில் நமது அரசாங்கமே பயிற்சி நிலை யங்களை ஆரம்பித்திருக்கின்றது. மீன் பிடித் தொழிலுக்கு விசைப் படகுகளின் உபயோகம் அதிகரித்து வரும் இதே சமயத்தில், மீன் பிடித் தொழிலை ஆதாரமாகக் கொண்டுள்ள பரதவர்களுக்கு இத்துறையில் தக்க பயிற்சிகள் அளிப்பது மிகவும் அவசியம். இப்படி அளிக்கப்படும் பயிற்சித் திட்டங் களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நிபுணர் உதவி

ஐ. நா. சபையில் உணவு, விவசாய சங்கத்துடன் இந்திய அரசாங்கம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத் தின்படி, நமது ராஜ்யத்திற்கு இரண்டு படகு கட்டும் நிபுணர்களின் உதவியும், ஒரு மீன் பிடிப்பு என்ஜினி யரும், இரு துறைமுக நிபுணர்கள், ஒரு மீன் பிடிப்புப் பயிற்சி நிபுணர், ஒரு விற்பனை நிபுணர் ஆகியோர் களின் உதவியும் கிடைத்திருக்கிறது. விசைப்படகை அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் நல்ல பலனளித்ததற்கு இந்த நிபுணர்களும், மீன் பிடிப்பு என்ஜினியரும்தான் காரணமாவார்கள். துறைமுக நிபுணர்களும், பூர்வாங்க சர்வே வேலையை முடித்திருக்கின்றனர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை மீது இப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளது.

குருசடைத் தீவு, எண்ணூர், தூத்துக்குடி, பவானி சாகர் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க மீன்

ஆராய்ச்சி நிலையங்கள் பயனுள்ள வகையில் நடந்து வருகின்றன. மீன் வளத்தை அபிவிருத்தி செய்வ தற்கு நடத்தப்படும் ஆராய்ச்சிகள் பெரிதும் பயன் படுகின்றன. கேரளத்திற்குப் பிரிந்து சென்றுவிட்ட கோழிக்கோட்டிற்குப் பதிலாக, தூத்துக்குடியில் மீன் தொழில் நுட்பநிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

**பல்வகை உதவி**

பரதவர்களுக்குக் கடன் வசதிகள் செய்யவும், வேண்டிய சாதனங்கள், நூல், பாய்மரம் முதலிய வைகளை வழங்கவும் நூற்றுக்கு மேற்பட்ட பரதவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. பரதவர்கள் ஏற்கனவே லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன் தொகையைத் திரும்பக் கொடுப்பதற்காகவும், படகு கள், சாதனங்கள் வாங்கவும் நீண்ட காலத் தவணைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டங்களினால் பரதவர்களுக்கு மிகுந்த பலன் ஏற்பட்டிருக்கிறது.

பதினேழு இடங்களில் மீன் உலர்த்தும் விடுதி கள் கட்டப்பட்டுள்ளன. இவ்விடங்களில் உலர்ந்த மீன்கள் தயாரிப்பதற்காகக் குறைந்த விலையில் உப்பு விற்கப்படுகிறது. மீன்களை உடனுக்குடன் விற்பனை இடங்களுக்குக் கொண்டு போவதற்காக 1951-ம் ஆண்டில் ஒன்பது மோட்டார் வண்டிகள் வாங்கப் பட்டன. 1956-57-ம் ஆண்டின்போது மூன்று வண்டி கள் வாங்கப்பட்டு, கிழக்குக் கடற்கரையிலுள்ள மூன்று கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டன. அப்போதைக்கப்போது பெரிய அல்லது சிறிய மோட் டார் வண்டிகளை வாங்கித் தவணை திட்டத்தின் கீழ் பரதவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப் பட்டு வருகிறது. மீன்களைச் சேகரித்துவைக்க மேட்டூர்



நீர்த் தேக்கத்திலும், தூத்துக்குடியிலும் இரண்டு குளிர்பதன நிலையங்களைக் கட்ட அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

**இயற்கைக் கோளாறு**

வெள்ளம், பஞ்சம், புயல் முதலிய இயற்கைக் கோளாறுகளினால் ஏற்படும் துன்பங்களைப் போக்க பரதவர்களுக்கு அரசாங்கம் இலவசமாக நூல், பாய் மரம் முதலியவைகளைக் கொடுத்து உதவியும், படகு களைப் பழுது பார்க்க மான்ய மளித்தும், கட்டு மரங் களைக் குறைந்த விலையில் விற்பனை செய்தும் உதவி வந்திருக்கிறது. கடல் அரிப்பினால் வீடிழந்து தவிக்கும் பரதவர்களுக்கு வேறு இடங்களில் மனைக் கட்டுகள் வழங்கவும் அரசாங்கம் உதவி வருகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சில அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் சேர்த்திருக்கிறது. அதாவது விசைப் படகுகள் கட்டுவது, சங்கம ஸ்தலங்களில் 'மாதிரி' மீன் பண்ணைகளை ஏற்படுத்துவது, ஆற்று முகத்துவாரங்களில் மீன் பிடித் துறைமுகங்களை ஏற் படுத்துவது, விசைப்படகுகளை இயக்கப் பரதவர் களுக்குப் பயிற்சி அளிப்பது, மீன் குஞ்சுகளை ஏராள மாகச் சேகரித்து உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்ப்பது, பெரிய நீர்த்தேக்கங்களில் மீன் வளத்தைமேலும் அபி விருத்தி செய்து, மீன் உணவு, மீன்உர உற்பத்தி செய்வது, குளிர் பதன நிலையங்கள் ஏற்படுத்துவது, மீன்மார்க்கெட்டுகளை அபிருத்தி செய்வது போன்ற பல திட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

**முதலீடம் வகிக்க . . .**

இத்திட்டங்கள் எவ்வளவு விரைவாக நிறை வேற்றப்பட முடியுமோ, அவ்வளவு விரைவாக நிறை

வேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நிறை வேற்றப்படுவதினால் பல பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடப்படுவதுடன், மீன் வளத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வழி தேடியவர்களாகவும் ஆவோம்.

சுமார் 600-மைல் நீளமுள்ள கடற்கரையும், உள்நாட்டில் ஆறு, வாய்க்கால், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏராளமான ஏரிகள் முதலிய வாய்ப்புகள் இருக்கும் நமது ராஜ்யத்தில் மீன் வளத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து, இந்தியாவிலேயே முதலிடம் வகிக்க வழிகள் இருக்கின்றன.

## 19. கால் நடைப் பாதுகாப்பு

விவசாய நாடு என்ற முறையில், நமது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத் திட்டத்தில், நமது கால்நடைச்செல்வத்தைப் பாதுகாப்பதும், அபிவிருத்தி செய்வதும் முக்கியமான பணியாகும்.

### பயனுள்ள கால்நடை

பசுவும், காளையும் நமது வாழ்வில் பங்காளிகள் என்றால் அது மிகையான கூற்று அல்ல. காளைகள் வேளாண்மைக்கு வேண்டிய மூல உழைப்புச் சக்தியை அளிக்கின்றன. பசுக்கள், மக்களுக்கு குறிப்பாக குழந்தைகளுக்கும், சக்தி குன்றியவர்களுக்கும் இன்றி யமையாத பாலை வழங்குகின்றன.

எனவே, பயனுள்ள கால்நடைகளைக் கொல்ல விடாமல் அவைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமான காரியமாகும். நமது அரசியல் அமைப்பும் இதை வற்புறுத்துகிறது.

### வதைத் தடுப்பு சட்டம்

கால்நடை வதையைக் கட்டுப்படுத்தி, பயனுள்ள கால்நடைகளின் பாதுகாப்புக்கு வகை செய்வதற்காக, மத்திய கோ சம்வர்த்தன கவுன்சில் தயாரித்த நகல் மசோதாவை இந்திய அரசாங்கம் முன்னர் நமது

அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தது. மேற்கண்ட மசோதாவில் சொல்லப்பட்ட ரீதியில் சட்டமியற்ற நடவடிக்கை எடுப்பதைப் பற்றி ஆராயும் படியும், இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டது.

இந்திய அரசாங்கத்தின் அவ்வேண்டுகோளின் பேரில் நமது தேசத்திலுள்ள பெரும்பாலான மாநிலங்கள் ஏற்கனவே தகுந்த சட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றி உள்ளன. மைசூர்-ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பசுவதையைப் பூர்ணமாகத் தடை செய்துள்ளன. பம்பாய், அஸ்ஸாம், மேற்கு வங்கம், ஹைதராபாத் ஆகிய மாநிலங்களில் ஓரளவுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இதையொட்டி இந்த அரசாங்கம் 1958-ம் ஆண்டில் சென்னை விலங்குகள் பாதுகாப்பு மசோதாவை தயாரித்தது. சில வார்த்தை மாற்றங்களுடன் அம் மசோதா சட்ட மன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.

**நோக்கம் என்ன?**

காளைகள், எருதுகள், பசுக்கள், கன்றுகள், எருமைகள், எருமைக்கன்றுகள், போன்ற சிலவகைக் கால் நடைகளை வதை செய்வதைத் தடுப்பதே சட்டத்தின் நோக்கமாகும்.

பத்து வயதுக்கு மேற்பட்ட விலங்குகளும், உழைப்புக்கும், வளர்ப்புக்கும் தகுதியற்றவைகளும், காயமடைந்தோ, ஊனப்பட்டோ அல்லது தீராத வியாதியினால் பாதிக்கப்பட்டோ, நிரந்தரமான சக்தி குன்றிய விலங்குகள் மட்டுமே கொல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படும். அத்தகைய விலங்குகள் எதையாவது கொல்லவேண்டுமானால், அந்த விலங்கு



கொல்லப்படுவதற்குத் தகுதியானது என்று உரிய அதிகாரியிடம் சான்று பெற்றாக வேண்டும்.

விலங்குகளை வதைக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே அவைகளை முடமாக்குகிறவர்களுக்கும் அல்லது அவைகளுக்கு விஷம் வைக்கின்றவர்களுக்கும் அல்லது அவைகளைப் பயனற்றவைகளாகச் செய்பவர்களுக்கும் தக்க தண்டனை அளிக்கச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**பொன் முட்டையிடும்...**

இந்தச் சட்டத்தின் நோக்கம் வேலை செய்கின்ற மாடுகளைக் கொல்லாமல் பாதுகாக்க வேண்டும் என்பதுதான். பால் அளிக்கக் கூடிய பசுக்கள், நமக்கு வேலை செய்யக் கூடிய மாடுகள் இவைகள் இரண்டும் நம்முடைய பொருளாதாரத்தில் பெரிதும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை அழிப்பதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. பாதுகாக்க வேண்டுமென்பதுதான் இந்தச் சட்டத்தின் உட்கருத்து.

வேலை செய்கின்ற மாடுகளைக் கொன்று விட்டால் நம்முடைய வேலை பாதிக்கப்படும். மாமிசம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு சிலர் ஆசைப்பட்டு அதை வாங்கலாம். அதேபோல பசுக்களையும் பால் மரத்து இருக்கும் காலத்தில் பராமரிப்பதற்காக அஞ்சி, விற்று விட்டால் பணம் வரும் என எண்ணி விற்று விடுகிறார்கள்.

அந்த மாதிரியான எண்ணத்திற்கே நாம் இடம் கொடுக்கக் கூடாது. ஒரு பழமொழி சொல்வது உண்டு. "பொன் முட்டையிடும் வாத்தைக் கொல்வது" என்பதாக. அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான் நம் நோக்கம். வேறு ஒன்றும் இல்லை.

**மந்தை மந்தையாக . .**

மாடுகளைக் கொலை செய்வதைத் தடுப்பது இதன் நோக்கம் என்றால் ஆடுகளை ஏன் சேர்க்கக் கூடாது, மீனை ஏன் சேர்க்கக் கூடாது என்று கேட்டிருக்கிறார்கள். அமெரிக்காவை எடுத்துக் காட்டுகிறார்கள். அமெரிக்காவில் மாடுகள் விவசாயத்திற்குப் பயன் படுவதே இல்லை. குதிரைகளைத்தான் உபயோகிக்கிறார்கள். இங்கே அப்படி இல்லை. குதிரையைக் கட்டி யாரும் உழுவது, விவசாயம் செய்வது எதுவும் நம் நாட்டில் இல்லை. மாடுகள்தான் மிகவும் அதிகமாக உபயோகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே பொருளாதார அமைப்பில் அந்த தேசத்திற்கும், நம் தேசத்திற்கும் ஒப்பிட முடியாது. அப்படிச் செய்வதில் பயன் இல்லை. இந்த நாட்டுக்கு இந்தச் சட்டம் அவசியம். சென்னை நகரத்திற்கு அப்பால் மாலை நேரத்தில், இருட்டு வேளையில் சென்றால் எவ்வளவு மாடுகள் மந்தை மந்தையாகக் கசாப்புக்கடைக்குப் போய்க்கொண்டிருக்கின்றன என்று தெரியும்.

**பரிபூரணத் தடுப்பு**

அது மட்டுமல்ல. மைசூர் ராஜ்யத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அது அமுலில் இருக்கிறது. அதுவும், இந்த மாதிரி வதையைத் தடுக்கும் ஒரு சட்டமாகும். நான் ஒரு முறை சேலத்திற்குச் சென்றிருந்தபோது குறிப்பிட்டார்கள். மைசூரில் இருக்கும் மாடுகளை அங்குக் கொல்ல முடியாது என்று எல்லாம் ஹோசூருக்கு வருகிறது; அப்படி ஹோசூருக்கு ஏராளமாக அனுப்பி அங்கு கொல்கிறார்கள் என்று. அங்கு அப்படிக் கொல்வதை இந்தச் சட்டம் இல்லாததால் தடுக்க முடியவில்லை.



இந்தச் சட்டம் பல ராஜ்யங்களிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று முன்பே சொன்னேன். சில ராஜ்யங்களில் வதை பரிபூர்ணமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. சில ராஜ்யங்களில், நாம் இப்பொழுது இந்தச் சட்டத்தை எப்படித் தயாரித்திருக்கிறோமோ, அந்த வகையில் சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது. கோ சம்வர்த்தன சபையார் இந்த அடிப்படையில்தான் யோசனை தெரிவித்தார்கள்.

**லாயக்கில்லை என்று . . .**

இப்பொழுது எல்லாப் பசுக்களையும் கொல்வதை நிறுத்தி விடலாம் என்றால், அந்த மாமிசத்தில் அக்கறை இல்லாமல் இருக்கலாம். அக்கறை உள்ளவர்கள் யாருமே இல்லை என்று சொல்லலாம். அது வல்ல பிரச்சினை. தனக்கு இனி அது வேலை செய்ய முடியாது. அந்த மாட்டினால் ஒருவித பயனும் இல்லை என்றிருந்தாலும் அதைக் கட்டிக்கொண்டு தீனி போட வேண்டுமென்று சட்டம் செய்வது சரியல்ல. பால் அளிக்கப் பயனற்றுப் போய் விட்டதை, ஏதாவது ஒரு ஸ்தாபனம் அந்தக் கால் நடைகளை ஏற்றுக்கொள்கிறோம் என்று வர வேண்டும். உனக்குப் பயன் இல்லை என்றாலும் அதை நீதான் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று வற்புறுத்துவது நியாயமில்லை.

ஆகவேதான், இந்தச் சட்டம் பரிபூரணமாகத் தடுக்கும் விதத்தில் தயாரிக்கப்பட வில்லை. வேலை செய்யும் மாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். பத்து வருடம் வரை எந்த மாடும் நிச்சயம் வேலை செய்வதற்குத் தகுதியாகத்தான் இருக்கும். அதில் ஒரு ஐயமுமில்லை. பத்து வருடங்களுக்குப் பிறகு என்றாலும்கூட, பல்லைப் பார்த்தல்ல, அதற்குப் பிறகும்

ஒரு சர்ட்டிபிகேட் வேண்டும். இது வேலை செய்வதற்கு லாயக்கில்லை, பால் அளிக்க இது லாயக்கில்லை என்று சர்ட்டிபிகேட்டோடுதான் அதைக் காசாப்புக் கடைக்குக் கொல்ல அனுமதிக்க வேண்டுமென்பது சட்டம்.

எருமை மாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அதுவும் பல வகைகளில் பலன் தருகிறது. ஆகவே, மாடுகள் என்பது காளை மாடுகள், பசுக்கள், எருமைப் பசுக்கள், கன்றுகள் எல்லாம் சேர்ந்து இதில் அடங்கியிருக்கிறது.

**தரம் குறைவா?**

அரசாங்கம் பலவகைகளிலும் கால் நடைகளின் மேல் கவனம் செலுத்தி அதன் தரத்தை உயர்த்தப் பார்க்கிறது. அதன் தரமும் உயர்ந்திருக்கிறது. சென்னையிலும் உயர்ந்திருக்கிறது என்பதை அடிக்கடி நடக்கும் கால் நடைக் கண்காட்சியைப் பார்த்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். சட்டம் நிறைவேற்றுவதால் மட்டும் கால் நடைகளை அபிவிருத்தி செய்யப் போகிறோம் என்று சொல்லவில்லை. அதைப் பல வழிகளில் அபிவிருத்தி செய்ய திட்டங்கள் நிறைவேற்றுகிறோம். எங்கு பார்த்தாலும் அவைகளின் தரம் உயர்ந்து வருகிறது.

தஞ்சை ஜில்லாவில், டெல்டா பிராந்தியங்களில் மாடுகளின் தரம் குறைவு என்று பெயர். ஒரு சமயம் கும்பகோணத்தில் ஜில்லாக் கால்நடைக் கண்காட்சியைப் பார்த்தேன். என்னுடன் வந்தவர்களும் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். மாடுகளின் தரம் அவ்வளவு உயர்ந்து வருகிறது. தனிப்பட்டவர்கள் மாடுகளில் மிகுந்த அக்கறை எடுத்து மாடுகளை நல்ல முறையில் வளர்த்துவருகிறார்கள்.



**சிக்கல் இல்லை**

இப்படியெல்லாம் ஒரு பக்கம் செய்யும்போது, பலன் தரக்கூடிய மாடுகள் மற்ற ஒரு பக்கத்தில் ஏதோ மாமிசத்திற்காகவும் தோலிற்காகவும் கொல்லப் படுகிறது என்றால் நாம் இந்தத் திட்டங்களை நிறைவேற்றியும் பயனில்லை. ஆகவேதான் இந்தச் சட்டம் மற்ற ராஜ்யங்களில் செய்திருக்கிறார்கள், எனினும் கொஞ்சம் காலதாமதமானாலும் பாதகமில்லை. எந்த வகையில் நிறைவேற்றுவது என்று பரிசீலித்துப் பார்த்துத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. அதுதான் தாமதத்திற்குக் காரணம். இது நன்கு பரிசீலிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட சட்டம். இதில் சிக்கலான பிரிவுகள் ஒன்றுமில்லை என்று தாழ்மையோடு சொல்லிக்கொள்வேன்.

மற்றொன்று, எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், சட்டம் அவசியம் என்றிருந்தால் அதைச் செய்கிறோம். அவசியம் என்றிருந்தால் சில செய்கைகளைக் குற்றம் என்று சொல்கிறோம். ஹாரஸ்மெண்ட், தொந்தரவுகள் செய்வார்கள் என்று சொல்லப்பட்டது. தவறு செய்கிறவர்கள் தொந்தரவிற்கும் தயாராகயிருக்க வேண்டும். ஆனால் அனாவசியமாகத் தொந்தரவு செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

**வாயில்லா ஜீவன்கள்**

கொஞ்சம் புண் இருந்தாலும் புண்ணுக்குச் சிகிச்சை செய்யவேண்டும். அவை, வாயில்லா ஜீவன்களாகும். அது எப்படிச் சொல்லப் போகிறது. ஆகவே, நாம்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். அவைகளை அடுத்தது, லஞ்சம் இருக்கலாம். அங்குமிங்கும் அப்படி ஒருவர் இருவர் செய்யலாம். அதைச் சாக்காகச் சொல்லி சட்டம் வேண்டாம், நடவடிக்கை

கள் வேண்டாம், எந்தக் குற்றம் செய்தாலும் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்று யாரும் கோரமாட்டார்கள்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, யார் மாமிசம் சாப்பிடுகிறார்கள், யாருக்கும் இதில் அக்கறையில்லை, இங்கு யாருக்கும் அப்படிக் கொல்ல வேண்டும் என்ற எண்ணமில்லை என்றெல்லாம் சிலரால் சொல்லப்பட்டது. அவர்கள் வாதப்படி மாடுகளைக் கசாப்புக் கடைக்குக் கொண்டு போகவில்லை என்று சொன்னால் இந்த மசோதாவைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை.

தான் வைத்திருக்கும் மாடுகளைக் கசாப்புக் கடைக்குக் கொல்ல அனுப்பும் எண்ணம் இல்லாதவர்களுக்கு இந்தச் சட்டம் கிட்டவே வராது. ஆகவே, அவர்கள் எந்த விதத்திலும் கவலைப்படவே வேண்டாம். பாதிக்கப் படுகிறவர்களுக்குக் கூட அனாவசியமான தொல்லையோ, உபத்திரவமோ இல்லாமல், விவசாயிகள் பாதிக்கப்படாமல் இந்தச் சட்டம் அமுலில் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அவ்வாறு செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

## 20. மாறுபட்ட மதிப்பு

**அ**ரசாங்கம் விலைவாசியைப் பற்றிக் கவலைப்படுகிறது என்றால், அதற்கு வழி காண்பதில், இந்த அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்திவருகிறது என்றுதான் சொல்லுவேன். ''விலை குறைகிறது'' என்று நான் சொன்னால் என் வாக்கு கெட்ட வாக்கு, உடனே விலை ஏறிவிடுகிறது என்றும் சிலர் கூறுவதுண்டு. என் வாக்கைப் பற்றி எனக்குத் தெரியாது; நல்லதோ கெட்டதோ, நானே புகழ்ந்து பேச முடியாது. ஆனால் நானும் விலைவாசிகளைத் தெரிந்துகொள்ள ஊர் சுற்றிக் கொண்டுதான் இருக்கிறேன்.

### விசாரிப்பதில் நன்மை

சுற்றுப் பிரயாணம் செய்கிறோம் என்றால், அது வேடிக்கை பார்ப்பதற்கில்லை, உல்லாசப் பிரயாணம் இல்லை. புள்ளி விவரங்களை, விலைவாசி நிலைமையை, நேரிடையாகப் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். இங்கே மற்றவர்கள், என்னென்ன, எந்தெந்த இடத்திலே பார்க்கலாம், இன்னும் இதைப் பார்க்க வேண்டும், அதைப் பார்க்க வேண்டும் என்று போடுவது போன்றதல்ல எங்கள் திட்டம். நானே சென்ற இடங்களில் விசாரிக்கிறேன்; மற்றவர்களையும் விசாரிக்கிறேன், நியாயவிலைக் கடைகளின் விற்பனை எவ்வளவு, மார்க்கெட் விலை என்ன, போன மாதத்திற்கு

இந்த மாதம் எப்படி இருக்கிறது; என்றெல்லாம் விசாரிக்கிறேன். அப்படி விசாரிப்பதில் நன்மைகள் இருக்கின்றன.

நியாயவிலைக் கடைகள் தொடங்கினேம். நாம் இப்பொழுது விநியோகித்த அதே ரக அரிசி, இதற்கு முன்பு சென்னை படி ஒன்று ரூ. 1-20 ஆக இருந்தது; நாம் குறிப்பிடுவது சாதாரண ஏழைகள் சாப்பிடும் அரிசி. நல்ல பாசங்கி, கிச்சலி சம்பா இவற்றைச் சொல்லவில்லை. நியாய விலைக் கடைகள் வைத்து, கொள்முதல் செய்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக விலை குறைய ஆரம்பித்தது.

## முதல் கவலை

ஏழை மக்களுக்கு அன்ருட முதல் கவலை, அவர்கள் சாப்பிடும் அரிசி விலை சரசமாக இருக்கவேண்டும் என்பதே. பச்சரிசி விலையும் உயர்ந்திருக்கிறது. ஆனுல் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் குறைகிறது. ஏழைகள் சாப்பிடும் அரிசியைப்பற்றி குறிப்பாக விசாரித்தேன். அப்படி விசாரித்ததில் முன்னுல் ரூ. 1-20 படி விற்றது, நியாய விலைக் கடைகள் வைத்த பிறகு ரூ. 1-00 வாகக் குறைந்தது என்று சொன்னுர்கள். கலெக்டர் குறைந்து வருகிறது என்று சொல்வதை மாத்திரம் நான் எடுத்துக்கொள்ளவில்லை. பத்திரிகைக்காரர்களையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

சில இடங்களில் விலை ஏறலாம். ஆனுல் குறைவதைக்கொண்டே திருப்திப்பட்டு எல்லாம் சரியாகப் போய்விட்டது என்பதில்லை அரசாங்கத்தாருக்கு. இப்பொழுது குறைவது போதாது, நிரந்தரமாகக் குறைய வேண்டும். எப்படிக் குறைப்பது என்பதில் கவனம் செலுத்திவருகிறேம்.



## கட்டுப்படியாகும் விலை

ஆனுல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கட்டுப்படியாக வேண்டும். அத்துடன் விவசாயிகளுடைய விவசாயச் செலவு வேறு இருக்கிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்தினுல் விவசாயிகளுக்கு அவர்களுடைய செலவு கட்டுப்படியாக வேண்டியதாக இருக்கிறது. இதுவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்தான். விவசாயிகளுக்கு வேண்டிய வசதியைக் கொடுத்தால்தான் அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுவார்கள். விலைவாசிகளைக் குறைக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறேம். இதில் தவருன கருத்துக் கொள்ளக் கூடாது, இவற்றை யெல்லாம் உணர வேண்டும்.

## மாறுபட்ட மதிப்பு

யுத்தத்திற்கு முன் இருந்த விலைவாசிகளைப் பற்றிக் குறிப்பிட்டு அதைப் பற்றி சொல்லுகிறுர்கள். யுத்தத்திற்கு முன் ரூபாய்க்கு எவ்வளவு மதிப்பு இருந்தது; இப்பொழுது எவ்வளவு மதிப்பு இருக்கிறது; என்பதைக் கவனிக்க வேண்டும். நூற்றுக்கு இருபது பங்கு குறைந்துவிட்டிருக்கிறது. இப்படிப் பட்ட மாறுபட்ட மதிப்பு இந்நாட்டில் மாத்திரம் அல்ல. வெளிநாட்டில் சுற்றிவிட்டு வருகிறவர்களைக் கேட்டால் இதைப்பற்றிச் சொல்லுவார்கள். வெளிநாடுகளில் கூட ரூபாயின் மதிப்பு குறைந்திருக்கிறது. நூற்றுக்கு இருபது பங்கு குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறுர்கள்.

அதைப்போலவே விவசாயக் கூலிகளுடைய கூலியைப் பற்றியும் கவனிக்க வேண்டும். யுத்தத்திற்கு

முன்னால் ஆட்கள் எவ்வளவு கூலி வாங்கி வந்தார்கள் என்பதையும், இப்பொழுது எவ்வளவு வாங்குகிறார்கள்; என்பதையும் கொஞ்சம் கவனித்துப் பார்க்கவேண்டும். யுத்தத்திற்கு முன்னதாக இரண்டு அல்லது மூன்று அணா கூலி கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு வேலை செய்துவந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் எல்லோரும் ஒரு ரூபாய்க்கு மேல் கூலி கேட்கிறார்கள்.

ஆகவே அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய சட்டத்தையும் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டியதாக இருந்தது. விவசாயிகள் சம்பந்தமாக கூலி நிர்ணயச் சட்டம் அமுலில் இல்லை. அதைக் கொண்டுவந்தால் அதனால் விவசாயம் பாதிக்கப்படுமோ என்று இருந்தது. இப்பொழுது அமுலுக்கு அதைக் கொண்டுவர வேண்டியதாக இருந்தது. அவர்களுடைய கூலியை நிர்ணயம் செய்து அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி என்ன கொடுக்க வேண்டும் என்ற முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

**நகரமும் கிராமமும்**

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும்போது விவசாயிகளுக்கும் கட்டுபடியாகவேண்டியதாக இருக்கிறது. விலைவாசிகள் அதிகமாக இருந்தால், அதனால் விவசாயிகளுக்குச் சௌகர்யமாக இருந்தாலும் நகரங்களிலுள்ளவர்களுக்கு அது கஷ்டமாக இருக்கிறது. கிராமங்களில் அதிகமான விலைக்கு உணவு தானியங்களை வாங்குவது இல்லை. நகரங்களில் வாழ்கிறவர்கள்தான் அதிகமான விலைக்கு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அதனால் கிராமங்களில் வாழ்கிறவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதோடு நகரங்களில் இருக்கக் கூடியவர்களுடைய வாழ்க்கைத் தரமும் உயர வேண்டியதாக



இருக்கிறது. இதற்கு என்ன செய்வது என்பதை நாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

இப் பிரச்சினையைத் தீர்க்க நீண்டகால நடவடிக்கை எடுத்துக்கொள்வதா அல்லது தற்காலிக நடவடிக்கை எடுத்துக்கொள்வதா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. தற்காலிக நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக இருந்தால் ஓரளவு கொள்முதல் செய்து, அதை நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுத்து வருவதால் ஓரளவு பயன் ஏற்பட்டிருக்கிறது. ஓரளவு விலை கூட குறைந்திருக்கிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

**யாருக்காக வியாபாரம்**

சிறு நிலக்காரர்களுக்குக் தொல்லை கொடுக்காமல் பெரிய நிலக்காரர்களிடமிருந்து வாங்குவதாகத்தான் உத்தேசம். அதனால்தான் வியாபாரிகளிட மிருந்து கொள்முதல் செய்வது என்று ஆரம்பித்தோம். அதனால் வியாபாரிகளுக்குக் கொஞ்சம் கோபம் ஏற்பட்டது. வியாபாரிகள் இதை எதிர்த்தார்கள். வியாபாரிகளுக்குப் பயந்துகொண்டிருந்தோம் என்று சிலர் குறிப்பிட்டார்கள். வியாபாரிகளை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக்கிடையாது. வியாபாரிகள் வர்க்கமும் வாழவேண்டும் என்பது தான் எங்களுடைய எண்ணம். சிலருக்கு இப்படிப்பட்ட எண்ணம் இருக்கலாமோ என்னமோ; எங்களுடைய எண்ணம் அந்த வர்க்கமும் வளர வேண்டும் என்பதுதான்.

வியாபாரிகளிடமிருந்து எங்களுக்குப் பணம் தேவை இல்லை. சுதந்திரத்திற்குப் பாடுபட்டபோது

கூட அவர்களிடமிருந்து நாங்கள் பணத்தை எதிர் பார்க்கவில்லை. ஆனல் தி. மு. க. வினருக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. யாரிடமிருந்து காங்கிர சுக்கு உதவி கிடைத்தது என்பது அவர்களுக்குத் தெரியாது. அன்று ஜஸ்டிஸ் கட்சி இருந்த காலத்தில் யார் உதவியை நாடி நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டோம்? அப்பொழுதே நாங்கள் வெள்ளைக்காரரை எதிர்த்துச் சுதந்திரம் வாங்கி இருக்கிறோம். அதனல் வேறு யாரையும் நாங்கள் எதிர்பார்க்க வேண்டிய தில்லை. காங்கிரஸிற்கு மக்களின் பலம் இருக்கிறது.

வியாபாரிகள் ஜனங்களுக்கா அல்லது ஜனங்கள் வியாபாரத்திற்கா என்பதைப் பார்க்கவேண்டும். இதை வியாபாரிகளும் உணரவேண்டும். வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் லாபம் அடைவதற்கும்தான் வியாபாரிகள் இருக்கிருர்களா? இதை அவர்கள் உணரவேண்டும். ஜனங்கள் அதிருப்தி அடையக் கூடாது. வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடிக்கக் கூடாது.

## உற்பத்திப் பெருக்கமே வழி

உணவு தானியங்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்வதனுலும் சில சங்கடம் உண்டாகிறது. நாம் கொள்முதல் செய்கிறபோது மாத்திரம் விலை நிர்ணயித்துவிட்டு, மற்றவற்றை என்ன விலைக்கு வேண்டுமானுலும் விற்றுக் கொள்ளட்டும் என்று விடுவதா? அப்படிச் செய்தால் குறைந்த விலைக்கு இங்கே கொடுக்க மாட்டார்கள். நம் கொள்முதல் பாதிக்கப்படுகிறது. அவர்களும் குற்றம் செய்கிறவர்கள் ஆகிருர்கள். இவற்றையெல்லாம் கவனித்துப் பார்க்கிறபோது பொதுவாக விலைக்கட்டுப்பாடு இல்லாமல் எல்லாப்



பொருள்களும் இருக்கிறபோது இதற்கு மாத்திரம் விலை நிர்ணயிப்பது சட்டப்படி சரியா; என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியதும் அவசியமாயிற்று. அதையும் பரிசிலனை செய்தோம்.

ஆகவே இது எல்லாம் நீண்ட கால நடவடிக்கைகள் அல்ல. நம்முடைய முதல் திட்டம் உற்பத்தியைப் பெருக்குவதுதான். அதற்கு என்ன வழி, இருக்கக் கூடிய கஷ்டங்கள் என்ன, அவற்றையெல்லாம் எப்படிப் போக்கலாம், என்ன காரியங்களைச் செய்து உடனடியாக உற்பத்தியைப் பெருக்கும் வகையில் செய்யமுடியும் என்பதைப் பற்றித்தான் யோசிக்கிறோம்.

## தேவைக்கேற்ற உரம்

உரம் நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்யப் படுகிறது என்றுலும் இது போதாது. தேவைக்குப் போதவில்லையென்றால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. அப்படி இறக்குமதி செய்கிறபோதும் இந்திய சர்க்கார், நம்முடைய பொருளாதார நிலையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இன்றையத்தினம் அவர்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் நல்ல முறையில் எடுத்துக் கொண்டுதான் வருகிருர்கள். அதிக விலைக்கு வெளிநாடுகளில் இருந்து உரத்தை இறக்குமதி செய்து, குறைந்த விலைக்கு-எப்படியாவது உற்பத்தியைப் பெருக்கினல் சரி-என்று நான் விநியோகம் செய்து கொண்டிருக்கிருர்கள். நாமும் நம்முடைய ராஜ்யத்திற்கு எவ்வளவு தேவையோ, அதைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதில் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

**தமிழ்நாடு வளம் பெற . . .**

கனரகத் தொழில்கள், பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் இங்கே ஏற்படவேண்டும். மத்திய சர்க்கார் நம்மைப் புறக்கணிக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி யெல்லாம் சொல்லிவிடுவது சுலபம். நெய்வேலியில் கனரகத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய காரியங்கள் எல்லாம்தான் நடந்து கொண்டிருக்கின்றன. நம் ராஜ்யத்திலும் பெரிய தொழில்கள் வருகின்றன. அவர்கள் அதற்காக ஏராளமான பணத்தைச் செலவிடுகிறார்கள். லாபத்தில் நமக்கும் பங்கு உண்டு. இதில் என்ன தவறு? அதே மாதிரிதான் உருக்குத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை எல்லாம் இங்கே ஏற்படுத்துவதற்கு வேண்டிய காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் ஒன்றும் இதைப்பற்றி கவனிக்காமல் இருந்துவிடவில்லை. தமிழ்நாடு வளம் உள்ளதாக ஆகவேண்டும் என்பதற்காக எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுதான் வருகிறோம்.

**சுயமரியாதைக் கல்யாணம்**

சுயமரியாதைக் கல்யாணங்களைச் செல்லுபடியாகச் சட்டம் ஒன்று இயற்றவேண்டுமென்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள், பலர் வற்புறுத்துகிறார்கள். சுயமரியாதைக் கல்யாணம் என்றால், எது சுயமரியாதைக் கல்யாணம் என்று தெரியவில்லை. சிலர் தாலி கட்டுகிறார்கள். சிலர் மாலை போடுகிறார்கள், சிலர் விளக்கு வைத்துச் செய்கிறார்கள், சிலர் விளக்கு வைக்காமல் செய்கிறார்கள்—இப்படி யெல்லாம் நடக்கிறது. எப்படி சுயமரியாதைக் கல்யாணத்தை 'டிபைன்' செய்வது, ''ப்ரிசைஸ்ஸாக ஸ்டாட்யூட்டில் டிபைன்''



செய்யவேண்டும். எனவே எப்படி வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளட்டும், யாரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளட்டும். ஆனால் அவைகளை ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பதிவு செய்தால் போதும்.

சுயமரியாதைக் கல்யாணத்தை எப்படி டிபைன் செய்வது என்பதில்தான் கஷ்டமிருக்கிறது. முன்பே கல்யாணம் செய்து கொண்டவர்கள் இப்பொழுது வேண்டுமானாலும் ரெஜிஸ்தர் செய்து கொள்ளலாம். இதைப்பரிசீலனை செய்து பார்த்தோம். வேண்டாமென்றில்லை.

**கைத்தறிப் பிரச்சினை**

அமெரிக்காவில் இன்று ''ப்லீடிங் மெட்ராஸ்''க்கு மக்களுக்கு மோகம் இருக்கிறது. ஆனால் தரம் கெடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சொல்லப்போனால் சிக்காகோவில் தமிழ்நாட்டுக் கைத்தறித் துணிக்கு ரொம்ப வசீகரம் இருக்கிறது. இதைப் பார்த்து வடநாட்டிலுள்ளவர்கள் சிக்காகோ பொருட்காட்சியில் தமிழ் நாட்டுக் கைத்தறித் துணி அதிகமாக விற்கப்படுகிறதே, எங்கள் நாட்டுத் துணி விற்கப்படவில்லையே என்றார்கள்.

தமிழ் நாட்டில் துணி வசீகரமாக நெய்யப்படுகிறது. அதனால் கூலி கூட அதிகமாகக் கிடைக்கிறது. அவ்வளவு கொடுக்கலாமா என்று பிரச்சினை எழுந்தபோது இந்த அரசாங்கம் அதுபற்றி வற்புறுத்தியிருக்கிறது. மற்றொரு பக்கத்தில் நூல் விலை அதிகமாயிருக்கிறது. பருத்தியை மில்களில் வாங்குகிறார்கள். நூல் விலை குறைந்தால் மில்களில் வேலை பாதிக்கப்படுகிறது. அப்படி வரும்போது போனஸ் இல்லையென்று சொல்கிறார்கள்.

ஆக, கைத்தறிக்கு நிரந்தரமான ஒரு பரிகாரம் காணவேண்டும். இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தர மான பரிகாரம் காணவேண்டும். அதற்கு ரிபேட் போன்றவைகள் கொடுப்பதோடு நிரந்தரமான பரி காரம் காண நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

## உணவும் அரசியலும்

முக்கியமாக, உணவு விஷயத்தை ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்காதீர்கள் என்கிறார்கள். எல்லோ ருக்கும் நான் சொல்கிறேன், உணவு விஷயத்தை நாம் அரசியலுக்காகப் பயன்படுத்தலாம் என்று சொல்வது தவறு. அது சரியாக நடக்காது. ஜனங்களுக்கு நன்கு தெரியும். ஜனங்கள் எல்லாவற்றையும் பார்த் துக்கொண்டுதான் இருக்கிறார்கள். நாம் எல்லோரும் அரசியலில் நல்ல அனுபவம் பெற்றவர்கள். நமது மக்களுக்கு நல்ல கிரமமான ஞானம் இருக்கிறது. ஆகவே, இந்த உணவு விஷயத்தை அரசியலுக்காக நாம் பயன்படுத்தக்கூடாது. அதை எல்லோரும் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடித்து உணவு நிலைமையைச் சீர்படுத்து வதற்குக் கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சமுதாயநலத் திட்டத்தின் பலனை மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். சில இடங்களில் ஏதோ தவறு கள் நடந்திருக்கலாம். அதற்காக இந்தத் திட்டம் அடியோடு பிரயோஜனமில்லை என்று சொல்ல முடி யாது. அவ்விதம் சொல்லுவதாக இருந்தால் அதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## கரும்பு கூடாதா?

இப்போது பல இடங்களிலும் கரும்புப் பயிரை அதிகமாகப் போட்டு வருகிறார்கள். இதனால் நெல் விவசாயம் மோசமடைகிறது என்று குறிப்பிட்டார் கள். அவ்விதம் கூறுவது சரியல்ல; இதைப்பற்றி, கணக்குகள் இருக்கின்றன. நெல் விளைச்சல் எவ் வளவு தூரம் பெருகியிருக்கிறது என்பதைப் பார்த் தால் கரும்புப்பயிரில் பெருகியிருப்பதைவிட அதிக மான அளவு நெல் பயிரும் பெருகியிருப்பதைப் பார்க்க முடியும்.

கரும்புப் பயிரும் வேண்டாம் என்று நாம் சொல் வதற்கில்லை. எங்கு பார்த்தாலும் இப்போது என்ன குறை-கூழுக்கு உப்பில்லை என்றிருந்தாலும் பாலுக்குச் சீனியில்லை—என்கிற குறைதான். எங்கு பார்த்தாலும் சீனி இல்லை என்கின்ற குறை இருந்துகொண்டிருப் பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே கரும்புப் பயிரும் நமக்கு வேண்டியதுதான், அதுவும் பெருக வேண்டியதுதான். இதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டது என்பது சரியல்ல, பாதிக்க வும் செய்யாது என்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

## 21. வாங்கும் சக்தி

விலைவாசி உயர்வைக் குறைக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினருடைய ஆவல். விலை ஏற்றத்தைக் குறைக்கவேண்டும் என்பதுதான அரசாங்கத்தின் ஆவல். 'விலைவாசியைக் கண்காணிக்க, எல்லாக் கட்சியினரும் சேர்ந்திருக்கிற ஒரு கமிட்டி போட்டால் என்ன?' என்று சிலர் கேட்டார்கள்.

### கமிட்டி போட்டும் . . .

நான் ஒன்று கூற விரும்புகிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதிலே எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் இருந்தார்கள். பன்முறை அந்தக் கமிட்டி கூடி விவாதித்தது. நான் அதில் கேட்டேன், 'கம்யூனிஸ்டுக்கட்சி அங்கத்தினரோ, திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதியோ, அல்லது வேறு கட்சிப் பிரதிநிதியோ யாராக இருந்தாலும் விலைவாசியைக் குறைக்க நீங்கள் ஏதாவது யோசனை இருந்தால் சொல்லுங்கள்' என்று.

கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக ஒரு அங்கத்தினர் அந்தக் கமிட்டியில் முதலில் இருந்தார். அவர் சட்டமன்றத்தைச் சார்ந்த அங்கத்தினர். அவரை அக்கமிட்டியிலிருந்து மாற்றிவிட்டு, அவருக்குப் பதிலாக வெளியிலே இருக்கும் வேறொருவரை அதில்



போடவேண்டும் என்று அந்தக் கட்சியின் சார்பில் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நான் இசைந்தேன். வேறு ஒரு அங்கத்தினரை அந்தக் கமிட்டியில் மாற்றிப் போட்டும்கூட, உருப்படியான யோசனை ஒன்றும் வரவில்லை. தி. மு. கழகம் உள்பட மற்றவர்களும் ஏதும் யோசனை கூறவில்லை.

### ஓரளவு கண்ட்ரோல்

இப்பொழுது விலைவாசியைப் பற்றி என்ன செய்ய வேண்டும்? 1953-ம் ஆண்டிலே 'கண்ட்ரோல்' எல்லாம் எடுக்கப்பட்டது. திடீரென்று எடுக்கப்பட்டது. படிப்படியாக எடுத்திருந்தால்கூட அது நலமாக இருந்திருக்கலாம். கண்ட்ரோல் வேண்டாம் என்று திடீரென்று எடுக்கப்பட்டது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று யோசனை கூறட்டும். உணவுத் தானியங்கள் எல்லாவற்றையும் நாமே—அரசாங்கமே—ஏகபோகமாக வாங்கி, அவற்றுக்கு விலை வைத்து விற்கவேண்டுமென்று சொல்கிறார்களா? அப்படி விற்பது என்றால், அத்தகைய கண்ட்ரோலை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா? அதையும் ஓரளவுக்குச் செய்துதானே வருகிறோம்.

### ரஷ்யாவில் நடப்பது

'ரஷ்யாவிலே நடக்கிறது' என்று குறிப்பிடப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யாவுக்குச் சென்றிருந்தேன். 'கண்ட்ரோல்டு இகானமி' இருக்கிறதாகச் சொல்லும் ரஷ்யாவிலே கூட இரண்டு விலைகள் இருக்கின்றன. கண்ட்ரோல் இல்லாமல் என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்ற நிலை ரஷ்யாவில் இருக்கிறது. நானும் சில கடைகளுக்குச் சென்று பார்த்தேன். கறிகாய்க் கடைகளில்கூட, கடைக்குக் கடை விலையில் வித்தியாசம் இருக்கிறது.

இந்தியத் தூதராலயத்திலிருந்த பல நண்பர்கள் என்னிடத்திலே வந்து சொன்னார்கள், 'எங்களுக்கெல்லாம் கண்ட்ரோல் விலையில் பொருள்கள் கிடைப்பதில்லை' 'எம்பசி' என்பது முன்னதாகத்தெரிந்தால்தான் கிடைக்கிறது; மற்றபடி அதிக விலை கொடுத்துத்தான் வாங்குகிறோம்' என்று. அங்கே இரண்டு விலை இருக்கிறதென்பது விசித்திரமாக எனக்குத் தோன்றுகிறது. மற்றவர்களுக்கும் அப்படித்தான் தோன்றும் என்று நான் நினைக்கிறேன்.

**நெல்லூர் அரிசி**

இப்பொழுது முழு கண்ட்ரோல் கொண்டுவர வேண்டும் என்பதுதான் எல்லோருடைய அபிப்பிராயம் என்றால், அதை அரசாங்கம் பரிசீலனை செய்து அதை ஏற்றுக்கொள்வது உசிதமா, நாட்டு நலனுக்கு உகந்ததா என்பதைப் பற்றி யோசித்து முடிவு செய்யும்.

சென்னையில் பொதுவாக எல்லோருக்கும் நெல்லூர் அரிசிதான் வேண்டியிருக்கிறது. தஞ்சாவூர் அரிசி, செங்கற்பட்டு அரிசி, இராமனாதபுரம் அரிசி என்றால் பிடிப்பதில்லை. குறிப்பாக நடுத்தர வர்க்க குடும்பத்தினர் நெல்லூர் அரிசிதான் வேண்டும் என்கிறார்கள். இது அதிக விலையாக இருக்கிறது. அதே மாதிரி விறகின் விலையும் அதிகப்பட்டுக்கொண்டு போகிறது.

**பதுக்கல் எங்கே ?**

'உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை எப்படி ஒத்துக்கொள்வது? பெருகியிருக்கிறது என்றால் விலை குறைய வேண்டுமே! அப்படிக் குறையாமலிருப்பதால் உணவு தானியங்கள் பதுக்கப்பட்டிருக்க வேண்டும்' என்று கூறுகிறார்கள்.



உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்களே எடுத்துக் காட்டும். அது மட்டுமல்ல. வேறு யாருடைய தயவையும் எதிர்பாராமல்' இருபது அவுன்ஸ் அரிசி வேண்டுமானாலும் ஒருவர் வாங்கிச் சாப்பிடலாம் என்ற நிலை இருக்கிறது. அப்படிச் சாப்பிட்டும் கூட, மீதமாக உள்ள மூன்று லட்சம் டன் அரிசி கேரளாவுக்குக் கொடுக்கிறோம். நிலைமை இப்படியிருக்க, அரிசி பதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள் என்றால், 'எங்கே பதுக்கப்பட்டிருக்கிறது? எதற்காகப் பதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்கிறேன்.

**பணப் புழக்கம்**

திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், மற்றும் சிலருங்கூட பேசினார்கள்—'எங்களிடம் ஆட்சியைக் கொடுங்கள், பதுக்கப்பட்டிருப்பதை நாங்கள் எடுத்துவிடுவோம், விலையைக் குறைத்து ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். எதற்காக ஆட்சியை நாங்கள் இவர்களிடம் கொடுப்பது ? எப்படிக் கொடுப்பது ?

ஜனங்கள் ஆட்சியைக் காங்கிரசிடம் கொடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் எப்படி மற்றவர்களிடம் கொடுப்பது? ஆனால், பதுக்கல் பற்றி விவரங்கள் இருந்தால் அவைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்களோ, தலைவர்களோ எங்களிடத்தில் கொடுக்கட்டும். பதுக்கப்பட்டிருப்பதாக ஏற்பட்டால், அதைப் பறிமுதல் செய்யலாம். அதற்காக வேண்டுமானால் சட்டம் போட்டுப் பறிமுதல் செய்து, ரூபாய்க்கு மூன்று படி என்ன, இலவசமாகக்கூட கொடுத்து விடலாம்.

இது 'குரோயிங் அண் டெவலப்பிங் இகானமி' பொருளாதார வகையில் நாடு உயர்ந்து கொண்டே

போகிறது. கையில் பணப்புழக்கம் இருக்கிறது. மக்களிடத்தில் வாங்கும் சக்தி (பர்ச்சேசிங் பவர்) இருக்கிறது. விலைவாசி உயர்வுக்கு அது முக்கியமான காரணம். எப்படியாவது விலைவாசியை ஓரளவுக்குக் குறைத்துத்தான் ஆகவேண்டும்.

**விவசாயச் செலவு**

விலைக்கு வாங்குகிறவர்களைப் பொறுத்தவரையில் விலையை எந்த அளவுக்குக் குறைத்தாலும் அவர்களுக்கு நல்லதுதான். ஆனால், கிராமத்திலே உணவுத் தானியங்களை உற்பத்தி செய்கிறார்களே, அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று யார் சொல்வார்கள் ? விவசாயம் செய்வதற்கு வேண்டிய கருவிகள் முதலியவற்றின் விலை அதிகப்பட்டு இருக்கிறது. அதனால் விவசாயச் செலவு அதிகமாகிறது. ஆகையால், அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களின் விலையைக் குறைக்க முடியாது.

உணவு உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கத் திட்டமிட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் தமிழ்நாட்டில் பதினாறு லட்சம் டன்னுக்கு அரிசி அதிகமாக உற்பத்தி செய்வது என்று திட்டம் இருக்கிறது. மற்ற 'கமாடிடீஸ்' ஸைப் பற்றியும் திட்டம் இருக்கிறது.

**நியாய விலை**

விலைவாசியைக் குறைப்பதற்கு வழிவகை என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் அப்போதைக்கப்போது பரிசிலனை செய்துதான் வருகிறது. பரிசீலனை செய்ததன் பேரில் ஒரு முறையைக் கையாளுவது என்றும் அரசாங்கம் முடிவு செய்து, அதை நிறைவேற்ற முற்பட்டிருக்கிறது.



சில சமயங்களில், விவசாயிகளிடமிருந்து என்ன விலை கொடுத்துப் பொருள் வாங்கப்படுகிறதோ, அதற்கு ஏற்றபடி சில்லறை விலை இருப்பதில்லை. ஏனென்றால், இடையில் உள்ள வியாபாரிகள் அதிக லாபம் வைத்து விலையை உயர்த்தி விடுகிறார்கள். அதற்கு இடம் கொடுக்காமல் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், உணவுத் தானியங்களை உபயோகிப்போரைக் கொண்டு கூட்டுறவு ஸ்டோர்கள் வைத்து, மொத்தத்தில் பொருள்களை வாங்கி, நியாயமான விலைக்கு விற்க அரசாங்கம் வசதி செய்து கொடுத்தது.

**பைலட் ஸ்கீம்**

கூட்டுறவு ஸ்டோர்கள் மூலம் விற்கப்படும்போது, மிகக் குறைந்த விலைக்கு இல்லாவிட்டாலும், லாபம் இல்லாமல் விற்கலாம் அல்லது நியாயமான விலைக்கு விற்கலாம். டி.யு.சி.எஸ். ஸைப் பொறுத்த வரையில் பங்குதாரர்கள் 'டிவிடென்ட்' கொடுப்பதுதான் அவர்களுக்குப் பெரிதாக இருக்கிறது. டி.யு.சி.எஸ்.சின் மூலமாக விற்கும்போதுகூட விலை குறையும் என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் அதற்காகத்தான் இப்படி கூட்டுறவு ஸ்டோர்கள் ஏற்படுத்தி அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிப்பது என்று தீர்மானித்திருக்கிறோம்.

இப்போது தற்காலிகமாக பைலட் ஸ்கீம் என்று சென்னை நகரத்தில் 10 கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ் அமைத்துள்ளார்கள். அவற்றின் சிப்பந்திகள் செலவை அரசாங்கம் ஒத்துக் கொள்ளலாம். ஆனால் சாமான்களுக்கு எல்லாம் விலையைக் குறைப்பதற்காக மான்யம் கொடுப்பது என்றால் அது சரியல்ல. யாருடைய பணத்தை எடுத்து யாருக்குக் கொடுப்பது ? விலையை

"சப்சிடி" கொடுத்தாவது குறைக்க வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். அது சரியல்ல என்று சொல்கிறேன்.

விலையைக் கட்டுப்படுத்த வேண்டும், ஜனங்களுக்கு வசதி செய்து தரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதற்காகத்தான் இந்த பைலட் ஸ்கீம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிறகு மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும். பத்தாயிரம் மக்களுக்கு மேற்பட்ட ஜனத்தொகையையுடைய நகரங்களுக்கு எல்லாம் இதை விஸ்தரிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

## 22. முன்னேற்ற நம்பிக்கை

நமது பாரத நாட்டின் எல்லையில் ஆபத்து இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால், அது நமக்கு மிகவும் கவலை அளிக்கக்கூடியதாய் இருக்கிறது.

நம்முடைய நாட்டுக்கு எந்தவிதமான ஆபத்து வருவதாக இருந்தாலும், அதில் நாம் எல்லாம் ஒருமனதாக, நம்மிடையில் இருக்கின்ற வேற்றுமைகளை எல்லாம் மறந்து, நமது நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தயாராக இருப்போம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது என்று நம்புகிறேன்.

### முன்னேற்ற நம்பிக்கை

இந்திய நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் ஒரே மனதாக ஒற்றுமையோடு இருப்பதற்கு நாம் உறுதி கொண்டிருக்கிறோம். நம்முடைய நாட்டில் எவ்வளவோ குறைகள் இருக்கலாம். நம்முடைய நாடு மட்டுமென்ன? இங்கிலாந்து நாட்டில் கூடக் குறைகள் இருக்கலாம், அமெரிக்காவில் கூடக் குறைகள் இருக்கலாம். ஆனால் நாட்டில் நன்மைக்கு எதிராக நடந்து கொள்ளக்கூடாது என்பதைத்தான் நாம் அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தக் காரியத்தில் அரசாங்கம் உறுதியாக இருக்கும்.

பொதுவாக நாட்டு மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், அவர்களுடைய வாழ்க்கைத்

தரத்தை உயர்த்துவதற்காகவும் நாம் கவனம் செலுத்துகிறோம், அதற்காக எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு வேலை செய்கிறோம்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்று வருகிறது.

நமக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தாலும்கூட—அந்நிய நாட்டு செலாவணி கஷ்டம் எவ்வளவோ இருந்தாலும்கூட—நிச்சயமாக நாம் முன்னேறமுடியும் என்ற நம்பிக்கையுடன் நாம் திட்டங்களைத் தயாரிக்கிறோம். இதில் நாம் எல்லோரும் நம்பிக்கை வைத்துப் பாடுபட்டால் நாம் நிச்சயமாக முன்னேற முடியும். முன்னேற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அந்த எண்ணத்தின் பேரில்தான் நமது திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றுக்கு எல்லாம் மேலாக நமக்கு ஏதாவது ஆபத்து வரும் என்றால் அதை நாம் எப்படித் தவிர்ப்பது என்பதையும் கவனித்தாக வேண்டும்

**விவசாயிக்கு உற்சாகம்**

இன்றுள்ள நிலையில் நாம் நமது விவசாயத்தைப் பெருக்குவதற்குப் போடப்பட்டிருக்கின்ற திட்டங்களின் மூலமாகத்தான் நாம் நம்முடைய ஆபத்துக்களை எல்லாம் தவிர்க்க முடியும். ஆகவே விவசாய உற்பத்தியை நாம் அதிகமாகப் பெருக்க வேண்டும்.

நாம் கடந்த சில ஆண்டுகளுக்குள்ளாக நல்ல முறையில் விவசாய உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். இன்னும் அதிகமாகப் பெருக்குவதற்கு மக்கள் தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுக்கவும், அவர்களுக்குப் போதிய உற்சாகத்தை அளிப்பதற்கும் அரசாங்கம்—அரசாங்கம் மட்டுமல்ல—மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற எல்லோரும் பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டும்.



**சந்தேகம் வேண்டாம்**

தொழில் வளர்ச்சியிலும் நாம் முன்னேறவேண்டும், சுயதேவைப் பூர்த்தி உடையவர்களாக இருக்க வேண்டும். இதற்காக நாம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், இன்னும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம். இந்தத் திட்டங்கள் எல்லாம் சரியாக நடைபெறுமா என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவேண்டியதில்லை. நிச்சயமாக இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒழுங்கான முறையில் நிறைவேறும். அதற்கு எல்லோரும், எல்லா கட்சியினரும் தங்களுடைய பரிபூரண ஆதரவை அளிக்க வேண்டுகிறேன்.

ஆனால் கட்சிகளைப் பற்றிய குற்றங் குறைகளை, ஆதாரம் உள்ள குறைகளையோ, அல்லது ஆதாரமற்ற குறைகளையோ எடுத்துக் காட்டுவது எதிர்க்கட்சியினுடைய கடமையும், பொறுப்புமாகும். அரசாங்கத்தைச் சார்ந்த யாரும் அதைப்பற்றித் தவறுதலாகக் கொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**எதிர்க்கட்சி அவசியம்**

சென்ற பொதுத் தேர்தலின் விளைவாக முதன்மையான எதிர்க்கட்சி என்று கூறக்கூடிய வகையில் போதிய எண்ணிக்கையோடு தி. மு. க. அமைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினரைச் சார்ந்த 50 பேர்கள் சட்ட சபையில் எதிர்க்கட்சியாக அமைந்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சுயேச்சைகள் உட்பட 67 பேர்கள் இருக்கும்பொழுது, 50 பேர்கள் கொண்ட உருப்படியான ஒரு எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன். உருப்படியான ஒரு எதிர்க்கட்சி உருவாகுவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு. எதிர்க்கட்சியினரை எப்பொழுதும் ஆளும் கட்சி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. ஜனநாயகத்தில் உருப்படியான ஒரு எதிர்க்கட்சி இயங்குவது அவசியம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.

## பேயை விரட்டுவோம்

ஆனால், எதிர்க்கட்சியினர், இந்த நாட்டைப் பிரிப்பது என்பதைத் தங்களுடைய முக்கியமான லட்சியமாக, கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சட்டசபைத் தேர்தலுக்குப் பிறகு, புதிய மந்திரி சபை அமைத்த பிறகு, "பிரிவினைப் பேயை விரட்டுவோம்" என்று முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் சொன்னார் என்று சிலர் குறைபட்டுக் கொண்டனர்.

பேயை என்றது, எந்த ஒரு நபரையோ அல்லது கட்சியையோ அல்ல; அது கொள்கையைப் பற்றியது. நாட்டைப் பிரிப்பேன் என்றால், சுதந்திரம் பெற்றவர்களுக்குத்தான் தெரியும் சுதந்திரத்தின் அருமை. அந்தச் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்து, மக்கள் நன்கு வாழும் வகையில் பணியாற்றவேண்டுமென்று அந்த வகையில் ஈடுபட்டிருப்பவர்கள், அதற்கு ஹானியாக, பாதகமாக நாட்டைப் பிரித்து விடுவோம் என்று சொன்னால், அந்தக் கொள்கையை விரட்டுவோம் என்று சொல்கிறோம். பிரிவினைப் பேயை விரட்டுவோம் என்றுதான் திரு. காமராஜ் சொன்னார்கள்.



பேயை ஓட்டுவோம், ஆனால், உடலைத் தீண்டாமல் பேயை அடித்து விரட்டத் தெரியும். இந்த நாட்டிலே பிரிவினைக் கருத்தைச் சொல்லிக்கொண்டு, அந்த அடிப்படையிலே பிரித்துத்தான் ஆகவேண்டும் என்று பேசுகிறார்களே அந்தக் கொள்கைதான் விரட்டப்பட வேண்டிய பேய்.

## பிரிவினைக்கு ஓட்டா ?

எதிர்க்கட்சியினரே ஒப்புக்கொள்ளுகிறார்கள். முப்பத்துநான்கு லட்சம் பேர்கள் தி. மு. கழகத்திற்கு வாக்களித்திருக்கிறார்கள்! ஆனால் அந்த முப்பத்து நான்கு லட்சம் ஓட்டர்களும் பிரிவினைக்கு ஓட்டு அளித்தார்கள் என்பதல்ல என்று. அவர்களுக்குப் புதுப்புது உறவுகள் ஏற்பட்டிருக்கின்றன; அந்த உறவின், பந்தத்தின், கூட்டின் விளைவாகப் பலர் வோட்டளித்திருக்கிறார்கள். வோட்டு செய்தவர்கள் அத்தனை பேரும் பிரிவினை வேண்டுமென்று வோட்டளிக்கவில்லை யென்று சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதில் எத்தனை பேர் பிரிவினைக்காக அளித்திருக்கிறார்கள் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

வெவ்வேறு காரணத்திற்காக மக்கள் இவர்களை ஆதரித்திருக்கிறார்கள். தி. மு. கழகத்திற்கு ஓட்டளித்தவர் யாவரும் பிரிவினைக்காக அளித்தார்கள் என்று சொல்ல முடியாது. வெகு சிலரே அம்மாதிரி தெரிந்து அளித்திருக்க முடியும் என்று நான் மதிப்பிடுகிறேன்.

## லட்சியம் தெரிந்து....

தி. மு. கழகம், பிரிவினையை இன்று பேச்சளவில் நிறுத்திக்கொண்டுள்ளது. அத்தீய கொள்கையை அடி

யோடு விட்டுவிடவேண்டும். அதுதான் நாட்டுக்கும் நல்லது, அவர்களுக்கும் நல்லது.

சுதந்திரா கட்சி சோஷலிசம் வேண்டாம் என்று சொல்கிறது. அவர்கள் இணைப்பைக் கொண்டு தி. மு. க.வினர் வோட்டுப் பெற்றார்கள் என்று சொன்னார்கள். சுதந்திரா கட்சியின் லட்சியம் என்னவென்று தெரிந்து கொண்டு வோட்டுப் போடட்டும். திராவிட முன்னேற்றக் கழகம் பிரித்துத்தான் ஆகவேண்டும், சுதந்திரத்திற்குக் கேடு வந்தாலும், அன்னிய ஆட்சி வந்தாலும் சரி, நாட்டைப் பிரிக்கவேண்டும் என்பதை உணர்ந்து ஓட்டுப் போடட்டும்.

### அடியோடு கைவிடுக

நமக்கு உரிய பங்கு மத்திய சர்க்காரிலிருந்து வர வேண்டுமென்பதில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது; காங்கிரஸ் கட்சிக்கு அக்கறை இருக்கிறது. ஆனால், இது எந்த நாட்டிலும் நடக்கக்கூடியது. பல மாநிலங்கள் சேர்ந்து ஒரு யூனியன் என்ற முறையில் செயல்படும்போது, நாட்டுக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும், நிதியைத் திரட்ட வேண்டும், பின்னால் அதை எப்படிப் பங்கு போடுவது என்று தீர்மானிக்கவேண்டும். அந்த வகையில் நம் அரசியல் சட்டம் அமைந்திருக்கிறது. அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் அமைந்திருக்கிறது.

நான் சொல்லுகிறேன், பிரிவினைக் கொள்கையை அடியோடு விட்டுவிடுங்கள். அது இந்த மாநிலத்திற்கும் நலமாக இருக்கும். தி. மு. க. வினருக்குக்கூட அதுதான் நல்லது. உங்களுக்கு ஓட்டு போட்டவர்களின் நலனுக்கும் அது உகந்தது. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டால், மக்களுக்கு அதிக வசதிகளைப் பெற முடியும்.



நாட்டுப் பிரிவினை எந்தக் காலத்திலும் ஏற்படப் போவதில்லை. அதை எண்ணிக்கொண்டிருப்பதால் மாநிலத்திற்கும் நாட்டுக்கும் பாதகம் தான் விளையும். நான் மீண்டும் சொல்லுகிறேன், பிரிவினையை அடியோடு விட்டுவிடுவது யாவருக்கும் நலம் என்று. பிரிவினைக் கொள்கையை அடியோடு விட்டு விட்டு, அரும்பாடுபட்டு நாம் அடைந்த சுதந்திரத்தைப் பாதுகாத்து, மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது எப்படி என்பதில் எல்லோரும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

### கவர்னர் உரை

ஆங்கிலத்தை நாம் விட்டுவிடவில்லை. உலக மொழி ஆங்கிலம். தமிழ்மீது நமக்கு அன்பு; ஆனால், ஆங்கிலத்தின் மீது வெறுப்பில்லை. ஆனால் சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தினர் கவர்னர் உரையை ஆங்கிலத்தில் படிக்கக்கூடாது, அதை தமிழில்தான் படிக்க வேண்டும் என்று சொல்லி ஒருமுறை வெளியேறியதாகத் தெரியவந்தது. கவர்னரது தாய் மொழியில் படிக்கவேண்டும் என்று சொல்லியிருந்தால் அதற்கு அர்த்தம் இருக்கும். அவருடைய தாய் மொழி என்ன என்பதைக் கவனிக்கவேண்டும். ஆகவே, அவர் சட்டசபையை விட்டுச் சென்றதில் அர்த்தமே இல்லை.

திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் ஏதோ ஒரு கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஐம்பது பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஐம்பது பேர்களும் கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஆனால் சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தினருக்கு அப்படிப்பட்ட நிமித்தம் இல்லை. அவர் ஒருவர்தான் இருக்கிறார். அவர் மற்றவரைக்

கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற அவசியமில்லை. அவரே முடிவு எடுத்துக்கொள்ளலாம். தான் ஒருவரே இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும். கவர்னர் அவர்கள் தன்னுடைய தாய்மொழியில் தன்னுடைய உரையைப் படிப்பதாக இருந்தால் அது நமக்குப் புரியாது. அதையும் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### ஒழுங்கான தேர்தல்

கடந்த பொதுத் தேர்தல் 1962-ல் நல்ல முறையில் சுமுகமாக நடந்தது. தேர்தல் நல்ல முறையில் நடைபெறுவதற்கு அரசாங்க ஊழியர்களும் பொது மக்களும் நல்ல முறையில் ஒத்துழைத்ததால்தான் நல்ல முறையில் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நல்ல முறையில் நடைபெற்றதற்குப் பொதுமக்களும்தான் காரணம். அவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளாமல் இருந்தால் தேர்தல் நல்ல முறையில் நடைபெற்றிருக்காது. குறிப்பாக இந்தத் தேர்தலில் அதிகப்படியான மக்கள் வந்து வோட்டளித்ததற்கும் அவர்களை நாம் பாராட்ட வேண்டியதுதான்.

சுதந்திரம் அடைந்த பிறகு ஓட்டுச் சுதந்திரம் இருக்கிறது என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதிகப்படியானவர்கள் வந்து வோட்டளித்ததற்கு அவர்களை நாம் பாராட்ட வேண்டியதுதான். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ரகசிய வோட்டு முறை வந்ததிலிருந்து அதிகாரிகள் தேர்தலை ரகசிய முறையில் நல்லபடியாக நடத்திக் கொடுத்ததற்கும் அவர்களைப் பாராட்ட வேண்டியதுதான். தேர்தல் சமயத்தில் போலீஸ்காரர்களும் நல்ல முறையில் ஒழுங்காக நடந்து கொண்டதற்கு, அவர்களையும் நாம் பாராட்ட வேண்டியதுதான்.



### போலீஸ் மீது புகார்

போலீஸ்காரர்கள் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டதால்தான் தேர்தல் நல்ல முறையில் நடைபெறமுடிந்தது. போலீசார் சரியாக நடந்து கொள்ளவில்லை என்றும் சிலர் சொன்னார்கள். ஆனால் போலீசார் தங்களுடைய கடமைகளைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்று சொல்லுவது சரியல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எந்தக் கட்சியிலிருந்தும் போலீஸ்காரர்கள் மீது புகார்கள் வந்தன. அவற்றையெல்லாம் பரிசீலித்து உடனேயே தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பல காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் புகார் எழுதி அனுப்பி இருந்தார்கள். காங்கிரஸ்காரர்களிடமிருந்து வந்த புகார்கள் அதிகம். எதிர்க்கட்சிகளுக்குத்தான் அதிகப்படியான சலுகைகள் காட்டப்படுகிறது என்று புகார் எழுதி அனுப்பியிருந்தார்கள். இப்படி எல்லா கட்சியினரிடமிருந்தும் புகார்கள் வந்து கொண்டுதானிருந்தன. அவைகள் எல்லாம் விசாரிக்கப்பட்டன. ஒவ்வொன்றின் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.

### ஆதாரமற்ற குற்றச்சாட்டு

செங்கல்பட்டு ஜில்லாவிலிருந்து ஒரு புகார் வந்தது. அதாவது போஸ்டல் பாலட் சம்பந்தமாகப் அதாவது போலீஸ்காரர்களைக் கட்டாயப் படுத்தி போஸ்டல் பாலட்டில் இன்னாருக்குத்தான் வோட்டு செய்யவேண்டும் என்று கட்டாயப்படுத்தியதாக புகார் வந்தது. அதைப்பற்றி விசாரித்தபோது அந்தப் புகார் வந்த சமயத்தில் போஸ்டல் பாலட்டே அது

வரையில் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. தபாலே அனுப்பிவைக்கப்படாமல் இருக்கும் போது எப்படி வோட்டு செய்யச்சொல்லி இருக்க முடியும்? எப்படி அந்த வோட்டுக்களைச் சேகரித் திருக்க முடியும்.

**கிணற்றில் விழுந்தவர்**

அதைப்போலவே உத்தரமேரூரிலிருந்து ஒரு புகார் வந்தது. அங்கே ஒருவர் தேர்தல் பிரசாரத்திற்காக ஈடுபடுத்திய நபரைச் சில நாட்களுக்கு முன் அவரைக் கிணற்றில் தள்ளி அவருடைய சடலம் கிணற்றில் இருந்ததாகவும் சொன்னார்கள். இதைப்பற்றியும் விசாரிக்கப்பட்டது.

அதை விசாரித்தபோது அந்த மனிதனுடைய துணி பர்ஸ் எல்லாம் கிணற்றிற்கு வெளியே இருந்த தாகச் சொல்லப்பட்டது. உடனேபோலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு உடனே போலீசார் அதை எடுத்துப் பிரேத விசாரணைக்குச் செங்கற்பட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். உடனே அங்கு சுமார் 500 பேர் கொண்ட கூட்டம் கூடி விட்டது. அதைச் செங்கற்பட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று தடுத்தார்கள். உடனே கலவரம் ஏற்பட்டது. அங்கு அந்தப் பிரேதவிசாரணை செய்தபோது உடம்பில் எந்த விதமான காயமும் கிடையாது. ஆனால் ஒன்று இரண்டு சிறு புண்கள் இருந்தன. அவைகள் எல்லாம் கிணற்றில் பிரேதம் மிதந்ததால் ஒருகால் மீன் கடித்து அந்தப் புண்கள் ஏற்பட்டிருக்கலாமோ என்று முடிவு செய்யப்பட்டது. மற்றும் அந்தப் பிரேதத்தை அங்கேயேதான் எரிக்கவேண்டும் என்று அந்தக் கூட்டம் கலவரம் செய்தது. செங்கற்பட்டு பெரிய ஆஸ்பத்திரிக்கு அந்தப் பிரேதம் எடுத்துச் செல்லப்



பட்டது. அங்குப் போய் பரிசோதனை செய்ததில் தேகத்தில் காயம் ஒன்றும் இல்லை. கிணற்றில் மீன்கள் கடித்திருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அது ஒரு ஆக்ஸிடெண்டல் சாவாக இருக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

ஆகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்வது சரியல்ல. எந்தப் பக்கத்திலிருந்து புகார் வந்தாலும் அவைகளை அதன் தரத்திற்கேற்ற வாறு விசாரணை செய்து முடிவு எடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

## 23. கண்ணில் கோளாறு

எதற்காக இந்த ஐந்தாண்டுத் திட்டம் என்ற ஒரு பிரச்சினையையும் சிலர் கிளப்புகிறார்கள். நாம் பெற்ற சுதந்திரம் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குப் பயன்பட வேண்டும். நீண்ட காலமாகக் குறைகள் குவிந்து கிடக்கின்றன. குறைகளை அகற்றவும், வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் திட்டம் போட்டுத்தான் செய்யவேண்டும். திட்டம் இல்லாமல் ஏதோ தோன்றியவாறு செய்துகொண்டு போனால் பயன் இல்லை. ஆகவே, திட்டம் போடுவது மிகவும் அவசியம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிவிட்டது. இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்று வருகிறது.

### ஓய்வு கூடாது

ஆனால், ஏன் கொஞ்ச நாட்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளக்கூடாது, கொஞ்ச நாட்கள் பொறுத்துப் பார்த்துக் கொண்டு அப்புறம் செய்யலாமே என்றெல்லாம் சொல்லலாம். சில பேர்கள் அம்மாதிரி சாவதானமாக இருக்கலாம். ஆனால், நாங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

மக்களுக்கு இன்னும் அநேக வசதிகள் செய்து தரவேண்டும். அவர்களுக்கு இருக்கும் குறைகளை



நிவர்த்திக்கவேண்டும். அவர்கள் நம்மிடம் எவ்வளவோ எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கும் நாம் அவர்கள் எதிர்பார்க்கக் கூடிய அளவுக்குத் திட்டங்கள் தீட்ட வேண்டியிருக்கிறது. பெரிய திட்டங்களை உருவாக்கி நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

### எதிர்காலச் சந்ததி

திட்டங்களை நிறைவேற்றக் கடன் தேவையாக இருந்தாலும் கடன் வாங்குகிறோம். ஓரளவுக்குக் கடன் வாங்கவேண்டியதுதான். இதனால் ஓரளவு 'டெபிசிட் பினான்சிங்' நோட் அடிக்கவேண்டிய நிமித்தம் ஏற்படுகிறது. ஆனால் பரவாயில்லை. திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றுவதிலே வரி போட வேண்டியிருக்கிறது. நோட் அடிக்க வேண்டியிருக்கிறது. விலை அதிகமாகப் போகிறது. இவைகளையெல்லாம் நாம் எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ, அவ்வளவு தூரம் தவிர்க்கத்தான் வேண்டும். அரசாங்கம் அதில் தீவிர கவனம் எடுத்துக்கொண்டுதான் வருகிறது. வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

ஓரளவுக்கு இதில் அசௌகரியம் ஏற்படத்தான் செய்கிறது. எதிர்காலத்து மக்களின் நிமித்தம் நாம் செய்யவேண்டிய ஒரு தியாகம் என்று நாம் இதைக் கொள்ளவேண்டும். எப்படி முன்பு நாம் சுதந்திரம் பெறுவதற்குப் பாடுபட்டவர்கள், தாங்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தங்கள் குடும்பம் சின்னாபின்னமாக ஆகிவிட்டாலும் பரவாயில்லை, பிற்காலச் சந்ததிகள் சுதந்திர புருஷர்களாக வாழட்டும், விளங்கட்டும் என்று தியாகம் செய்தார்களோ, அதே மாதிரி திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பை இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

நம் எல்லோருக்கும், சில அசௌகரியம் ஏற்பட்டாலும், எதிர்க்காலத்து மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டும், குறைவின்றி வாழ்க்கை நடத்தவேண்டும் என்று நினைத்து ஓரளவுக்கு நாம் தியாகம் செய்வோம், உறுதியுடன் நடந்து கொள்வோம் என்று அந்த வகையிலேதான் திட்டங்களை உருவாக்கிக் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம்.

### புறக்கணிப்பு இல்லை

மூன்றுவது திட்டத்திலே இந்த மாநிலத்திற்காக, ரூ. 290 கோடி மட்டும் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் குறைவு என்கிறார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அகில இந்தியா முழுவதற்கும், மத்திய சர்க்காரின் பொறுப்பிலேயே உள்ள திட்டங்களுக்காகவும், ராஜ்யங்கள் எல்லாவற்றுக்குமாகவும் மொத்தமாகச் சேர்த்து 3,847 கோடியாகிறது. அதிலே நமக்கு 290 கோடி, அது, 320 கோடியாகலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. சாதாரணமான ஜனத்தொகை விகிதாசாரத்தில் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் நம் ராஜ்யத்திற்கு 7, 8 சதவிகிதம் கிடைக்க வேண்டும். இப்போது நமக்குக் கிடைப்பது மொத்தத்தில் 8 சதவிகிதம் ஆகிறது. இதைத் தவிர சென்ட்ரல் ப்ராஜெக்ட் வேறு.

மத்திய சர்க்காரின் பொறுப்பிலேயே நம் ராஜ்யத்தில் பல திட்டங்கள் இருக்கின்றன. நெய்வேலி, ராபினிம் இண்டஸ்ட்ரி, தூத்துக்குடி துறைமுகம், சென்னைத் துறைமுக அபிவிருத்தி, மெட்ராஸ்-விழுப்புரம் ரயில்வே லைன், சேலம்-பங்களூர் லைன், விருதுநகர்-மானாமதுரை லைன், ஹெவி எலக்ட்ரிகல்ஸ், ஆவடி டாங்க் பாக்டரி இவையெல்லாம் சேர்த்துக்கணக்கிடும் போது மேலும் பலகோடி ருபாய் ஆகிறது.



ஆகவே, இந்த மாநிலம் ஐந்தாண்டுத் திட்டங்களிலே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுவதற்குக் கொஞ்சம்கூட ஆதாரம் இல்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### ஜீரணிக்க முடியாதா?

சுதந்திரக் கட்சியினர் இந்தத் திட்ட அளவே அதிகம் என்று கூறுகிறார்கள். தாங்க முடியாததைச் சுமக்கிறோம், ஜீரணிக்க முடியாததைச் சாப்பிட முற்படுகிறோம் என்று சொல்லுகிறார்கள். நான் ஒன்றை அவர்களுக்குத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தேர்தலில் அவர்களுக்கும் தி. மு. க.வுக்கும் ஒரு கூட்டு இருந்ததைப் போல் இந்தத் திட்டங்களைப் பற்றியும் அவர்கள் இருவரும் கூடிப்பேசி இருசாராருக்கும் பிடிக்கும் ஒரு திட்டத்தைக் கண்டுபிடித்தால் நல்லது.

ஒருவர் எல்லாவற்றையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று கூறுகிறார், இன்னொருவர் தேசிய மயமே கூடாது என்கிறார். தேர்தலில் இருந்த ஒரு ஒப்பந்தம், ஒரு பரஸ்பர ஒற்றுமை இந்த மாதிரித் திட்டங்கள் பற்றியும் ஏற்பட்டால் நல்லது.

### வருவாய்க்கு வழி!

அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் எது இந்த மாநிலத்திற்கு உகந்ததோ அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. பொதுவாகத் திட்டம் போதாது என்று தான் பெரும்பாலும் சொல்வார்கள். சுதந்திரக் கட்சி தவிர எல்லாரும் அந்தக் கருத்தைத்தான் சொல்வார்கள்.

கிராமத்தில் இருப்பவர்கள் கூட விலையைக் குறைத்தால் நல்லது என்றுதான் சொல்லுவார்கள்-

தி.மு.க. சொன்னபடி 3 படி என்ன, 5 படி அரிசி போட்டால்கூட நல்லதுதான். அவ்வாறு போட்டால் வேண்டாமென்று சொல்வார்கள்? இவற்றையெல்லாம் எப்படிச்செய்வது? திட்டத்திற்கு வருவாயை எப்படிப் பெறுவது, திட்டத்தை நிறைவேற்றப் பணம் போதாவிட்டால் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு என்ன வழி? திட்டத்தைக் குறைத்துக் கொள்வதுதான் வழி என்று சுதந்திரக் கட்சியினர் சொல்லலாம், அதை மற்றவர்கள் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இப்போது எந்த வகையில் வருவாயை அதிகப்படுத்துவது என்பதற்கு யோசனை சொல்லலாம்.

**காலத்தில் செய்வோம்**

சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் தேர்தலில் கெஜட் பதிவு இல்லாதவர்களுடைய பஞ்சப்படியை உயர்த்துவதுபற்றிப் பேசினார்கள். அதைப் பற்றித் திருத்தம்கூட கொடுத்திருக்கிறார்கள். பஞ்சப்படியை மத்திய அரசாங்கம் உயர்த்தி இருக்கிறது என்றால் இவர்களும் எதிர்பார்க்கிறார்கள். இங்குள்ள உறுப்பினர்களும் சிபாரிசு செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதுதான். எப்படிக் கொடுப்பது, அதற்கான வருவாயை எப்படிப் பெறுவது? இருநூற்றி தொண்ணூற்று ஒரு கோடி ருபாய்க்குத் திட்டம்வேண்டாம், இரண்டு மூன்றுகோடி ருபாயைக் குறைத்துவிடுங்கள் என்று சொல்வார்களா?

யாராவது ஒரு தொகுதியின் பிரதிநிதி வந்து எங்கள் பகுதியிலே உள்ள ஒரு திட்டத்தை விட்டுவிட்டு அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பஞ்சப்படி கொடுங்கள் என்று சொல்ல முன் வருகிறார்களா? திட்டத்தை நிறுத்திவிடுங்கள், ஜனங்களைப் பற்றி அவசியமில்லை, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு கொடுங்கள் என்று சொல்லட்டும். திட்டத்தின் வருவாய்க்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்துவதற்கான வருவாயையும் பெறுவதற்கான வழி என்ன? இதற்கெல்லாம் யோசனை சொல்லுங்கள் என்று கேட்டபோது ஒருவரும் சொல்லவில்லை.



இப்போது சர்க்கார் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. திருப்தியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதோடு கிராம உத்தியோகஸ்தர்களது ஊதியமும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. சர்க்கார் எதையும் தகுந்தபடி காலத்தில் செய்யத் தவறமாட்டார்கள் என்பது உறுதி.

**சர்வாதிகார திட்டமா ?**

சிலர் வரியே போடக் கூடாது என்று சொன்னார்கள். ஒருவர் மீதும் வரி போடக் கூடாது என்பதை யாரும் ஒத்துக்கொள்ள முடியாது. யார் தாங்கக் கூடுமோ, அவர்கள் மீது வரிபோடுகிறோம். வரியே போடக்கூடாது என்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல.

மத்திய அரசாங்கம் நம்முடைய மாகாணத்தைப் புறக்கணிக்கிறது என்று பிரசாரத்திற்காகச் சொல்லலாமே தவிர, உண்மை அதுவல்ல. பல மாநிலங்கள் சேர்ந்து ஒரு ஆட்சி அமைப்பாக இருக்கிறது. அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும் ஒரு பெரிய போராட்டம் நடத்தி சுதந்திரம் அடைந்தார்கள். அது பல 'ஸ்டேட்ஸ்' சேர்ந்த ஒரு நாடாக இருக்கிறது. எந்தெந்த வகையிலும் மத்திய அரசாங்கத்திடம் இருந்து உரியதைப் பெற, சலுகைகளைப் பெற இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

இதைப் பற்றிக் குறைகூறும் வகையிலே ஒன்றும் இல்லையென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சுதந்திரக் கட்சியினர், பிளானிங் கமிஷன் முறையே தவறு என்கிறார்கள். பிளானிங் கமிஷன் அரசாங்கத்திற்கு உட்பட்டது. அம்மாதிரி ஒரு திட்டக் குழு வேண்டும். திட்டத்தில் நம்பிக்கை இல்லாவிட்டால் அது வேறு விஷயம். திட்டம் போட்டு அபிவிருத்தியை நாடவேண்டியிருக்கிறது. திட்டக் குழு அரசாங்கத்திற்கு, பார்லிமெண்டுக்கு உட்பட்டது. அதுமட்டுமல்ல. திட்டக்குழு மாநிலங்களின் திட்டங்களைத் தயாரிக்கும்போது எவ்வளவோ முறை இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களையும், அதிகாரிகளையும் கேட்கிறார்கள். கலந்து பேசுகிறார்கள். பிளானிங் கமிஷன் சர்வாதிகாரமாக திட்டம் வகுக்கவில்லை.

**படிப்படியாக......**

சுதந்திரக் கட்சிக்கு சோஷலிசம் கூடாது என்பது அவர்களுடைய கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறதா? இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பழைய கொள்கை ஒன்றை இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், எல்லாவற்றையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று; அப்போதுதான் நாடு முன்னேற முடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சினிமா, பாங்க், ஹோட்டல், பஸ் இவைகள் எல்லாம் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை.

சர்க்கார் இன்றைக்குத் தேசிய மயமாக்குவதை ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒரேயடியாக



முடியாது. படிப்படியாக முடியும். குறிப்பாகச் சிலர் எல்லாவற்றையும் தேசிய மயமாக்குவது நல்லது என்று சொல்லுகிறார்கள். ஆனால் சர்க்கார் கருதுவது, எல்லாவற்றையும் ஏன் இப்போது நம் தலையில் போட்டுச் சுமையைத் தாங்கிக் கொள்ளவேண்டும். நாட்டில் எப்படியும் தொழில் பெருகவேண்டும், வேலை வாய்ப்புக்கள் பெருகவேண்டும்.

**எல்லாம் தேசிய மயம்**

தனியார் துறை இருப்பதினால் சர்க்காருக்கு என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது, போதுமான அளவுக்கு அவர்களுக்கு வரியைப் போடுகிறோம். சர்க்காருக்கு வருமானம் கிடைக்கிறது. அவர்கள் முதலையும் பயன்படுத்திக் கொள்கிறோம். சர்க்கார் தவிர தனியார் துறைக்காகப் போட்டிருக்கிற பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதற்கெல்லாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. மற்றவர்கள் கவனிக்கிற வேலையையும் நாம் ஏன் எடுத்துக் கொள்ளவேண்டும்?

அதோடு ஒரேயடியாக எல்லாவற்றையும் தேசிய மயமாக்கப்படும் என்ற மலைப்பு சிலருக்கு ஏற்பட்டு விடுகிறது. சமீபத்தில் கூட, வெற்றிகரமாகவும் திருப்திகரமாகவும் பஸ் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருக்கும் ஒருவர் என்னோடு பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவர் சொன்னார், இப்போது பஸ் போக்குவரத்தை எல்லாம் நன்றாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கிற தரத்தைக் குறைக்காமல் தொடர்ந்து நடத்துவது லாபகரமாக இருக்காது. எனவே, வேறு தொழிலில் இறங்க உத்தேசிப்பதாகவும் அவர் கூறினார். ஆகவே தேசிய மயமாக்குவதில் ஆட்சேபணை யில்லை என்றாலும்

முற்றிலும் தேசிய மயமாக்க அவசியமில்லை என்பது தான் சர்க்காருடைய கொள்கை.

**எங்கள் பக்க பலம்**

எவ்வளவோ துறைகளைத் தேசிய மயமாக்கி யிருக்கிறோம். மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் அநேகமாக எல்லாம் தேசிய மயமாக்கி விட்டோம். ஜெனரேட் செய்வது எல்லாம் சர்க்கார் துறையில் தான், டிஸ்ட்ரிபூஷன் செய்வதில் மட்டும் சில இடங் களில் தனியார் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நாங்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபனம் மகத்தான ஸ்தாபனம். அரும்பாடுபட்டு மக்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த ஸ்தாபனம் அது. நாங்கள் அனுஷ்டிக்கும் உயர்ந்த கொள்கை, மக்கள் எல்லோ ருடைய நல்வாழ்க்கைக்கும் உகந்தகொள்கை. நாங்கள் சரிவரப் பணியாற்றுவதற்கு அதுதான் எங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறதே யொழிய திறமை ஒன்றும் பிரமாதமாக இல்லை என்று சொல்வேன். எங்களுக் குத் தேசியமயக் கொள்கையில் நம்பிக்கை உண்டு. அது படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

**மின்சாரத்தின் அருமை**

எல்லோரும் மின்சாரத்தின் அருமையை நன்றாக உணர்ந்தவர்கள். மின்சார வசதி பெருகவேண்டும், மின்சாரக் கட்டணம் குறையவேண்டும் என்றெல்லாம் கூறுகிறார்கள். இன்று, நகர மக்கள் மட்டுமின்றி கிராம மக்களும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள மின்சாரம் இன்றியமையாத சாதனம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அவ்வாறு உணர்ந்துதான் அவர்கள் இன்றும் மின்சாரம் கேட்



கிறார்கள். அதனால்தான் அரசாங்கம் மின்சார விநி யோகத்தை வியாபார ரீதியில் நடத்தாமல் கிராமங் களுக்கு அதிகமாக விஸ்தரித்து வருகிறது. அரசாங்கம் மின்சார விநியோகத்தை வியாபார ரீதியில் நடத்துவது சரியல்ல என்ற கருத்தோடு கவனம் செலுத்தி வருகிறது. அரசாங்கம் மின்சார விநியோகத்தைக் கிராமங்களுக்கு வேகமாக விஸ்தரித்து வருகிறது.

இன்று, கிராம மின்சாரத் திட்டத்தில் தமிழ்நாடு நம் தேசத்திலேயே முன்னணியில் நிற்கிறது. அந்த அளவிற்கு இங்கே கிராமங்களுக்கு மின்சார விநி யோகம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிக் குறை கூறுவதென்றால் குறை கூறுபவர்களுக்கு வேறு ஏதாவது குறைகள் இருக்கலாம். அம்மாதிரி குறைகளை மனத்தில் வைத்துக் கொண்டிருப்பவர்கள் 'ஒன்றுமே இல்லை' என்று சொல்வதை, நான் பழங்காலத்தில் வீடு களில் பார்த்ததுண்டு.

**வெறும் வெளிச்சம்**

கிராமங்களுக்கு ஏராளமான மின்சார வசதி அளித் திருப்பதானது 'வெறும் வெளிச்சம்தான்' என்றும், கிராமங்களில் நல்ல ரோடுகளை அமைக்காதபோது, அங்கே வெளிச்சம் எதற்கு என்றும் தி. மு. க. தலைவர் ஒருமுறை கூறினார். யார் மின்சாரம் கிராமங்களுக்கு வேண்டாம் என்று சொல்லுவார்கள்? கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டியதுதான். ரோடுகளும் வேண்டியது தான். ஒன்று முதலில் வேண்டும், மற்றொன்று பிற்பாடு வேண்டும் என்று சொல்வதற்கில்லை.

இப்போது கிராமங்களில் ரோடுகள் போடப்படா மல் இல்லை. இந்த ராஜ்யத்தில் எவ்வளவோ நல்ல

ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. மற்ற ராஜ்யங்களிலிருந்து இங்கு வருபவர்கள் இங்குள்ள ரோடுகளைப் பார்த்துப் பொருமைப்படுகிருர்கள். தமிழ் நாட்டில் அதிகமான ரோடுகள் இருக்கின்றன. இங்கே கிராமப் பாதைகள் செப்பனிடப்படுகின்றன. இன்னும் எத்தனையோ ரோடுகள் போட வேண்டியிருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் ரோடுகள் போடும் வேலை துரிதமாக நடத்தப்படுகிறது. ரோடு போடும்போது, முதலில் மண் பாதை போட்டுவிட்டு, அதற்குப் பிறகு அங்கு மெட்டல் போடவேண்டும். ரோடுகள் போடும்போது ரோடுகளுக்குத் தார், சிமெண்டு முதலியவை போடவேண்டியிருந்தாலும் ரோடுகள் போடும் வேலைகளைத் துரிதமாகச் செய்து வருகிறோம்.

**கண்ணில் கோளாறு**

ரோடுகள் போடாத கிராமங்களில் மின்சாரம் எதற்கு, வெளிச்சம் எதற்கு; என்று கிராமமக்கள் கூறுகிருர்கள் என்று குறிப்பிடுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கண்ணில் கோளாறு உள்ளவர்கள்தான் வெளிச்சத்தை வெறுப்பார்கள். எனக்கு வெளிச்சம் ரொம்பப் பிரியம். கிராமத்தில் இரவு பூராவும் விளக்கு வெளிச்சம் இருந்தால் அதுவே ஒரு சோபையாக இருக்கும். எனவே வெறும் வெளிச்சம் கூடத்தான் வேண்டும். கண்ணில் கோளாறு உள்ளவர்கள்தான் ‘விளக்கு வேண்டாம், விளக்கை நிறுத்திவிடுங்கள்’ என்று சொல்வார்கள். மின்சாரம் எல்லாவிதமான வெளிச்சத்தையும் தருகிறது. முக்கியமாக விவசாயிகளுக்கு அது பெரிதும் பயன்படுகிறது.



விவசாயிகளின் சார்பில் வெளிச்சத்தைப் பெருக்க வேண்டும்—மின்சார விநியோகத்தைப் பெருக்க வேண்டும்—மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும், என்றெல்லாம் பலர் கூறுகிருர்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு, ஏதோ ஒன்றைச் சொன்ஞர். ஒருவேளை தமிழ்நாடு மின்சார விநியோகத்தில் இந்நாட்டிலேயே முன்னணியில் இருப்பது அவருடைய வாதத்திற்கு அனுகூலமாக இல்லாததால் அவ்வாறு பேசினுர் போலும்.

இந்தியாவில் மொத்தம் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறதோ, அதில் பாதிக்கு மேல் தமிழ்நாட்டில் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கும் கிராமங்கள் உள்ளன. இது அவருடைய ‘வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது’ என்ற வாதத்திற்கு முரண்பாடாக இருந்ததால், அவர் அவ்வாறு பேசினுர் போலும். அவர் உண்மையில் மின்சார விஸ்தரிப்பை எதிர்க்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

**வரி வஜா எப்போது?**

சுதந்திராக் கட்சியினர் சார்பில் நிலவரியே கூடாது என்று சொல்லப்படுகிறது. நிலமுள்ளவர்கள் குறைவு, இல்லாதவர்கள் அதிகம். அது நாம் அமைத்திருக்கும் சோஷியலிசக் கொள்கைக்கு உகந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலவரி இனங்களில் மட்டும் சர்க்காருக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் 10 கோடி ருபாய் மட்டுமே வருவாய் கிடைக்கிறது.

பருவ மழை தவறிவிட்டால், அந்த இடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்திலிருந்து

கடன் எல்லாம், முழுவதும் தள்ளுபடி செய்துகொடுக்க முடியாது. எல்லா இடத்திற்கும் வஜா அளித்துவிட முடியாது. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் வரி வஜா செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கப்படுகிறது. ஆனல் கடன் வாங்கியிருந்தால் ஒரு தவணையாவது சர்க்காருக்குத் திருப்பிக் கொடுத்திருக்கவேண்டும். எந்தெந்த இடங்களில் எல்லாம் இது கவனிக்கப்பட வேண்டுமோ, அங்கு கவனிக்கப்பட்டு கடன் வசூல் தள்ளி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

வரி வஜா செய்து கொடுக்கின்ற கோரிக்கையில், எந்த அளவுக்குக் கொடுக்கவேண்டும் என்று தோன்றுகிறதோ அதன்படி கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆசிரியர் உற்சாகம்

பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்துயூனியன்களுக்கும் அதிகமான அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையை பலர் தெரிவித்தார்கள். ஆனல் இதில் முக்கியமாகக் குறிப்பிட்டது, ஆசிரியர்களை மாற்றுவதற்குப் பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் வேண்டும் என்பதே. ஓரளவுக்கு இந்த அதிகாரம் இல்லாமல் இருப்பது பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு நல்லது என்றே நினைக்கிறேன். கிராமத்திலுள்ள மக்கள் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் பல வசதிகளை எதிர்பார்க்கின்றனர்கள். ஆசிரியர்களை மாற்றுவதற்குள்ள அதிகாரத்தைப் பற்றி பொதுமக்களுக்கு அவ்வளவு அக்கறை இல்லை.



மதிய உணவுத் திட்டத்தால் ஆசிரியர்கள் எல்லாம் இப்போது சமையல்காரர்களாக ஆகியிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டது. ஆசிரியர்களின் வேலை என்ன? பள்ளிக்கூடத்தில் பட்டினியால் வாடும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து என்ன பயன்? இதற்காக அக்கறை எடுத்துக் கொள்வதை இழிவாகக் கருதுவது சரியல்ல. முக்கியமாக இந்த மதிய உணவுத்திட்டத்தை பஞ்சாயத்துக்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய நிதி உதவி திரட்டவேண்டும். இந்தத் திட்டத்தைச் சீராக நடத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய ஆவல். இந்தத் திட்டத்தைப்பற்றி சிலர் கேவலமான முறையில் குறிப்பிட்டிருந்த போதிலும், சரியான முறையில், இந்தத் திட்டம் நடந்தேறுவதற்கு, அனைவரும் ஒத்துழைப்பும் ஆதரவும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் இதில் உற்சாகம் காட்டுவதை நான் பாராட்டுகிறேன்.

# 24. வளரும் தமிழகம்

கடந்த 16 ஆண்டுகளில், அதிலும் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் விவசாய முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, கல்வியைப் பரப்புதல், கூட்டுறவுத் துறை, மின்சார வினியோகம் ஆகிய பல துறைகளில் பெருமைப்படத்தக்க முன்னேற்றமும், நல்ல அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக விவசாயம், தொழில் வளர்ச்சி, கூட்டுறவு இயக்கம், கல்வியைப் பரப்புதல், மின்சார வினியோகம் ஆகிய துறைகளில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நம்முடைய ஒப்புயர்வற்ற தலைவர், மறைந்த பிரதமர் நேரு அவர்கள் பலமுறை பாராட்டிப் பேசி இருப்பது கவனிக்கத்தக்கது.

### விவசாய முன்னேற்றம்

விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் தமிழ் நாடு தன்னுடைய சுய்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நிலையில் உள்ளது. இங்கிருந்து நாம் கேரளாவுக்கு அரிசி அனுப்புகிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீவிரசாகுபடித் திட்டம் நல்லபலனைக்கொடுத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் உற்பத்தியை இப்போது ஒரு ஏக்கரில் விளையும் நெல்லைப்போல இரட்டிப்பாக்க முடியாதா என்பதையும் முயற்சித்து வருகிறோம்.



விவசாயிகளுக்கு மானியம், உரவினியோகம், விவசாயக் கருவிகள் வாங்கக் கடன் போன்ற தேவைகளைக் காலாகாலத்தில் கொடுப்பதாலும், தமிழக விவசாயிகள் மிகவும் ஊக்கமும், சுறுசுறுப்பும் உள்ளவர்கள் என்பதனுலும் தமிழ்நாட்டில் விவசாயத் துறையில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

### தலையாய குறிக்கோள்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது வேளாண்மையே. இதனுல் உணவு உற்பத்தியில் "தன்னிறைவு" பெறுவதைத் தலையாய குறிக்கோளாக நமது திட்டங்கள் வலியுறுத்தின. அதனைத் தெளிவாக உணர்ந்து கொண்ட உழவர் பெருமக்கள், திட்டங்களை நிறைவேற்றுவதில் ஆர்வத்தோடு பாடுபட்டார்கள். பாடுபட்டதற்கு ஏற்ற பலனும் இன்று கிடைத்துள்ளது.

உணவு உற்பத்தித்துறையில் மட்டும் நாம் சுமார் 44.7 சதவிகித (ஏறத்தாழ 45 சத விகித) உயர்வைக் கண்டிருக்கிறோம்.

### சீரிய திட்டங்கள்

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னுல் பெரும் பாசனத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு, சிறுபாசன ஆதாரங்களும் போதிய கவனம் செலுத்தப்படாத நிலையில் அழிந்து வந்தன. பருவகாலத்தில் பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்கவும், ஆற்றின் ஓட்டத்தினைத்தடுத்து நீர் வீணுவதைக் குறைக்கவும் போதிய அணைகள் இல்லாமல் இருந்தது ஒருபெரும் குறை.

உழுது பயிரிடும் முறைகளில் புதுமை காணப்படாததும் உற்பத்திக் குறைவுக்குக் காரணம்

ஆகும். பரம்பரை பரம்பரையாகக் கையாளப்படும் கருவிகள், முறைகள் ஆகியவையே பின்பற்றப் பட்டன. உழவு முறையில் நவீன சிந்தனைப் போக்கு மலரவில்லை.

இங்கிலையில் தீட்டப்பட்ட முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் உணவு உற்பத்திக்கு நல்ல அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. அதனை அடுத்து நிறை வேற்றப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் வேளாண்மைக்குச் சிறப்பளித்தது. அதன்கீழ் உற்பத் திக்கான திட்டங்களை வகுத்த போது பல தன்மைகள் ஆலோசிக்கப்பட்டன. மக்கள் பெருக்கத்திற்கு ஈடு செய்யும் அளவில் உற்பத்திப் பெருக்கம் இருக்க வேண்டும்; தன்னிறைவு பெறுவதுடன் அதிக உற்பத் தியும் செய்ய வேண்டும். நெருக்கடி நேரங்களில் பயன் படுத்திக் கொள்ளச் சேகரித்தும் வைக்க வேண்டும் என்கிற இத்தகைய தெளிவான சிந்தனைப் போக்குகள் வேளாண்மைத் துறையில் பல சீரிய திட்டங்களை உருவாக்க வழி காட்டின.

### பாசன வசதிப் பெருக்கம்

பயிருக்குப் பாசன வசதி அளிப்பது தமிழருக்குப் புதிய கலை அல்ல. பண்டு தொட்டே பாசன வசதி களில் தமிழ்நாடு சிறந்து விளங்கி வந்துள்ளது. பெருக்கெடுத்த காவிரிக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே கரிகால் சோழன் கல்லணை கட்டிப் பெரும் புகழ் எய்தினன்.

நமது மாநிலத்தில், முதன் முதல் கட்டப்பட்ட அணை, பெரியாறு அணை ஆகும். அடுத்ததாக காவிரி யின் குறுக்கே 1930-ல் மேட்டூர் அணை கட்டப்பட்டது.



உணவுப் பற்றுக்குறையைப் போக்கி தன்னிறைவு காணும் பொருட்டு, சுதந்திரத்திற்குப் பிறகு, பெரிய ஆறுகளின் குறுக்கே நீண்ட, வலிவு மிக்க அணைகள் கட்டப்பட்டு நீர் வசதிக்குரிய ஆதாரங்கள் அனைத்தும் உரிய முறையில் சீராகப் பயன்படுத்திக் கொள்ளப் பட்டன. முக்கியமாக கீழ்பவானி அணை, அமராவதி நீர்த்தேக்கம், சாத்தனூர் நீர்த்தேக்கம், கிருஷ்ணகிரிநீர்த் தேக்கம், பரம்பிக்குளம்—ஆளியாறு நீர்த்தேக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் நீங்கலாக இவற்றின் மொத்தச்செலவு 26 கோடியே 79 லட்ச ரூபாய் ஆகும். இவை அனைத்தும் முடிவுற்ற பின்னர் சுமார் 6·41 லட்சம் ஏக்கர் கூடுதலாகப் பாசன வசதி பெறும். நமது மாநிலத்தில் பேராறுகள் அனைத்திலும் அணைகட்டி முடிக்கப்பட்டு விட்டன. இவற்றின் மூலம் பாசன ஆதாரத்தில் சுமார் 90 சதவிகிதம்வரை பயன் படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இவை தவிர, துளைக் கிணறுகளை இறக்குதல், வடிகால் கிணறுகளை இறக்குதல் போன்றவற்றிற்கு அரசாங்கம் கடன், மானியம் போன்றவற்றை விவசாயி களுக்கு அளிக்கிறது.

மண்வளப் பாதுகாப்பு, உயர் வித்துக்கள், ரசாயன உரம், இயற்கை உரம், பயிர்ப் பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் போதிய கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

### நல்ல நம்பிக்கை

இவ்விதமான பலவகை உற்பத்தித் திட்டங்களி னாலும் நாம் பட்ட பாடு விழலுக்கு இறைத்த நீராக வில்லை. முதல் திட்ட காலத்தில் 6 லட்சம் டன்கள்

அதிக உற்பத்தி செய்யப்பட்டது. மூன்ருவது திட்ட காலத்தில் 17 லட்சம் டன்கள் கூடுதலாக உற்பத்தி செய்ய (அதாவது 70 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய) லட்சிய அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

வருங்காலத்தில் இன்னும் முனைப்பாகவும், முன்னேற்றப் பாதையிலும் வேளாண்மை செய்யப் படும். அதனுல் உற்பத்தியும் அதிகரிக்கும். எனவே எதிர்காலத்தைப் பற்றி நாம் நல்ல நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

## வெற்றி நடை

தொழில் துறையில் தமிழ் நாடு வெற்றி நடைபோடு கிறது. இவ்வளவும் சுதந்திரத்திற்குப்பின் ஏற்பட்ட அபிவிருத்தி ஆகும். பெரிய — சிறுரக — கிராமக் குடிசைத் தொழில்கள் ஆகிய அனைத்துக்கும் ஆக்கம் தருவதே அரசாங்கத்தின் தொழில் கொள்கை. பொதுத் துறையில் பெரிய முக்கிய தொழில்கள் ஏற்படுவ தற்குப் பாடுபடுவதுடன் தனியார் துறையின் கீழ் பெரிய தொழில்கள் நிர்மாணிக்கப்படுவதையும் அரசாங்கம் ஊக்குவிக்கிறது. வளர்ந்துவிட்ட தொழில் களை மேலும் வளர்த்துக்கொண்டு, புதிய புதிய தொழில்களையும் உருவாக்கிக்கொண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சித் துறையில் முன்னேறுகிறது.

சுமார் பதினறு ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ் நாட்டில் பெரிய, நடுத்தரத்தொழில்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இருந்தன. கிராமக் குடிசைத் தொழில்கள் அறவே வளர்ச்சி குன்றி இருந்தன. சென்னை, மதுரை, கோவை போன்ற முக்கிய நகரங் களில்மட்டுமே தொழில் வளர்ச்சி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அன்னிய ஆதிக்கத்தின் கீழ் நம்



நாடு இருந்ததால் வெளி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளுக்கு இது விற்பனைச் சந்தையாக இருந்ததே தவிர இங்கேயே அந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய அன்னிய ஆட்சி முன் வரவில்லை.

## முன்னேற்றப் பெருமிதம்

நாடு விடுதலை அடைந்து ஆட்சிப் பொறுப்பு நம் கைக்கு வந்ததும் எங்கெங்கு இயற்கை வசதிகள் உள்ளன; அவற்றை எப்படி எல்லாம் பயன்படுத்த லாம் என்றெல்லாம் கணக்கிடப்பட்டுத் திட்டமிடப் பட்டது. இதன் பலனுகப் பயனற்று, வெறிச்சோடிக் கிடந்த தரிசு நிலங்களில் எல்லாம் கம்பீரமான தொழிற்சாலைக் கட்டிடங்கள் உருவாயின. உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்புவது போல ஆலைச் சங்குகள் அலறுவதை இன்று கேட்கிறோம். பம்பாய், வங்காளம் ஆகியவைகளோடு ஒப்பிடத்தக்க அள வுக்குத் தமிழகம் இன்று தொழில் துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதைக் கண்டு பெருமிதம் அடையலாம்.

ஒரு நாட்டில் பெரும் அளவுக்கு நிலக்கரி கிடைப் பது தங்கத்திற்குச் சமானம் என்பார்கள். அந்த அடிப்படையில் தென்னுற்காடு மாவட்டம் நெய்வேலி யில் மண்ணுக்கடியில் பொன்னுக்குச் சமானமான பழுப்பு நிலக்கரி சுமார் 200 கோடி டன் புதைந்து கிடந்ததை ஆராய்ச்சி மூலம் அறிந்தோம். இதனைத் தோண்டி எடுப்பதன் மூலம் பெரிய அளவில் தொழில் களைப் பெருக்க முடியும் என்பதும் கண்டுபிடிக்கப் பட்டது. இந்தத் திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை சுமார் 100 கோடி ரூபாய் ஆகும். நிலக்கரி

தோண்டி எடுப்பதுடன் நெய்வேலியில் அனல் மின்சார நிலையம், ரசாயன உரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவையும், இதர உப-தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## தெய்வப் புலவரின் வாக்கு

இதைப் போலவே பெரியதொரு தொழிற்சாலை தான் பெரம்பூர் ரெயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை ஆகும். கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுத்துள்ள பிரம்மாண்டமான தொழிற்சாலை இது. இவை தவிர தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சிமெண்ட் தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டு வருவது கண்கூடு.

"ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்" என்று அன்று பாடினார் அமரகவி பாரதியார். அந்தத் தெய்வப் புலவரின் வாக்குப் பலித்ததை இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். ராணுவத் தேவையான "டாங்கி" தொழிற்சாலை ஆவடியில் அமைகிறது. இதேபோல கொதிகலன் தொழிற்சாலையும் திருச்சியில் அமைகிறது. இவை எல்லாம் ஆயுதத் தொழிற்சாலைகள். ஈரோட்டுக்கருகில் காகிதத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு தரமான காகிதமும் தயாரிக்கப்படுகிறது.

இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும், சேலத்து இரும்புத் தாதுவையும் கொண்டு சேலம் இரும்புத் தொழிற்சாலை அமையப்போகிறது.



அம்பத்தூர், ஆவடி, திருவொற்றியூர், வண்டலூர் போன்ற இடங்களில் வெறிச்சோடி இருந்த வனாந்திரங்களில் இன்று வனப்புமிக்க தொழிற்கூடங்களைக் காண்பதே தொழில் வளர்ச்சிக்கு ஒரு தக்க சான்றாகும்.

## பள்ளிகள் ஏராளம்

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் கடந்த பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் கல்வியைப் பரப்புவதற்காக எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள், திறக்கப்பட்ட பள்ளிகள் ஏராளம்.

மதிய உணவுத்திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம், சீருடைவழங்கும் திட்டம்போன்ற புரட்சிகரமான திட்டங்களை தமிழக அரசாங்கம் அமுல் செய்ததை நம்முடைய நேருஜி பலமுறை பாராட்டியதோடு, மற்ற மாநிலங்கள் இதனைப் பின்பற்ற வேண்டும் என்று அடிக்கடி சொல்லி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி, மதிய உணவு, பள்ளிச் சீரமைப்பு, சீருடை வழங்குதல் போன்ற திட்டங்கள் உண்மையிலேயே வசதி அற்ற ஏராளமான ஏழைப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவிக்க உதவி உள்ளன. சமுதாயத்திலே உயர்ந்த நிலையில் வைத்துக் கவுரவிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களின் நிலையை உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## படிக்கும் ஆர்வம்

முன்பெல்லாம் கல்லூரிகளில் கிராமப் பகுதி மாணவர்களைக் காண்பது அரிது. இப்போது கிராமப் பகுதி மாணவர்களும் ஆர்வத்தோடு படிக்கும் நிலை

யைக் காண்கிறோம். விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டு வரும் இக்காலத்தில் வெறும் எட்டுப் படிப்புடன் இல்லாமல் தொழில்களைக் கற்பிக்கும் கல்விக் கூடங்களும் இருக்கவேண்டும் என்பதற்காக தொழிற் கல்வி அபிவிருத்தி விஷயத்திலும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பெண்களும் தங்களால் இயன்ற தொழில்களைக் கற்றுக்கொள்வதற்காக அவர்களுக்கென்று தனி "பாலிடெக்னிக்குகள்" (தொழிற் கல்விக்கூடங்கள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் அமுல் செய்யப்பட்ட புரட்சிகரமான திட்டங்களின் விளைவாக இன்று ஆண்டு தோறும் பல புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க வேண்டிய அளவுக்குக் கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

### கோடி நன்மை

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பார்கள். அதைப்போல செய்யும் தொழிலையும் பலர்கூடி, கூட்டுறவு அமைப்பில் நடத்துவது பயன் தரத்தக்கது என்பதை அரசாங்கம் உணர்ந்து, கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துவந்துள்ளது. நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் தொழிற்சாலைகள் போன்ற, பெரிய தொழில்களை மட்டும் அல்லாது நியாய விலைக்கு மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களை விற்பனை செய்யும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்வரை எல்லாத் துறையிலும் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் பரவியுள்ளது.



### மின்சாரத்தில் முன்னணி

மின்சார விஸ்தரிப்பு வினியோகத் துறையிலும் தமிழகம் இன்று முன்னணியில் நிற்பது மட்டுமல்ல; நமது அண்டை மாநிலமான கேரளாவுக்கு மின்சாரம் கொடுக்கிறோம். மாநில ரீதியாகப் பார்த்தால் பெரும்பாலான கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது, தமிழகத்தில்தான். இன்று அந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டதால் நாளை அல்லது மறுநாள், அங்கு, அந்தக் கிராம மக்கள் சேர்ந்து ஏதேனும் சிறு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். தொழில்கள் வளரவும், வேலைவாய்ப்புப் பெருகவும் இது பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

மின்சார விஸ்தரிப்பு வசதியைப் போலவே சிறந்த நெடுஞ்சாலைகள், சாலைப் போக்குவரத்து வசதிகள் பிற மாநிலங்களில் இல்லை. மொத்தத்தில் கடந்த 16 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டு ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படலாம். இருந்தாலும் இனியும் நாம் செய்யவேண்டியது நிரம்ப உள்ளது.

### வேறு தொழிலுக்குப் போவதேன்?

மேலே சொன்ன அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியதால் தமிழகத்தில் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் அகன்று விட்டதாகச் சொல்ல முடியுமா என்றால், அறவே அகன்றுவிட்டதாகச் சொல்லமாட்டேன். ஆனால் விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது இல்லை என்பதுதான் இன்றைய நிலை.

இரண்டரை ரூபாய், மூன்று ரூபாய் என்று கூலி கொடுத்தாலும் விவசாயத் தொழிலாளி கிடைப்பது

V2,11
N64



இல்லை என்பதை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பலர் என்னிடம் கூறி இருக்கிறார்கள். நானும் விசாரித்துத் தெரிந்துகொண்டேன்.

இதற்கு என்ன அர்த்தம்? விவசாயத் தொழிலில் கிடைக்கும் கூலியைவிட அதிகமாக வேறு தொழிற்சாலையில் கிடைப்பதால்தான் அவர்கள் விவசாயத் தொழிலை விட்டு விட்டு வேறு தொழிலுக்குப் போகிறார்கள் என்றுதானே பொருள்? படித்தவர்களிடையே ஓரளவு வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கலாம். அதனைப் போக்கவும் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

**அனாதைக்கு உதவி**

வறுமையைப் பொறுத்தவரையில், பெரிய குடும்பம், வருமானம் போதாமை போன்ற காரணங்களால் குடும்பங்களில் வறுமை அல்லது ஏழ்மை நிலை இருக்கலாம். ஆனால் வறுமை காரணமாகப் பட்டினியால் செத்தனர் என்ற நிலை தமிழகத்தில் இல்லை. ஆதரவற்ற அனாதைகளுக்குக்கூட உதவக்கூடிய புரட்சிகரமான சமூக திட்டமான வயோதிகர் பென்ஷன் திட்டம் தாராளமாக அமுல் நடத்தப்படுவது தமிழ்நாட்டில்தான்.

பல்வகையிலும் வளர்ந்துவரும் தமிழகம், மேலும் வளம் பெற அனைவரும் தொடர்ந்து பாடுபடுவோமாக.

———

108746